
கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

ALKI ● 26.09.2010 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்



வருத்தப்படுகிறார் ரஜினி?



ஸ்பெஷல் பக்கங்கள்



ஆயிரம் ஆண்டு அற்புதம்!

வெளிச்சத்துக்கு வந்த கிசுகிசு!

அன்பார்ந்த வாடிக்கையாளருக்கு சம்பாவின் மனம் கனிந்த நன்றி!

21ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில்



CHAMPA

உங்களுக்காக...


சம்பாவின் புதிய வரவுகள்

'கிராண்ட் லுக்'
ஜரிகை வேலைப்பாடுடன்,
வண்ணமயமான
புடவைகளின் ஆலயம்
சம்பா!

Cotton Brocade புடவைகள்
மூங்கில் புடவைகள் / சம்பாவின்
கோர்வை காட்டன் புடவைகள்
காலேஜ் மங்கையருக்கேற்ப பிரிண்டட்
சுடிதார் செட் மற்றும் புடவைகள்

கோடை காலத்திற்கேற்ப
கோட்டா புடவைகள்

திருமணம் போன்ற எல்லா சுபகாரியங்களுக்கும் நாள் முழுவதும் சம்பாவின் பட்டோ என்று எல்லோருக்கும் வியக்கும் காட்டன் புடவைகளை அணிந்து கொண்டாடுங்கள்.



10% Discount on 27.09.10 till Dewail

*Price range Rs. 600 upwards for Sarees and Salwar sets

Timings : 11 a.m to 1 p.m. and 3 p.m. to 8 p.m | Sunday Holiday | Visa, Master & BOB Cards Accepted

5, 3rd Street, Abiramapuram, Chennai - 600 018. Tel : 2499 6907

SHIVAA

We never know Harvard and MIT would be part of our acads here !

I spell MERIT this way S-A-S-T-R-A

I enjoy Wi-fi @ 150mbps

Top clan Infrastructure makes SASTRA lonely at the Top!



SASTRA UNIVERSITY

Shanmugha Arts, Science, Technology & Research Academy

(A University u/s 3 of the UGC Act, 1956)

Thanjavur - 613 401, Tamil Nadu, INDIA Phone : 04362-264101-108 e-Mail : admissions@sastra.edu

www.sastra.edu

I enjoy multiple career options !

No one understands students as SASTRA does !

Bridging Diversities

I help make college a better place. I'm a SCOS-Student Citizen of SASTRA



Why should SASTRA be your destination ?

- Merit based transparent admission procedure
- Re-accredited by NAAC with 'A' Grade
- Qualified, dedicated and experienced teaching faculty
- MoUs with renowned Universities & Industries
- State of the art infrastructure facilities congenial for high quality education
- Excellent placement opportunities - over 1200 students (2010 batch) placed in reputed firms
- Merit based scholarships to students & encouragement for co-curricular and extra-curricular activities
- Various recognitions from Govt. of India like:
  - Scientific & Industrial Research Organisation
  - TIFAC-CORE in Advanced Computing & Information Processing
  - Centre for Advanced Research in Indian Systems of Medicine
  - National Mechatronics Facility
  - Center for Nanotechnology & Advanced Biomaterials
  - National Center for Heavy Metal Toxicity Studies
- Choice based credit system and semester abroad programme offering flexibility to students in the B. Tech and M. Tech degree courses
- Optional Accelerated Course Registration System (ACRS) to complete B. Tech course-work in 7 semesters. The entire 8th semester is available for internships in premier organisations.
- Collaborative Semester abroad programme for B. Tech students at - Harvard / MIT, Georgia Tech, University of Wisconsin at Madison (USA), University of Leicester (UK) Tokyo City University (Japan), Swiss German University (Germany), National University of Singapore, University of Windsor (Canada), Deakin University (Australia), etc. A stipend of US $ 200/- per month and round trip air ticket for selected semester abroad students
- Maximum number of Indian Academy of Sciences fellowships to B. Tech. students in the last two years.
- Merit-based selection for M. Tech. programmes based on qualifying UG / PG degree performance
- Mutual equivalence of SASTRA's M. Tech with Anna University's M.Tech. Programmes
- Stipend for GATE qualified candidates admitted to M. Tech. / M. pharm. programmes
- Over 40 funded on-campus R & D Projects opening up opportunities for quality Ph. D. study
- Excellent hostel and other support facilities like 150 Mbps Internet, Wi-Fi, Gymnasium, Indoor Stadium etc.

I experience the best of academics and industry !

Over 1200 of us(2010 batch) with job offers already !

" No SASTRA. No Fun Know SASTRA. Know Fun"

I belong to a fraternity that respects my merit




THINK MERIT • THINK TRANSPARENCY • THINK SASTRA

“ஆமா, நான் நயன்தாராவைக் காதலிக்கிறேன். நாங்க ரெண்டு பேரும் கல்யாணம் செய்துக்கப் போறோம். அது எங்கள் இருவர் சம்பந்தப்பட்ட விஷயம். பத்திரிகைகளுக்கோ மற்ற ஊடகங்களுக்கோ சொல்லவேண்டிய அவசியம் இல்லை,'' இப்படிப் பளிச்சென்று போட்டு உடைத்தவர் பிரபுதேவா.

அந்தா இந்தா என்று இழுத்துக்கொண்டு இருந்த ஒரு வதந்தி கடைசியாக முடிவுக்கு வந்திருக்கிறது. பிரபுதேவாவும் நயன்தாராவும் காதலிக்கிறார்கள், சேர்ந்து வாழுகிறார்கள், சேர்ந்து பறக்கிறார்கள், டிசம்பரில் கல்யாணம், வெளிச்ச நடிகர் உதவி, நயன்தாரா ஆங்கில





* பிரபு தேவா

எழுத்து 'பி' யைக் கையில் பச்சை குத்திக் கொண்டு இருக்கிறார் என்று ஊரெல்லாம் காதல் வாசனை பூத்து மலர்ந்தது. ஆனால், சம்பந்தப்பட்ட இருவருமே வாயைத் திறக்கவில்லை. கடைசியாக, சிஃபி டாட் காம் இணையதளத்துக்கு பிரபுதேவா பேட்டி அளிக்கும்போது, மர்ம முடிச்சை அவிழ்த்தார்.

அதைவிட முக்கியம், நயன்தாராவைப் பற்றி நெக்குருகிப் போனார் பிரபுதேவா. ''என்னை முழுமையாக மாற்றியவர் நயன். இதற்கு முன்னால் நான் கோபக்காரனாக இருந்தேன். இப்போது நான் ரொம்பவும் மென்மையாகிவிட்டதாக என் அசிஸ்டெண்டுகள் சொல்கிறார்கள். நயனை மாதிரி வலுவான நபரைப் பார்ப்பது கஷ்டம். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் எப்படிக் காதலிப்பது என்பதை நயனிடம் இருந்துதான் தெரிந்துகொண்டேன். அதேபோல், என் பழக்கவழக்கங்களில் நிறைய மாறுதலைக் கொண்டு வந்தவர் நயன். அவரின் ஒவ்வொரு விஷயமும் அவ்வளவு அழகானவை. காதலிக்கத் தக்கவை.'' பாஸ் என்கிற பாஸ்கரன் படம்தான் நயன்தாரா தமிழில் நடிக்கும் கடைசிப் படமாக இருக்குமாம். அதன் பிறகு இரண்டு சிட்டுக்குருவிகளும் செட்டிலாக இருக்கிறார்களாம். டிசம்பரில் திருமணம் இருக்கலாம் என்றும் கோலிவுட் பட்சி செய்தி சொல்கிறது!

- துளசி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**
பொறுப்பாசிரியர் :
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்
தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**
ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

● ஜி.மாரியப்பன், சின்னமனூர்.

? இயக்குநர் சீமான் இப்போது சிறையில் உள்ளாரா? சினிமாவில் நடித்துக் கொண்டிருக்கிறாரா?

! சிறையில் தமிழர் வரலாறு பற்றிய நூல் எழுதிக்கொண்டிருப்பதாகத் தகவல். அது புதினமாக இன்றி உண்மை வரலாறாகவே இருக்குமா? அரசுக்குப் புதிய பிரச்னையையும் இவருக்கு புதிய தண்டனையையும் பெற்றுத் தராமல் இருக்குமா என்பதுதான் இன்றைய கேள்வி; நாளைய கவலை!

● லீலா ராம், தக்கலை.

? ஜனரஞ்சகமான பொய் எது?

! அடுத்து வரும் நித்திலா செல்வராஜின் கேள்வியில் அது அடங்கியிருக்கிறது!

● நித்திலா செல்வராஜ், கோயம்புத்தூர்.

"கூவத்தில் நம் வீட்டுக் குழந்தைகள் என்று குளித்து விளையாடுகின்றனவோ, அன்றைக்குத்தான் நான் உண்மையான மகிழ்ச்சி அடைவேன்," என்று முதல்வர் கூறியுள்ளாரே?

● எம்.சரவணன், மின்னல்.

? எனது அமைச்சரவையில் எந்த அமைச்சரும் எந்தத் தவறும் செய்யவில்லை என பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் பேசிய பிரதமர், ஸ்பெக்ட்ரம் பிரச்னை (அமைச்சர் ராஜா) விசுவரூபம் எடுத்ததை எப்படி மறந்தார்?

! அப்படி பேசியிருந்தால் அது தவறுதான். ஸ்பெக்ட்ரம் ஊழல் விசுவரூபம் எடுத்துள்ளபோது, ராஜா அமைச்சரவையில் நீடிப்பது ஒரு புறமிருக்கட்டும்; ஊழல்கள் சுட்டிக்காட்டப்பட்டு ஒரு சில அமைச்சர்கள் பதவி விலகியும் இருக்கிறார்களே!

● சி.என்.ரமாதேவி, சென்னை-70.

? வைரமுத்து தமது பேரனுக்கு 'ஹைகூ' என்று பெயரிட்டிருப்பது, தமிழ் மீது அவர் வைத்துள்ள பற்றைச் சந்தேகப்படவைக்கிறதே?

! மகனும், மருமகளும் தங்கள் குழந்தைக்கு ஹைகூ என்று ஜப்பானிய பெயர் சூட்ட விரும்பியிருந்தால் வைரமுத்து எவ்வாறு குறுக்கிட முடியும்?! அவரே அப்பெயரைச் சூட்டியிருந்தாலும் அதன் நூதனத்தை ரசித்து மகிழுங்களேன். குறுங்கவிதையாக தமது குட்டிப்பேரனைக் கருதுகிறார். கவிதை என்பது எந்த மொழியிலும் அழகுதானே!



● எஸ்.ஜெயகாந்தன், புன்செய்புளியம்பட்டி.

? இதயம் முரளியின் திடீர் மறைவு குறித்து...?

! முரளி, சுவர்ணலதா (பின்னணிப் பாடகி) என அடுத்தடுத்து இரண்டு திறமை

நீங்கள் கேட்டவை தராசு

மிக்க இளம் கலைஞர்களின் மரணத்தால் களையிழந்து கிடக்கிறது கோலிவுட். திரையுலகின் எதிர்காலச் சிறப்புக்குக் கணிசமான பின்னடைவு.

● டி.முருகேசன், திருவாரூர்.

? தி.மு.க.வின் சாதனையாக எதை நினைக்கிறீர்கள்...?

! கலைஞர் கருணாநிதியை!

● வே. முருகேசன், சென்னை-88.

? ஜார்கண்ட் மாநிலத்தில் சிபு ஸோரன் பா.ஜ.க.வுக்கு ஆட்சியை விட்டுக் கொடுத்து விட்டாரே?

! அவர் ஒன்றும் சுலபத்தில் விட்டுக் கொடுக்கக் கூடியவர் அல்ல... படிந்த பேரத்தின் (ரகசிய) கூறுகள் பிடிக்காமல் தான் பல பா.ஜ.க. தலைவர்கள் பதவிப்

கிடைக்கச் செய்வதை யாருமே குறை கூற மாட்டார்கள்; ஆனால் அதே சமச்சீர் விலையில் மக்கள் எல்லோருக்கும் எல்லாப் பொருள்களும் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதைத்தான் கோரிக்கையாக வைப்பார்கள்! முடியுமா முதல்வரால்....?

● எஸ்.கதிரேசன், பேரணாம்பட்டு.

? அண்ணா பிறந்த நாளில் ஆயுள் கைதிகளை விடுதலை செய்யக்கூடாது என்று சு.சுவாமி சொல்வது சரியா?

! ரொம்ப சரி. சில கைதிகள் நன்நடத்தையால் தண்டனை குறைக்கப் பெறுவது உண்டு. அதற்கெல்லாம் விதிமுறைகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றாமல் சகட்டு மேனிக்கு விடுதலை என்பது ரொம்பத் தப்பு. அது சமூகத்தை பாதிக்கும்; நீதித்துறையை பலவீனப்படுத்தும்.

என்ன செய்கிறார்?

பிரமாண நிகழ்ச்சிக்கு வரவில்லை!

● லெ.நா.சிவகுமார், சென்னை-33. ❑

? ராணுவ வீரர்களுக்கான கேன்டீன்போல் போலீசாருக்கும் குறைந்த விலையில் பொருட்கள் வாங்க தனி கேன்டீன் வசதி செய்து தரப் படும் என்று முதல்வர் அறிவித்திருப்பது பற்றி...?

! ராணுவத்தினர் போல போலீஸாருக்கும் சலுகை விலையில் பொருள்கள்

❋ மறைக்கும் தவறு!



● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்.

? "தி.மு.க - காங்கிரஸ் நல்லுறவு நீடிக்கிறது. வரும் தேர்தலில் கூட்டணி மாற்றம் இல்லை" என்கிறாரே கருணாநிதி?

! தி.மு.க - காங்கிரஸ் தலைமைப் பீடங்களுக்கிடையே நல்லுறவு நீடிக்கலாம். செயல் வீரர்களுக்கிடையே பகையுணர்வுதான் பெருகி வருகிறது. மேல் மட்ட முடிவுகள் கீழே உள்ளவர் மீது திணிக்கப்படும்

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், KAGQA என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

போது குமுறல்கள் இருக்கவே செய்யும்.

● ஜி.மகாலிங்கம், காவல்காரபாளையம்.

? அகிலன், ஜெயகாந்தனைத் தவிர தமிழில் வேறு யாருக்கும் ஞானபீட விருது வழங்கப்பட வில்லையே?

! இந்திரா பார்த்தசாரதி, அசோகமித்திரன் போன்ற சாதனையாளர்கள் நிறைந்தது தமிழ் இலக்கியம். தேர்வுக் குழுவினரின் பார்வையில் இவர்கள் படாவிட்டால் என்ன, வாசகர்களின் கவனத்தில் எப்போதும் இருக்கிறார்களே. அதுதான் மிகப் பெரிய விருது.


✱ கலையிழந்த ...
✱ ...கோலிவுட்




✱ வாசகர் பீட ...
✱ ...விருதுகள்!
✱ புதுமைப் பெயர்!

● என்.பாலகிருஷ்ணன், மதுரை.

? காங்கிரஸ் இந்தியாவை ஆளும்போது தமிழகத்தை ஆளமுடியாதா என்று ப.சிதம்பரம் கேட்கிறாரே?

! காங்கிரஸ் இந்தியாவை ஆளவில்லை; யூ.பி.ஏ அரசுதான் ஆள்கிறது. அதே காரணத்தால்தான் தமிழகத்தை தி.மு.க.விடம் முழுமையாகப் பறிகொடுத்துவிட்டு நிற்கிறது. சிதம்பரத்தின் கேள்வி, ''ஆசையிருக்கு தாசில் பண்ண...'' என்ற சொல்வழக்கைத் தான் நினைவூட்டுகிறது.

● பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? ''கலை, அரசியல் இரண்டையும் வெவ்வேறாகப் பார்க்காமல், கலையை எந்த அளவுக்கு அரசியலுக்குப் பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தி, அதன் காரணமாக அரசியலில் பல வெற்றிகளைப் பெறுவதற்கு, என் இயக்கமும் நானும் காரணமாக இருந்துள்ளோம்'' என்று முதல்வர் மு.க. கூறியுள்ளது குறித்து....?

! அரசியலையே நற்கலையாக்கி முன்னேற்றம் கண்டிருந்தால் மகிழலாம். ஆனால் அரசியலை நாடகமாக்கி, கவர்ச்சி வசனங்கள் மூலம் முன்னேற்றக் கதை எழுதினால் வரவேற்கவா முடியும்?

● சி.கார்த்திகேயன், சாத்தூர்.

? சினிமா துறையில் நாங்களெல்லாம் கதாநாயகர்கள் அல்ல; உண்மையான கதாநாயகர்கள், எங்களை அழகுபடுத்தி மக்களுக்குக் காட்டும் தொழிலாளர்கள்தான் என குஷ்பூ பேசியுள்ளாரே?

! நேர்மையாகத்தான் பேசி யிருக்கிறார். ஆனால், அழகு மட்டுமே கதாநாயகர்களை உருவாக்கிவிடுவதில்லை. நடிப் பழகு தேவை. அது இயற்கையாகவே ஓரளவேனும் இருந்தால்தான் இயக்குநர் அதை மெருகேற்றிப் பிரகாசிக்கச் செய்ய முடியும்.

● ஜி.சுந்தராஜன், சென்னை-42 ✱

? முதலமைச்சரின் பேரன் தயாநிதி அழகிரி தயாரித்திருக்கும் தமிழ்ப்படத்துக்கு ' 'வ' குவார்ட்டர் கட்டிங்' எனப் பெயரிடப்பட்டுள்ளதே. இதற்குக் கேளிக்கை வரி விலக்கு கிடைக்குமா?

! வரி விலக்கு கிடக்கட்டும். இத்தனை ஆபாசமான மதுவாடை வீசும் தலைப்புக்காக அபராதம் அல்லவா விதிக்க வேண்டும்! அதற்கு சட்டத்தில் இடம் இல்லாமல் போகலாம்; ஆனால் பாசம் கண்களை மறைக்கவிடலாமா?

❑ ரூ.150/ பரிசு பெறுபவர்:
லெ.நா.சிவகுமார், சென்னை - 33.

✱ ரூ. 75/ பரிசு பெறுபவர்:
ஜி. சுந்தரராஜன், சென்னை - 42.

ஐந்தாண்டுகள் முடிந்து ஆறாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது தே.மு.தி.க. சட்டமன்றத் தேர்தல் நெருங்கிவரும் இந்தச் சமயத்தில் விஜயகாந்த் என்ன செய்யப் போகிறார் என்பது சஸ்பென்ஸாக இருக்கிறது. தே.மு.தி.க. அவைத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரனைச் சந்தித்தோம்...

''கட்சி தொடங்கியபோது தொண்டர்கள் எப்படி உற்சாகத்துடனும், துடிப்புடனும் செயல்பட்டார்களோ அப்படியேதான் இப்போதும் இருக்கிறார்கள். இடையில் மாற்றுக் கட்சிகளிலிருந்து பல பிரமுகர்கள் வந்தார்கள், போனார்கள் ஒரு பாதிப்பும் கிடையாது. இடைத்தேர்தல்களில் பணமும் அதிகாரமும் விளையாடியதால் ஆளும் கட்சி வென்றது. அவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் தே.மு.தி.க. தனது வாக்கு வங்கியை உயர்த்திக்கொண்டுள்ளது. 2006-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் எட்டரை சதவிகிதம் வாக்குகள் பெற்றோம். 2009-ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பதினொரு சதவிகித வாக்குகள் வாங்கினோம். இன்றுள்ள நிலை என்னவென்றால் வரும் சட்டமன்றத் தேர்தலில் மக்கள் முன் நல்ல மாற்றுச் சக்தியாக தே.மு.தி.க மட்டுமே இருக்கும்.''

விஜயகாந்த் கடவுளோடும் மக்களோடும் தான் கூட்டணி என்றார். இனி எப்படி?

''இந்த முறை நிச்சயமாக நாங்கள் கூட்டணி அமைப்போம். அது யாருடன் என்பதைத் தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர் முடிவு செய்வோம்.''

தி.மு.க., அ.தி.மு.க என்ற இரண்டுமே ஊழல் என்கிறீர்கள். அப்போது எந்த அணியோடு கூட்டணி?

''இன்று தமிழகத்தில் ஆக்டோபஸ் போல அனைத்துத் துறைகளிலும் கருணாநிதியின் குடும்ப ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது. மக்கள் வெறுத்துப் போயிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியை மாற்றியே தீர வேண்டும் என்ற வெறி மக்கள் மனத்தில் உள்ளோட்டமாக ஓடிக்கொண்டிருக்கிறது. கைப்பெட்டியோடு திருவாரூரிலிருந்து வந்த கருணாநிதியின் குடும்பம், இன்று ஆசியாவிலேயே பெரிய பணக்காரக் குடும்பமாக இருக்கிறது. மக்கள் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதேபோல் அ.தி.மு.க. இரண்டுமுறை ஆட்சியில் இருந்து ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான கட்சி. இரண்டு கட்சிகளுக்கும் ஊழல் விகிதாச்சாரம்தான் வேறுபடும்.''

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் தே.மு.தி.க. காங்கிரஸோடு மட்டும் உடன்பாடு கண்டு தேர்தலைச் சந்திக்கும் என்றும் பேச்சு அடிபடுகிறதே!



''இது மறைமுகமாக தி.மு.க.வுக்கு உதவுவது போலாகாதா? தி.மு.க.வை இந்தத் தேர்தலில் ஒழித்துக் கட்டுவதுதான் எங்கள் இலட்சியம். நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ

தமிழ்நாட்டில் காங்கிரஸ் பிளவுபடும்!

- பண்ருட்டியார் கிளப்பும் பரபரப்பு!

தி.மு.க ஆட்சிக்கு வர எந்த வகையிலும் உதவ மாட்டோம்.''

அப்போது அ.தி.மு.க.வுடன் கூட்டணி வாய்ப்பு உண்டா?

''நீங்கள் ஏன் அப்படி எடுத்துக் கொள்கிறீர்கள். எங்கள் தலைமையில் தனி அணி அமையக் கூடாதா?''

40,50 சீட்டுகளுக்காக விலை போக மாட்டேன் என்கிறாரே விஜய காந்த்?

''எங்கள் நோக்கம், தி.மு.க., அ.தி.மு.க. வைத் தவிர்த்து வலிமையான கூட்டணி அமைத்து நாங்கள் ஆட்சிக்கு வர முயற்சி செய்வதுதான். அது சாத்தியப்படவில்லையென்றால் 'யார் ஆட்சி செய்ய வேண்டும்' என்று தீர்மானிக்கும் சக்தியாவது எங்களுக்கு இருக்க வேண்டும். அப்படியிருக்கும் போது 30, 40 இடங்களை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்?

தி.மு.க.வை விட்டு காங்கிரஸ் பிரிந்து வருமா?

''தில்லியில் இருக்கும் காங்கிரஸ் தலைமை, தி.மு.க.வை ஒரு நம்பிக்கையான கூட்டணிக் கட்சியாக நினைக்கிறது. நாடு முழுவதும் காங்கிரஸுக்குள்ள பல தலைவலி பிரச்னைகளுக்கிடையே தி.மு.க.வால் அதற்கு எந்தப் பிரச்னையும் இல்லை. அவர்கள் சொன்னதை கருணாநிதி செய்கிறார். கருணாநிதியின் குடும்ப நன்மைக்கு ஏற்ப மத்திய அரசிலும் காரியம் செய்து கொடுக்கப்படுகிறது. எனவே வரும் தேர்தலில் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி அப்படியே இருக்கும்.''

அப்படியென்றால் தே.மு.தி.க - காங்கிரஸ் கூட்டணிக்கு வாய்ப்பில்லையா?

''தமிழக காங்கிரஸில் பிரமுகர்களும், தொண்டர்களும் தி.மு.க.வுடன் கூட்டணியை விரும்பவில்லை என்பதே உண்மை. தலைமை அவர்கள் உணர்வைப் புரிந்துகொண்டு முடிவு எடுக்க வேண்டும். இல்லையேல் தமிழக காங்கிரஸ் பிளவுபட வாய்ப்பு உண்டு. எலெக்ஷன் சமயத்தில் எதுவும் நடக்கலாம்.''

பா.ம.க.வுடன் தே.மு.தி.க நெருங்குமா?

''பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் முன்பெல்லாம் எங்கள் கட்சியின் பெயரைச் சொன்னாலே எரிந்து விழுவார். ஆனால், நாங்கள் பா.ம.க.வையோ அல்லது விடுதலைச் சிறுத்தைகளையோ மேடைகளில் விமர்சித்ததில்லை. எங்கள் அட்டாக் என்றுமே ஆளும் கட்சியின் மீதுதான். ராமதாஸ் அரசியலில் நிரந்தர நண்பர் - பகைவர் இல்லையென்று சொல்லியிருக்கிறாரே!''

காங்கிரஸ் கட்சியின் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் இருக்கிறதே!

''நாங்கள் மாநிலக் கட்சி; வரப்போவது மாநில சட்டமன்றத் தேர்தல். இங்கே கடந்த 43 வருடங் களாக காங்கிரஸ் ஆட்சியில் இல்லை. பாராளு மன்றத் தேர்தலில் காங்கிரஸ் குறித்துப் பேசுவதே சரியாக இருக்கும்.''

ஜெயலலிதா - கருணாநிதி இருவருக்கும் நல்ல கூட்டம் கூடுகிறதே!

''திட்டமிட்டு, கோடிக்கணக்கில் செலவு செய்து கூட்டப்படும் கூட்டங்கள் அவை.''

- ப்ரியன்

அஞ்சலி



ஆர்.சூடாமணியும் மறைந்து விட்டார்!

'சூடாமணி இறந்துவிட்டார்' என்ற தகவலை முதலில் சொன்னவர் கதிர்பாரதி தான். அடுத்தடுத்து லதா ராமகிருஷ்ணன், திருப்பூர் கிருஷ்ணன், தேவிபாரதி என்று பல நண்பர்கள் ஃபோனில் தொடர்புகொண்டு சொன்னார்கள். நண்பர் வண்ணதாசன் எஸ்.எம்.எஸ். அனுப்பியிருந்தார்.

தி.ஜானகிராமன் இறந்த போதும் இப்படித்தான் தொலைபேசி மூலம் தகவல் வந்தது. ஜானகிராமனின் உடலையாவது பார்க்க முடிந்தது. ஆனால், சூடாமணியின் உடலைப் பார்க்க முடியவில்லை. கடைசித் தருணத்தில் தகவல் கிடைத்ததால் செல்ல முடியவில்லை. பல சமயங்களில் இப்படித் தான் ஆகிவிடுகிறது.

இன்றைய எழுத்துலகம் சூடாமணியை அனேகமாக மறந்தே போய்விட்டது. சுய தம்பட்டங்கள், படாடோபங்கள் இவற்றுக்கு மத்தியில் அவரை வாசகர்களும், எழுத்துல கமும் மறந்துபோனதில் ஆச்சரியமே இல்லை. ஏனென்றால், சூடாமணி என்ற மனுஷியும் சரி, அவரது எழுத்தும் சரி ஆர வாரங்களுக்கும், பரபரப்புகளுக்கும் அப்பாற் பட்டவை. அவர் இயல்பிலேயே சங்கோஜி. அவரது உரையாடலே பூ உதிர்வதுபோல்தான் இருக்கும். அதிர்ந்து பேசவே மாட்டார். வெள்ளையுடை அணிந்துதான் அவரைப் பார்த்திருக்கிறேன். மென்மை, சங்கோஜம் இவற்றையும் மீறி அவரிடம் வாழ்க்கை குறித்து அழுத்தமான கருத்துகளும் இருந்தன.

ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் அவர் நிறைய எழுதினார். என் பள்ளி நாட்களிலிருந்தே நான் சூடாமணியின் எழுத்தை வாசித்து வந்திருக்கிறேன். அவரது கதை சொல்லும் பாணியி லிருந்த எளிமையும், ஜீவனும் எல் லோரையும் வசீகரித்ததுபோல் என்னையும் வசீகரித்தன.

மாடர்னிஸம், போஸ்ட் மாடர்னிஸம் என்று என்னென்ன கோணங்கித்தன மெல்லாமோ, 'இலக்கிய உத்தி' என்ற பெயரில் வாசகர்களைப் பயமுறுத்துகிற காலம் இது. அவர் எழுதிய காலத்திலும் நவீனம், நவீனத்துவம் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த இலக்கியத் திருக்கூத்துகளுக்கு நடுவே மிக நுட்பமா

வண்ணநிலவன்

ணதும், சன்னமானதுமான மன உணர்வுகளை ஜீவன் ததும்ப எழுதியவர் சூடாமணி. அவரது 'நான்காவது ஆசிரமம்' என்ற சிறுகதை 'இலக்கியச் சிந்தனை'யில் அந்த ஆண்டின் மிகச் சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அந்தச் சிறுகதையைப் பல முறை திரும்பத் திரும்பப் படித்தேன். இன்றும் அக்கதை இன்றைய நவீனச் சிறுகதைகளுக்கெல்லாம் சவாலாக உள்ளது.

அவரது உடல்வாகு காரணமாக அவரால் அதிகமாக வெளியுலகில் தொடர்புகொள்ள முடியாது. ஆனால், நான் சூடாமணியை 1973-ல் முதல்முதலாகச் சந்தித்தபோதே, அப்போதுதான் மலர்ந்திருந்த பெண்ணியச் சிந்தனைகளைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார். அதைப் பற்றிய உறுதியான அபிப்பிராயங்களும் அவரிடமிருந்தன. தன்னை 'முற்போக்காளர்' என்று கூறிக் கொள்ளாத முற்போக்குவாதி அவர்.

நான் வேலைக்காக அலைந்துகொண்டிருந்தபோது, அந்நாளைய தினமணி கதிரில் ('சாவி' ஆசிரியராக இருந்த தினமணி கதிர்) என்னைச் சேர்த்துவிடுவதற்காக, கதிரில் பணிபுரிந்து வந்த, அபர்ண நாயுடு என்ற கண்ணனுக்கு சிபாரிசுக் கடிதம் எழுதித் தந்ததோடு, தொலைபேசியிலும் கண்ணனிடம் பேசினார். பலருக்கும் இதுபோல் அவர் தன்னாலியன்ற உதவிகளைச் செய்துள்ளார்.

அவருடைய அப்பா ராகவன் ஒரு ஐ.ஸி.எஸ் அதிகாரி. சூடாமணியின் சகோதரி ருக்மணி பார்த்தசாரதியும் ஒரு படைப்பாளியே. நான் சென்னைக்கு வந்த புதிதில் அடிக்கடி சூடாமணியைச் சென்று பார்த்துப் பேசிக் கொண்டிருந்துவிட்டு வருவேன். பின்னர் வேலைப்பளு, குடும்பம் இவற்றால் அவரைச் சந்திப்பது குறைந்துவிட்டது. எப்போது சென்றாலும் காஃபி கொடுத்து உபசரிப்பார். சில சமயங்களில் அவரது தந்தை ராகவனே காஃபி கொண்டுவந்து தருவார். அவரும் இறந்துவிட்டார். சகோதரி ருக்மணி பார்த்தசாரதியும் இறந்துவிட்டார். இப்போது சூடாமணியும் மறைந்துவிட்டார்.

மேஷம் கனவுகள் நிறைவேறும் வாரம். தேர்வில் நல்ல மதிப்பெண்கள் கிட்டும். திருமணப் பேச்சுவார்த்தைப் பலன் அளிக்கும். கடல் கடந்து செல்லும் வாய்ப்பு தேடி வரும். மனசஞ்சலம் தீரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி பெறும். தூர தேசத்திலிருந்து நல்ல தகவல் வரும். நண்பர், உறவினர்களால் நற்பலன் உண்டாகும். கணவன் - மனைவி உறவு மகிழ்ச்சியாக இருக்கும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். பொருளாதாரம் மேலோங்கும்.

ரிஷபம் தடைகள் விலகி சுபநிகழ்ச்சி கைகூடும். படிப்பில் இருந்து வந்த ஞாபக மறதி விலகும். கல்வியில் ஊக்கம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராகும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். குடும்ப வாழ்வில் வாக்குவாதம் செய்வது தவிர்க்கவும். விட்டுக் கொடுத்து அனுசரணையுடன் நடந்து கொள்வது நல்லது. எதிரிகள் விட்டு விலகுவார்கள். யாருக்கும் ஜாமீன் போடவேண்டாம். தூர தேசப் பயணம் வீட்டுக் கதவைத் தட்டும். மகான்களின் தரிசனம் கிட்டும்.

மிதுனம் வெளிநாடு செல்லும் யோகம் வந்து சேரும். மனக் கிலேசம் விலகும். பணக்கஷ்டம் இருக்காது. திருமணம் கை கூடும். குழந்தைகள் மூலம் மன சந்தோஷம் கிட்டும். படிப்பில் முன்னேற்றம் உண்டாகும். வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும். நல்லவர்கள் உதவி கிட்டும். வியாபாரத்தில் நல்ல லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். குடும்ப வாழ்வு மகிழ்ச்சிகரமாக இருக்கும். மனைவி வழி சொத்து வந்து சேரும்.

19.09.2010 முதல் 25.09.2010 வரை

தஞ்சை பரத்வாஜ்

கடகம் வீடு / மனை வாங்கச் சிறந்த தருணம். கல்வி வளம் மேலோங்கும். வழக்குச் சாதகமாக முடியும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் விலகும். பண வசதி பெருகும். உத்தியோகத்தில் இட மாற்றம் ஏற்படும். வியாபாரம் அபிவிருத்தி ஆகும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வாகன யோகம் ஏற்படும். வெளியூர் பயணம் தேடி வரும். மனப் பிரம்மை தீரும். மகான்களின் தரிசனம் கிட்டும். எதிரிகளின் தொல்லை இருக்காது.

சிம்மம் குழந்தைகள் இடம் மாறி போவார்கள். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். நெருங்கிய கூட்டாளிகள் பிரிந்து செல்வார்கள். மன பயம் விலகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். தரகு, கமிஷன் அடிப்படையில் பணம் வந்து சேரும். வாக்கு வன்மை, வித்தையில் பலிதம் உண்டாகும். புண்ணிய தலம் செல்வீர்கள். மகான்களின் தரிசனம் கிட்டும்.

கன்னி வீடு மாற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகும். மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் உஷார். படிப்பில் கவனம் செலுத்தவும். வழக்கு தாமதம் ஆகும். நீண்ட தூர பிரயாணம் செல்ல வேண்டி இருக்கும். உடல் உபாதைகள் படுத்தும். இல்லற வாழ்வில் விட்டுக்கொடுத்துச் செல்லவும். செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் மந்த நிலை இருக்கும். நிலுவைகள் வசூலாவதிலும் தாமதம் இருக்கும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

துலாம் பூமி மூலம் ஆதாயம் கிட்டும். சுபகாரியம் கைகூடும். குழந்தைகள் மூலம் மன சந்தோஷம் கிட்டும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப வாழ்வு மகிழ்ச்சியுடையதாக இருக்கும். பணப் பிரச்னைகள் இருக்காது. வராத நிலுவைகள் வந்து சேரும். உறவினர்கள் வருகை மனதுக்கு மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு புதிய வீட்டுக்கு போகும் பாக்கியம் உண்டாகும். வாகன சுகம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

விருச்சிகம் யாரிடமும் வாக்கு வாதம் தவிர்க்கவும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் ரொம்பவும் கவனமுடன் இருப்பது நல்லது. வழக்கு இழுபறி ஆகும். தொழில் வழியில் நல்ல ஆதாயம் கிட்டும். கூட்டாளிகள் விட்டு விலகிச் செல்ல நேரிடும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். வீட்டை கவனிக்க நேரம் இருக்காது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இல்லற வாழ்வில் அனுசரித்து நடந்து கொள்வது நல்லது.

தனுசு பண வருவாய் அதிகரிக்கும். எண்ணிய எண்ணம் யாவும் ஈடேறும். திடீர் பிரயாணம் தேடி வரும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். உறவினர்கள் மூலம் நற்பலன் கிட்டும். குழப்பம் விலகும். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். கல்வி வளம் மேலோங்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் கிட்டும். வழக்கு வெற்றி பெறும். சொத்து வழியில் பணம் வந்து சேரும்.


மகரம் கடன் சுமை விலகும். வெளியூரில் இருந்து நல்ல தகவல் வந்து சேரும். மனக் கிலேசம் விலகும். பணப் பிரச்னை இருக்காது. வழக்கு வெற்றி அளிக்கும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். மகான்களின் தரிசனம் கிட்டும். வழக்கு வெற்றி பெறும். கல்வி வளம் மேலோங்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். பூமி வாங்கும் யோகம் வந்து சேரும். நண்பர் விலகிச் செல்வார்கள். உறவினர்கள் மூலம் நன்மை உண்டாகும்.

கும்பம் வீடு மாற்றம் ஏற்படும். உடல் உபாதைகள் தொல்லையிலிருந்து சுகம் பெறுவீர்கள். பணப் பிரச்னை இருக்காது. சொத்து பாகப்பிரிவினை ஆகும். குலதெய்வ வழிபாடு செய்து முடிப்பீர்கள். குழந்தைகள் பற்றின கவலை நீங்கும். மன வருத்தம் நீங்கும். தொழில் துறையில் நல்ல லாபம் கிட்டும். புதிய தொழில் தொடங்க ஏற்ற காலம் இது. யாருக்கும் ஜாமீன் போடவேண்டாம். கணவன் - மனைவி உறவு மகிழ்ச்சியாக இருக்கும்.

மீனம் உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். ஏக காலத்தில் பல தொழில் செய்து சம்பாதிக்க ஏற்ற காலம் இது. உறவினர் வருகை நற்பலனை அளிக்கும். கல்வி வளம் மேலோங்கும். கடல் கடந்து செல்லும் யோகம் வந்து சேரும். கடன் தொல்லை தீரும். வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். தூரதேச அழைப்பு வந்து கதவைத் தட்டும். உறவினர்கள் மூலம் நன்மை உண்டாகும்.



கல்கி



2010 செப்டெம்பர் 26
விக்ருதி புரட்டாசி 10
மலர் : 69
இதழ் : 9


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

கற்றை கற்றையாக ஊழல்!

பொருளாதார நேர்மையைக் கண்காணிக்கும் சர்வதேச அமைப்பு Global Financial Integrity அதிர்ச்சி அளிக்கும் ஒரு புள்ளிவிவரத்தை வெளியிட்டிருக்கிறது; ஒன்பது ஆண்டுகளில் (2000-2008) இந்திய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சுமார் 125 பில்லியன் டாலர் முறைகேடான (லஞ்ச-ஊழல்) சம்பாத்தியத்தை அயல்நாடுகளில் பத்திரப்படுத்தியுள்ளனர்! தவிர, இங்கே ஆண்டு அனுபவிக்கும் பணமும் இருக்கும் என்பதால் மொத்த லஞ்சப் பணம் 125 பில்லியனைக் காட்டிலும் மிக அதிகம்! இத்தனைக்கிடையிலும் இந்தியாவில் ஏழை-பணக்காரருக்கிடையேயான இடைவெளி அதிகரித்துக் கொண்டே வருவதையும் இந்த அமைப்பு வெளியிட்டிருக்கிறது. இந்நிலை தொடர்ந்தால், இந்தியப் பொருளாதாரம் அதோகதி நிலைக்குச் சென்றுவிடும் என்பதால் இந்நிலைமையைச் சீர்செய்வது மிக அவசியமாகிறது.

ஆனால், லஞ்ச ஊழலை எதிர்ப்பதற்குப் பதில் அரசு அவற்றைப் பகிரங்கமாக ஆதரிக்கிறது! 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் குற்றம் சாட்டப்பெற்ற மத்திய அமைச்சர் அ.ராஜா, பதவியில் தொடர அனுமதிக்கப்படுகிறார். எதிர்க்காட்சியினரின் எதிர்ப்புக்குரல் அலட்சியம் செய்யப்படுகிறது. 'ராஜா பின்பற்றிய ஒதுக்கீடு முறை அரசினால் கொள்கை அளவில் ஏற்கப்பட்டதுதான்' என்று 'நியாயம்' கற்பிக்கப்படுகிறது. 'ஆனால், அரசுக்கு இதனால் 70,000 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதே?' என்று சுட்டிக்காட்டினால், அதற்





குப் பதில் இல்லை. 2 ஜி அலைக் கற்றை உரிமங்களை வாங்கிய இரு நிறுவனங்கள் டெலிகாம் நிறுவனங்களே அல்ல; உரிமங்களை உடனே கூடுதல் விலைக்கு விற்று அவை கொள்ளை லாபம் கண்டிருக்கின்றன. இந்த அநீதிக்கும் அரசிடமிருந்து தகுந்த விளக்கம் இல்லை. சி.பி.ஐ. நடத்திய விசாரணையை அரசு குழி தோண்டிப் புதைக்கவே முயற்சி செய்கிறது.

இப்போது ஒரு தொண்டு நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடரப்போக, அரசிடம் விளக்கம் கேட்டுள்ளது அந்நீதிமன்றம். அத்துடன் ராஜாவுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இதன் பிறகாவது, நியாயமாகப் பார்த்தால் ராஜா ராஜினாமா செய்ய முன்வர வேண்டும். அவர்தான் செய்யவில்லையெனில் பிரதமர் அவரது ராஜினாமாவைக் கோர வேண்டும். இன்னும் சொல்லப்போனால், பிரதமருக்கு அந்தச் சங்கடத்தைத் தராமல், தமது கட்சியைச் சேர்ந்த ராஜாவை ராஜினாமா செய்யும்படி தி.மு.க. தலைவரே உத்தரவிட்டிருக்க வேண்டும்.

ஆனால் இவை எதுவும் நடக்கவில்லை. பிரதமருக்குக் கூட்டணி கட்சியான தி.மு.க.வின் அதிருப்தியைச் சம்பாதித்துக்கொள்ளக்கூடாது என்ற அரசியல் நிர்ப்பந்தம்! அதற்காக அவர் பிரதமர் பதவியின் கௌரவத்தையும் இந்த நாட்டு மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் சேர்த்தே காவுகொடுத்துக்கொண்டிருக்கிறார்!

தி.மு.க.தலைவரோ இதே ராஜாவுக்குத் தொலைதொடர்பு அமைச்சகத்தை ஒதுக்கினால்தான் ஆட்சி அமைக்க ஆதரவு தருவேன் என்று பேரம் பேசி காங்கிரஸ் கட்சியை நிர்ப்பந்தித்தவர். கருணாநிதியின் அன்றைய வற்புறுத்தலையும் இன்று ராஜாவின் ராஜினாமாவைக் கோராமல் இருப்பதையும் இணைத்துப் பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது.

தி.மு.க. தலைவர் பேசாவிட்டாலும் பிரதமர் தார்மிகத் துணிவுடன் பேச வேண்டிய நேரம் இது. ராஜாவின் ராஜினாமாவை அவர் கோரட்டும். 'மிஸ்டர் கிளீன்' என்று அவர் பெயரெடுத்தால் போதாது; அவரது அமைச்சரவை லஞ்ச-ஊழல் கறைபடிந்து 'டர்டி'யாகாமல் காக்க வேண்டும். இல்லையெனில், இந்த நாட்டில் எத்தகைய ஊழலும் செய்துவிட்டு, எந்த விளைவுமின்றித் தப்பலாம் என்கிற துணிவு, அதிகாரம் படைத்தவர்களிடையே வேரூன்றிப் போய்விடும். ●

கரும்பு தின்ன கூலியா?

'புதுசு புதுசா யோசிச்சு போட்டிகளை உண்டாக்கி, வாசகர்களின் ஆர்வத்தினைத் தூண்டிப் பரவசப் படுத்தும் கல்கியே உன் வழி தனி.'

- எம்.மிக்கேல் ராஜ்,
சாத்தூர்

மனோகரியின் மனத்தை மாற்றி விட்டாளே சுசீலா. உள்ளும் புறமும் ஒன்றாகிவிட்டது. வண்ணநிலவன் மெல்லினத் தொடரை மென்மையாக முடித்துவிட்டார்.

- ஜி. கீர்த்தனா,
நெய்வேலி

'கலைஞர் சர்க்கஸ்' கார்ட்டூன், கலகல காமெடிங்க; பார்த்து, ரசித்து சிரித்தோம்!

- வே.ந.கதிர்வேல்,
வேலூர்

19.9.10 கல்கி இதழில் 'பிரதமரின் விசித்திரப் பொருளாதாரம்' தலையங்கம் படித்தேன். உச்சநீதி மன்றத்தின் ஆணையும் பிரதமரின் கூற்றும் அலசப்பட்ட விதம் நன்றே.

- எஸ். ராமசாமி,
குட்டைதயிர்
பாளையம்

வட்டமேஜை

திருமண வீட்டில் ரசிகர்களுக்கு என்ன வேலை என்று ஞாநி கேட்பதில் நியாயம் இருக்கிறது.

- ஜே. துரைராஜ்,
சென்னை



உமா சங்கர் விவகாரத்தில் அரசு நடத்திய விளையாட்டை வித்தியாசமாகக் கிண்டலடித்த கார்ட்டூன் சூப்பர்!

- அயன்புரம்
த. சத்தியநாராயணன்

'ஸ்லிம் ஸ்பெஷல்' படித்ததும் சற்று குண்டான நான் 'டிரிம்'மாக இருப்பது போன்ற உணர்வு.

- சாந்தா ராஜாமணி,
சென்னை

பலவிதமான மனிதர்களின் விதவிதமான செண்டிமெண்ட்கள் அனைத்துமே படிக்க வெகு சுவாரஸ்யம்.

- எம்.ஜி.பரத்,
திண்டுக்கல்

'கவிதை கஃபே' பகுதி தொடரட்டும். வாசகர்கள் எழுதும் கவிதைகள் சூப்பர்!

- பா. அச்சுதன், வயலூர்


திரைப்பட விமர்சனம் இல்லாத குறையை சூப்பர் ஸ்டார் மகள் திருமண விழா படங்கள் போக்கிவிட்டன!

-என்.எஸ். மணிமாறன்,
திருவண்ணாமலை

என்னாது... வாசகர் அனுபவங்கள் எல்லாவற்றுக்கும் பரிசுகளா? கரும்பு தின்னுவதற்குக் கூலியா?

- சு.இந்துமதி,
சின்னசேலம்

மன்மோகன் நாத்திரா நீங்க நல்லவரா... கெட்டவரா...?





ஞாநி

இதில் எது சரி?

''வறுமையை ஒழிப்பதற்கான வளர்ச்சித் திட்டங்கள் முக்கியமானவைதான். ஆனால், சுற்றுச் சூழலைப் பலிகொடுத்து அதைச் செய்ய முடியாது.''

''சுற்றுச்சூழல் முக்கியமானதுதான். ஆனால், வளர்ச்சித் திட்டங்களை அதற்காகப் பலிகொடுக்க முடியாது.''

சாதாரண காமன்சென்ஸ் உள்ள யாரானாலும் முதல் வாக்கியம் தான் சரி என்பார்கள். ஏனென்றால், சுற்றுச்சூழல் நாசமாகிக் கொண்டே போனால், எந்த வளர்ச்சித் திட்டமும் வேலை செய்யாது. ஏழ்மை, வளமை என்பதற்கெல்லாம் எந்த அர்த்தமும் இல்லாமல் போய்விடும். இயற்கை அழிய அழிய மனிதன் வாழ்வது சிரமமாகிவிடும் என்பது, எந்தச் சின்ன மூளைக்கும் கூடப் புரிந்த விஷயம்தான்.

ஆனால், பொருளாதார அறிஞர் என்று புகழப்படுகிற நம் பிரதமர் மன்மோகன் சிங்குக்கோ இரண்டாவது வாக்கியம்தான் சரியாகப்படுகிறது. சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், சூழல் பாதுகாப்புக்காகச் சில வளர்ச்சித் திட்டங்களை எதிர்ப்பதைப் பற்றிப் பத்திரிகையாளர்களிடம், இந்த அரிய முத்தை உதிர்த்திருக்கிறார் பிரதமர்.

மன்மோகனுக்கு நேர்மையானவர், ஊழல் செய்யாதவர், ஒழுக்கமானவர்... என்றெல்லாம் பலமான பிம்பங்கள் இருக்கின்றன. ராஜ்யசபை வழியே தேர்வாகி, பிரதமர் ஆவதற்காக, அவருக்குச் சம்பந்தமே

இல்லாத, அசாம் மாநிலத்தில் குடியிருப்பதாகத் தேர்தல் ஆணையத்திடம் அவர் பிரமாண வாக்குமூலம் கொடுத்திருப்பது, எந்த நேர்மை இலக்கணத்தில் வருமென்று எனக்குப் புரியவில்லை.

ஆனால், ஒன்று மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது. வெளிநாட்டு கம்பெனிகள், உலக வங்கி, அமெரிக்கா முதலியவற்றின் நலனுக்கு எதிராக இங்கே யார் என்ன சொன்னாலும், செய்தாலும், அதை எதிர்ப்பதும் தடுப்பதும்தான் அவருடைய முக்கியமான வேலையாக இருக்கிறது.

அணுமின் நிலையங்களை இந்தியாவில் தாங்கள் நிறுவினால், அவற்றில் விபத்து ஏற்பட்டு மக்களுக்கு ஆபத்து நேர்ந்தால், அதற்கு நஷ்ட ஈடாகத் தர வேண்டிய தொகைக்கு உச்ச வரம்பு வைக்க வேண்டும் என்பது வெளிநாட்டு கம்பெனிகளின் கோரிக்கை. மேலை நாடுகளில் அப்படி எந்த உச்சவரம்பும் கிடையாது. அமெரிக்கக் கடலையும் கடற்கரைகளையும், எண்ணெய்க் கசிவால் மாசாக்கியதற்காக பிரிட்டிஷ் பெட்ரோலியம் கம்பெனி எவ்வளவு நஷ்டஈடு தர வேண்டும் என்பதை, அமெரிக்க அரசுதான் தீர்மானிக்கிறது.

ஆனால், இந்தியாவில் மட்டும் விபத்து ஏற்பட்டால், ஓரளவுதான் அணு உலை கம்பெனி நஷ்டஈடு தருமாம். மீதிப் பணத்தை இந்திய அரசு தரவேண்டுமாம். ஆலையின் இலாபத்தில் இந்திய அரசுக்கு ஒரு பைசா பங்கு கிடையாது. ஆனால், விபத்து ஏற்பட்டால் அரசு பணம் தர வேண்டும்.

இந்தியாவை இளிச்சவாயனாக்கும் இந்த ஒப்பந்தத்துக்கு முழுக்க உடந்தையாக இருந்தவர் மன்மோகன். இரவு பகலாகப் பேசி, எதிர்க்கட்சியுடன் சமரசம் செய்து அவசரம் அவசரமாக இதற்கான சட்டத்தை அவையில் நிறைவேற்றிய மன்மோகனால், மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவில் ஏன் எதிர்க்கட்சிகளைச் சமரசப்படுத்த முடியவில்லை? முயற்சிக்கவும் இல்லை என்று நாம் யோசிக்க வேண்டும்.

அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்ற சோனியாவிடமே ராஜினாமா மிரட்டலைத் தொடுத்தவர் மன்மோகன்சிங்!

அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக, ராஜினாமா என்ற மிரட்டலையே அவர் சோனியாவிடமும் காங்கிரஸ் கட்சியிடமும் பிரயோகித்தது நினைவிருக்கலாம்.

விபத்து, நஷ்ட ஈடு என்றதும் தவறாமல் நினைவுக்கு வருவது - போபால். இன்று வரை நம்மால், அந்த விபத்துக்குப் பொறுப்பான (பழைய) யூனியன் கார்பைட் - (இப்போதைய) டோ கெமிக்கல்ஸிடமிருந்து சரியான நஷ்ட ஈடும் பெற முடியவில்லை. ஜாமீனில் ஓடிப்போன கம்பெனி தலைவர் ஆண்டர்சனைக் கொண்டு வந்து கூண்டிலும் நிறுத்த முடியவில்லை.

''ஆண்டர்சன், டோ கெமிகல்ஸ் பற்றியெல்லாம் பேசாதீர்கள். அது அமெரிக்கா, இந்தியாவில் முதலீடு செய்வதைப் பாதிக்கும்'' என்று அமெரிக்காவின் உயர் பாதுகாப்புத் துறை அதிகாரி ப்ரொமன் மைக்கேல், இந்திய அமைச்சருக்குக் கடிதமே எழுதுகிறார். உலக வங்கி தற்போது நமக்கு விதித்துள்ள நிபந்தனைகளைக் கடுமையாக்காமல் அப்படியே தொடர்

வதற்கு, நீங்கள் சிபாரிசு செய்யவேண்டும் என்று, அமைச்சர் அலுவாலியா அவருக்கு எழுதிய கடிதத்துக்குத்தான் இந்தப் பதில்!

போபால் விவகாரத்துக்குத் தொடர்பற்ற இன்னொரு விஷயத்தில், டோ கெமிக்கல்லை விசாரிக்கவேண்டுமென்று இந்தியாவில் சி.பி.ஐ.க்குச் சொல்லப்பட்டது. எதற்குத் தெரியுமா? இந்திய அரசு அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்ததற்காக. இதை சி.பி.ஐ. ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை.



அமெரிக்காவில் பூச்சிக் கொல்லியான கோலொ பைரிபாஸ், குழந்தைகளைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதால் தடை செய்யப்பட்டது. இதை டோ கெமிக்கல்ஸ் இந்தியாவில் விற்றுக் கொண்டிருக்கிறது.

தடைசெய்யப்பட்ட பூச்சிக் கொல்லியை இந்தியாவில் விற்றதற்காக அமெரிக்கா, டோ கெமிக்கல்ஸ் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அதில் அவர்களுக்கு அக்கறை இல்லை. இதை விற்க அனுமதி பெறுவதற்காக, இந்திய அரசின் செடிகள் பாதுகாப்பு ஆலோசகத் துறையின் அதிகாரிகளுக்கு டோ கெமிக்கல்ஸ் இலஞ்சம் கொடுத்தது அமெரிக்கச் சட்டங்களின்படி குற்றம். இதை விசாரித்த செக்யூரிட்டி எக்ஸ்சேஞ்சிடம், தம் குற்றத்தை டோ ஒப்புக்கொண்டு விதிக்கப்பட்ட பல கோடி ரூபாய் அபராதத் தொகையையும் செலுத்தியிருக்கிறது.

இதைப் பற்றி ராஜ்யசபையில் மார்க்சிஸ்ட் எம்.பி பிருந்தா காரத் 2007ல் கேள்வி கேட்டதும், சி.பி.ஐ.யை விசாரித்து அறிக்கை தரச் சொல்வதாக அமைச்சர் ஷரத் பவார் அறிவித்தார். மூன்றாண்டுகள் ஆகியும் எந்த அறிக்கையும் வரவில்லை.

இதைப் பற்றியெல்லாம் மன்மோகன் வாயையே திறப்பதில்லை. ஸ்பெக்ட்ரம் ஊழல் பற்றி இதுவரை மன்மோகன் சொன்னவை அண்ணாயிசத்தை விடக் குழப்பமானவை.

அண்மையில், உச்சநீதி மன்றம் அரசின் கொள்கைகளில் தலையிடக்கூடாது என்று கடுமையாகச் சொன்னார் மன்மோகன். சுமார் பத்து இலட்சம் ஏழைகளுக்கு ஐந்தாண்டு காலம் உணவளிக்கப் போதுமான இலட்சக்கணக்கான டன் தானியங்கள் அரசுக் கிடங்குகளில் கெட்டு வீணாகிக் கொண்டிருக்கின்றன. இதைச் சமூக ஆர்வலர்கள் உச்சநீதி மன்றத்திடம் முறையிட்டபோது, ஏழைகளுக்கு இலவசமாகத் தானியங்களை அளிக்கும்படி நீதிபதிகள் உத்தரவிட்டனர். இது உத்தரவல்ல; பரிந்துரைதான் என்றார் விவசாய அமைச்சர் ஷரத் பவார். உச்ச நீதிமன்றமோ இது உத்தரவுதான் என்றது. உடனே உள்ளே நுழைந்தார் மன்மோகன். இலவசமாகக் கொடுப்பதும் கொடுக்காததும் அரசுக் கொள்கை சம்பந்தப்பட்டது. இதில் நீதிமன்றம் தலையிடக்கூடாது என்றார். இதுவரை எந்தப் பிரச்னையிலும் உச்சநீதி மன்றத்துக்கு எதிராகக் கருத்து சொல்லாதவர் அவர்.

அரசுக் கிடங்குகளில் உணவு தானியங்கள் சரியாகப் பாதுகாக்கப்படாமல் கெடவிட்டது ஏன்? அதுவும் அரசின் கொள்கை சம்பந்தப்பட்டதா? தம் கடமையைச் செய்யத் தவறிய அரசுக்கு, கொள்கை பற்றிப் பேச யோக்கியதை உண்டா? அலுவாலி

யாவுக்குக் கடிதம் எழுதும் அமெரிக்க அதிகாரியிடம், எங்கள் அரசின் கொள்கை விஷயங்களிலோ எங்கள் நாட்டுப் பாராளுமன்ற நடவடிக்கைகளிலோ தலையிட உங்களுக்கு உரிமை இல்லை என்று ஒரு கடிதம் எழுத மன்மோகனால் ஒருபோதும் முடியாது.



மன்மோகன் தாத்தா, நீங்கள், நல்லவரா? கெட்டவரா?

நீரோவும் 'ஹீரோ'வும்

திருச்சியில் ஒரு அரசுக் கட்டடத்தைத் திறந்துவைக்க முதல்வர் கலைஞர் வந்தபோது அங்கிருந்தேன். ரோம் நகரம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்த நீரோ மன்னன் எப்படி இருந்திருப்பான் என்று இப்போது புரிந்துகொள்ள முடிந்தது. ஆயிரக் கணக்கான டியூப்லைட்டுகள். நூற்றுக் கணக்கான ஃபிளெக்ஸ் போர்டுகள். தமிழகத்தில் சென்னை தவிர அத்தனை ஊர்களிலும் கடும் மின்வெட்டில் விவசாயம், தொழில், அன்றாட வாழ்க்கை எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கையில், இப்படிக் கொண்டாட்டம் நடத்த நீரோ மனசுதான் வேண்டும். உச்சமான அராஜகம், அன்று போக்குவரத்து ஸ்தம்பிக்கும் என்பதால், எல்லாப் பள்ளிகளும் விடுமுறை விட்டார்கள். அடுத்த நாள் பள்ளி நடத்தினால், அதற்கடுத்த மூன்று நாட்கள் ரம்ஜான், விநாயகர் விழா, ஞாயிறு விடுமுறைகள். எனவே, தொடர்ந்து இரு வேலை நாட்களைப் பள்ளிகள் இழந்தன. ஒரு கட்டடம் திறப்பதற்காக, உலகத்தில் எந்த நாகரிகமான நாட்டிலும் இப்படிப்பட்ட கேவலங்கள் நடப்பதும் இல்லை; நடந்தால் சகிக்கப்படுவதும் இல்லை.

அடுத்த நாள் மதுரை புத்தக விழாவுக்குச் சென்றேன். நகர் முழுக்க அழகிரியின் முகத்துடன் விதவிதமான ஃபிளெக்ஸ்கள். இரவு கனவில் கூட அழகிரி ஃபிளெக்ஸில் வந்து சிரித்தார். எந்த நிகழ்ச்சி விளம்பரப் பலகையையும் 48 மணி நேரத்துக்கு மேல் வைக்கக் கூடாது என்ற அரசு உத்தரவுக்கு அப்பாற்பட்டவர் அழகிரி. புத்தக விழா நடந்த தமுக்கம் மைதானத்தில் அதே சமயத்தில் ஒரு காது குத்தும் நிகழ்ச்சிக்கும் அனுமதி! சிறப்பு விருந்தினர் அழகிரியாயிற்றே! புத்தகப் பதிப்பாளர்கள் ஆளுக்கு 2 ஆயிரம் ரூபாய் செலுத்தி விழா நுழைவில் வைத்திருந்த அத்தனை ஃபிளெக்சுகளும் அகற்றப்பட்டு, காது குத்த வரும் அழகிரியை வரவேற்கும் ஃபிளெக்சுகள் மாட்டப்பட்டன. எதிர்த்து ஒரு முணுமுணுப்பும் இல்லை. அழகிரி ஒரு மரண வீட்டுக்கு அஞ்சலி செலுத்தச் சென்றார். அவர்தான் முதல் மாலை வைக்க வேண்டுமென்று, முன்பே வந்த மற்ற எல்லோரும் காத்திருந்தார்கள். மதுரை தமிழகத்திலோ, இந்தியாவிலோ இல்லை என்று தோன்றுகிறது. தனி நாடு! பிரபாகரனால் முடியாததை அழகிரி சாதித்துவிட்டார். இப்போதைக்கு மதுரையில் முதுகெலும்பு அவருக்கு மட்டுமே இருப்பதாக ஓர் அநாமதேய மருத்துவ சர்வே தெரிவிக்கிறது. ●

இந்த வாரப் பூச்செண்டு!

இந்த மாதம் மேற்குவங்கத்தில் வெடித்த மதக் கலவரத்தின்போது, உத்தர் கல்யாணி கிராமத்தைச் சேர்ந்த பரூக், ஹுஸ்னேன், ஷோம்பு, அல்டாப், பிஜாய் ஆகியோர் வீடுவீடாகப் போய், ''காலம் காலமாக இங்கு சேர்ந்து வாழும் எல்லா ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் வெளியிலிருந்து யாரும் வந்து பிரிக்கவோ தாக்கவோ நாம் அனுமதிக்கக் கூடாது'' என்று திரட்டினார்கள். முறை போட்டுக்கொண்டு குழுகுழுவாகக் காவல் இருந்தார்கள். அந்த இளைஞர்களுக்கும் அந்தக் கிராமவாசிகளுக்கும் இ.வா.பூ.



ஜென்டில்மேன்

கிரிக்கெட் உலகமே ஸ்தம்பித்திருக்கிறது. முன்பு மேட்ச் பிக்ஸிங். இப்போது ஸ்பாட் பிக்சிங். இதன் அர்த்தம் மொத்த ஆட்டத்தையும் நிர்ணயிக்கும் செயலாக அல்லாமல் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை மட்டுமே நிர்ணயம் செய்வது. உதாரணமாக, பத்தாவது ஓவரின் ஆறாவது பந்தை நோ பாலாக வீசுவார் பந்துவீச்சாளர். அது ஏற்கெனவே புக்கி எனப்படும் சூதாடிகளால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும். கடந்த மாதம் நடந்த இங்கிலாந்து - பாகிஸ்தான் இடையிலான போட்டியில் பாகிஸ்தானின் ஆசிப், அமீர் இருவரும் பணம்பெற்றுக்கொண்டு இவ்வாறு செய்ததாகப் புகார் செய்யப்பட்டது. பாகிஸ்தான் அணித் தலைவரான சல்மான் பட்டும் இதற்கு உடந்தையாக இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு ஸ்காட்லாண்டு யார்டு காவல்துறையினரால் விசாரணை நடத்தப்பட்டது.

இங்கிலாந்தின் 'நியூஸ் ஆப் தி வேல்டு' செய்தித்தாள் நிறுவனம் மசார் மஜீத் என்கிற புக்கியிடம் ஒன்றரை லட்சம் பவுண்டுகளைக் கொடுத்து குறிப்பிட்ட ஓவரில் நோ பால் வீச வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. இதனை ரகசிய கேமரா மூலமாகப் படம் பிடித்து, போட்டி முடிந்த பின்னர் வெளிவந்தபோது கிரிக்கெட் உலகமே அதிர்ச்சிக்கு உள்ளாகியது. ஐ.சி.சி உடனடியாக ஆசிப், அமீர், சல்மான் பட் மூவரையும் சஸ்பண்ட் செய்தது. மசார் மஜீத்தைக் கைது செய்து விசாரித்ததில் பாகிஸ்தான் அணியினருக்குத் தாம் பணம் கொடுத்ததை ஒப்புக்கொண்டார்.



நிலா ரசிகன்

ஆட்டமா?


இந்த அதிர்ச்சி அலை ஓயும் முன்னர் இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர் தில்சான் பணம் பெற்றுக் கொண்டு விளையாடியதாக லண்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் குற்றம் சாட்டின. இதற்கு இலங்கை கிரிக்கெட் வாரியம் மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டது. அவர் பணம் பெற்றாரா இல்லையா என்பதற்கான சான்றுகள் ஏதும் இதுவரை அறியப்படவில்லை.

கிரிக்கெட்டில் சூதாட்டத்தை முற்றிலுமாக ஒழிக்க அதில் ஈடுபடும் வீரர்களுக்குக் கடுமை யான தண்டனை வழங்கப்பட வேண்டும். இதை ஒரு தேச விரோதச் செயலாக அறிவித்துப் பணம் பெற்று ரசிகர்களை ஏமாற்றும் வீரர்களுக்கு உச்சத் தண்டனை வழங்க ஐ.சி.சி. சட்டங்களை வகுக்க வேண்டும்.

கிரிக்கெட்டுக்குச் சூதாட்டம் ஒன்றும் புதிதல்ல. 2000ம் ஆண்டு தென்னாப்ரிக்க அணித் தலைவரான ஹன்சி குரோனியே தாம் பணம் பெற்றுக்கொண்டு விளையாடியதாக ஒப்புக்கொண்டபோதுதான் இப்படி ஒரு விஷயம் இருப்பதே கிரிக்கெட்டில் பைத்தியமாகத் திரியும் பல ரசிகர்களுக்குத் தெரியவந்தது.

பின்னர் அசாருதீன், ஜடேஜா, சலீம் மாலிக் என்று ஒவ்வொரு வராகச் சிக்கியபோது கிரிக்கெட் மீதான ஆர்வமும், நம்பிக்கையும் குலையத் தொடங்கியது.

ஒரு காலத்தில் ஜென்டில்மேன்களின் ஆட்டமாகக் கருதப்பட்ட கிரிக்கெட், சூதாட்டச் சர்ச்சையினால் தம் மதிப்பை இழந்தது. இன்னொரு சூதாட்டம் என்கிற நிலைக்கு வந்ததற்கு ரசிகர்கள் அதன் மீது கொண்டிருக்கும் வெறிதான் காரணம்.





எஸ்.சித்ரா சதாசிவம், நெல்லை.

ஏழரைச் சனி என்பது மனிதனுக்கு எத்தனை தடவை வரும்? இதில் கவனமாய் இருக்க வேண்டிய காலங்கள் எவை? சனிப்ரீதிக்குச் செய்ய வேண்டிய மிகச் சரியான பரிகாரம் எது? தற்போது ஏழரைச் சனி நடைபெறுவது எந்த ராசிக்கு?

ஏழரை நாட்டுச் சனி மனிதனின் வாழ்க்கையில் அதிகபட்சமாக மூன்று முறை வரும். ஒரு ராசியை சனி கடக்க எடுத்துக் கொள்ளும் காலம் இரண்டரை வருடங்கள். பன்னிரெண்டு ராசியையும் ஒருமுறைச் சுற்றிவர முப்பது வருடங்கள் ஆகும். ஒவ்வொருவரின் ராசிக்குப் பின் வீட்டில் இரண்டரை வருடம். ராசியில் இரண்டரை வருடம். ராசிக்கு அடுத்த வீடான 2ம் இடத்தில் இரண்டரை வருடங்கள் என மூன்று ராசியையும் கடக்கும் காலத்தை ஏழரை நாட்டுச் சனி என்பார்கள். முதல் சுற்றைப் பங்கு சனி என்றும் இரண்டாவது சுற்றைப் பொங்கு சனி என்றும் மூன்றாவது சுற்றை மாரக சனி என்றும் கூறுவதுண்டு. ஏழரை நாட்டுச் சனியின் முதல் சுற்று நடைபெறும்போது கல்வியில் மந்தமாக இருப்பார்கள். உடல்நலக் குறைவு ஏற்படும். குடும்பத்தில் பற்றாக்குறை நிலவலாம். இரண்டாவது சுற்றில் திருமணம் நடக்கும். நல்ல வேலை கிடைக்கும். வாழ்க்கை செட்டில் ஆகும். மூன்றாவது சுற்றில் ஆயுள் கண்டம் ஏற்படும்.

தற்போது சனி, கன்னி ராசியில் உள்ளது. 2011 டிசம்பரில் அடுத்த சனிப்பெயர்ச்சி நடைபெறும். சிம்ம ராசிக்கு ஏழரை நாட்டுச் சனி 2011ல் முடிவடையும். கன்னி ராசிக்கு இப்பொழுது

நவகிரகச் சன்னிதியில் எதிர்புறம் சுற்றலாமா?

உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்



ராசியிலேயே சனி உள்ளதால் இதை ஜென்ம சனி என்பார்கள். சனிக்குச் செய்யும் பரிகாரங்கள்: திருநள்ளாறு சென்று வழிபடுவது. சனிக்கிழமைகளில் நவகிரஹ சன்னிதியில் நல்லெண்ணெய் தீபம் ஏற்றுவது. கோளறு பதிகம் தினமும் படிப்பது. அன்னதானம் செய்வது மற்றும் கால்கள் ஊனமுற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு இயன்ற உதவிகள் செய்வது. சிவ வழிபாடு செய்பவர்களுக்கு சனி அதிசய சுபப் பலனை அளிக்கும் என்று ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் தனது நவகிரஹ கீர்த்தனையில் அறுதியிட்டுச் சொல்கிறார் (திவாகரதனுஜம், ராகம், யதுகுலகாம்போதி). ஆகவே சரியான சனிப்ரீதி, சிவ வழிபாடு தான்.

பி.வி.குப்புசாமி, திருச்சி - 12

எனக்கு வயது 83. வடநாட்டுத் தல யாத்திரை மேற்கொள்ள விரும்புகிறேன். அது சாத்தியமா? ஜாதகம் அனுப்பியுள்ளேன். எனக்கு எப்பொழுது மரணம் சம்பவிக்கும் என்பதைத் தெரிவிக்கவும்.

உங்கள் ஜாதகம் நன்றாக உள்ளது. நீங்கள் விரும்பும் வண்ணம் புனிதத் தல யாத்திரை மேற்கொள்ளலாம். வாழ்க்கையின் இறுதி நாள் எப்பொழுது வரும் என்பதைப் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் காட்டாதீர்கள். மரணம் என்பது தேவ இரகசியம். ஜோதிடத்தின் மூலமாக அதைக் கணக்கிட முடியும். அதற்கு எட்டுவிதமான ஃபார்முலா உள்ளன. திருநெல்வேலி சந்திப்பில் முத்தையா ஜோசியர் என்று ஒரு ஜோதிட மேதை வாழ்ந்து வந்தார். அவர் என் தந்தையின் பெரியப்பா. எந்த ஜாதகத்தைப் பார்த்தாலும் இரண்டே நிமிடங்களில் அந்த ஜாதகர் இறக்கப் போகும் தேதி, நேரம், இடம் ஆகியவற்றைப் 'பளிச் பளிச்' என்று சொல்லி விடுவாராம். அவருடைய மாரகக் கணக்கு ஒரு முறை கூட மிஸ் ஆனதே இல்லை! அவர் தனது இறுதிக் காலத்தில் நோய் வாய்பட்டு மிகவும் சிரமப்பட்டதாக எனது குடும்பப் பெரியவர்கள் கூறியுள்ளனர். மாரகக் கணக்குப் போடும் ஜோதிடர்கள் நவகிரஹங்களின் கோபத்துக்கும் சாபத்துக்கும் ஆளாவார்கள். மஹாமஹோ உபாத்யாய லக்ஷ்மணசூரியின் புதல்வியரான எனது பாட்டி மீனாட்சி அம்மாள் இதைப் பற்றிய சுலோகம் ஒன்றையும் சொல்வதுண்டு. கருட புராணம், நசிகேதஸ் வரலாறு போன்றவற்றைக் கூட படித்திருக்கிறேன். ஆனால், மரணத்தைக் கணக்கிடும் எட்டு ஃபார்முலா பற்றி எனக்குத் தெரியாது என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்கிறேன்.



ராஜலஷ்மி, சேலம்-2.

கோவில்களில் நவகிரஹச் சன்னிதியில் வலம் வரும்போது சிலர் எதிர்ப்புறமாகச் சுற்றுகின்றனர். அது சரியா தவறா?

மிகப்பெரிய தவறு. வலம் வருதல் என்னும் பிரதட்ஷிணம் செய்வதுதான் சரியானது. மங்களகரமான செயல்கள் செய்யும் போதும், கடவுள் வழிபாட்டின்போதும் எதிர்ச்சுற்று கிடையாது. இறந்தவர்களுக்குச் செய்யப்படும் ஈமச்சடங்கில்தான் அப்ரதட்ஷிணம் வரும். நவகிரஹ சன்னிதியில் ஒருமுறை அல்லது ஒன்பது முறை வலம் வர வேண்டும்.



சிரஞ்சீவி மீண்டும் கலைச்சேவை ஆற்ற வருகிறார். ஷங்கர் டைரக்ஷனில் நடிக்க விருப்பமாம். கட்சி நடத்திய களைப்போ?



ஷங்கர் டைரக்ஷனில் சிரஞ்சீவி!



நரேந்திர மோடி கில்லாடி. குஜராத் டூரிஸத்துக்கு அமிதாப் அம்பாஸிடர். அமெரிக்காவில் நடக்கும், குஜராத்தின் பொன்விழா கொண்டாட்டங்களுக்கு பாலிவுட் பைங்கிளி பிராச்சி தேசாயை வளைத்து விட்டார். கிளாமர் மயக்கம் மோடிக்கும் உண்டு!

காளி - தி வாரியர் காட்ஸ் - கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸுடன் தயாரிக்கப்படும் படத்துக்கு பாப் தேவதை ஷகிராதான் ஹீரோயின். ஷகிரா காளியாக வேஷம் கட்டினால் நல்லாவா இருக்கும்?



“இயேசு கிறிஸ்து பற்றிப் பல படங்கள் வந்திருக்கின்றன. நான் நடிக்கும் ஜீசஸ் கிரைஸ்ட் கொஞ்சம் வித்தியாசமானது” என்று சொல்கிறார் பவன் கல்யாண். டைரக்‌ஷன் சிங்கீதம் சீனிவாச ராவ்.



கரீனா கபூரின் சகோதரி கரிஷ்மா கபூரை ஞாபகம் இருக்கா? இரண்டு குழந்தைகளுக்கு அம்மா. குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் கெல்லாக்ஸ் சாக்கோஸுக்கு விளம்பரத்தில் கரிஷ்மாவே ஹீரோயின்.

- துளசி

கல்கி கிளினிக்



சுசிலா, வாணியம்பாடி

எனக்கு நாற்பத்துரெண்டு வயதாகிறது. சில நாட்களாக எதைச் சாப்பிட்டாலும் அஜீரணம்தான். இதற்காக மருந்து கடைகளில் விற்கும் மாத்திரை, மருந்துகளை வாங்கிச் சாப்பிடவும் பயம். இயற்கை மருந்துகள் ஏதாவது இருக்கிறதா?

சித்த மருத்துவர் பத்மப்ரியா : ''நமது உடலில் நோய்கள் உருவாக அடிப்படையே வயிறுதான். நாம் சாப்பிடும் சாப்பாடு சூரியனின் இடத்துக்குத் தக்கபடி தான் அமைய வேண்டும். உச்சிவெயில் நேரத்தில் அதிகமாகப் பசி எடுக்கும். நாமும் அந்த வேளையில் தான் அதிகமாக உணவும் எடுத்துக்கொள்வோம். மாலை சூரியன் முற்றிலுமாக மறைந்தபிறகு உடலில் உள்ள ஜீரண உறுப்புகள் ஓய்வெடுக்கத் தொடங்கிவிடும். அந்த நேரத்தில் அதிகமாகச் சாப்பிடக் கூடாது. இரவு உணவை இரவு 7.30 அல்லது 8 மணிக்குள் முடித்திட வேண்டும். உங்களது அஜீரணத்துக்கான காரணம், நீங்கள் இரவு 8 மணிக்கு மேல் டின்னர் எடுத்துக் கொள்வதால் ஏற்பட்டிருக்கலாம். இரவு ரொம்ப ஹெவியான உணவு வகைகளையும் சாப்பிடுவது கூடாது. எப்பொழுதுமே, எதையுமே பசித்துதான் உண்ண வேண்டும். அஜீரணம் இப்போது பள்ளி செல்லும் குழந்தைகளிடமும் காணப் படுகிறது. பிஸா, பர்கர், தெரு ஓரங்களில் விற்கப்படும் சிற்றுண்டிகளைச் சாப்பிடுவதாலும் அஜீரணக் கோளாறு ஏற்படுகிறது. இஞ்சி சாறு, அதுவும் தேனோடு கலந்து சாப்பிட வேண்டும். மதிய நேரத்தில், சுக்குப் பொடி யைச் சூடு படுத்திய தண்ணீரில் கலந்து சாப்பிடுவது, இரவு நேரத்தில் கடுக்காயைப் பொடி செய்து சுடுநீரில் கலந்து சாப்பிட்டு வந்தால், உங்கள் உடலில் ஜீரண சக்தி அதிகமாகும்.''

சின்னசாமி, மேற்கு மாம்பலம்

இதயநோயாளிகள், அதிகாலையில் நடைப் பயிற்சி செய்யக் கூடாது; வேகமாக நடக்கவோ, ஓடவோ கூடாது என்கிறார்களே?


டாக்டர் டி.எஸ். கண்ணன் : அதிகாலையில் நமது உடலில் பலவிதமான ரசாயன மாற்றங்கள் ஏற்படுகின்றன. மருத்துவ ஆராய்ச்சிகளின்படி, உலகத்தில் பலருக்கும்

உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@
ஒரு ஸ்பேஸ்

ஹார்ட் பேஷண்ட் வாக்கிங் போகலாமா?



மாரடைப்பு அதிகாலையில்தான் நிகழ்கிறது. அதனால், இதயநோய் உள்ளவர்கள், அதிகாலையில் நடைப் பயிற்சி மேற்கொள்வதைத் தவிர்த்துவிடுவது நல்லது. ஒருவரது ஈ.சி.ஜி, எக்கோ மற்றும் டி.எம்.டி பரிசோதனைகளில் வரும் ரிசல்டைப் பொறுத்துதான் அவர் மிதமான நடை நடக்கலாமா, எவ்வளவு நேரம் நடக்க வேண்டும், எப்படி நடக்க வேண்டும் என்பதை இதய நோய் நிபுணர் சொல்ல முடியும். பொதுவாக, மிதமான வேகத்தில், 30 நிமிட நடை என்பது இதயத்துக்கு நல்லது. வேகமாக நடக்கும்போது மார்பு வலி அல்லது மூச்சுத்திணறல் ஏற்பட்டால், உடனடியாக மருத்துவ ஆலோசனையை மேற்கொண்டு, மருத்துவரின் பரிந்துரையின்படி, உடல் மற்றும் நடைப் பயிற்சியைத் தொடர்வது அவசியம்.




* டி.எஸ்.கண்ணன்

காமாட்சி, மதுரவாயில்

என் தங்கையின் ஒன்பது மாதக் குழந்தை அடிக்கடி காது வலியால் அவதிப்படுகிறது. குழந்தைக்குமா காது வலி ஏற்படும்?

காது, மூக்கு தொண்டை நிபுணர் க.ஆ. ரகு : ''குழந்தைகளுக்குக் காது வலி ஏற்பட பல காரணங்கள் இருக்கின்றன. முக்கியமான காரணம், தாய்மார்கள் படுத்துக் கொண்டே குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதுதான். தொண்டையிலிருந்து காதுக்குப் போகும் ட்யூப் ரொம்ப சிறியதானது. தொண்டையிலேயே பால் நீண்ட நேரம் தங்குவது, அல்லது தொண்டையில் ஏற்படும் தொற்று இவற்றால் காதில் வலி ஏற்படும். காதில் எண்ணெய் விடுதல், வாய் வழியே குழந்தைக்குச் சளியை ஊதி எடுக்கறேன் என்று வெத்தல பாக்குப் போட்ட வாயோடு அப்படியே குழந்தையின் வாயில் ஊதுவது, இவை எல்லாம் தவறான பழக்க வழக்கங்கள். இவற்றை நிறுத்தினாலே போதும் குழந்தைகளுக்குக் காது வலி வராது.''



* க.ஆ.ரகு

y.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacli என்று டைப் செய்து
ள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

எனக்குப் பிடித்த பாடல்!

நான் வியந்த இலக்கியத் தரம் வாய்ந்த சினிமா பாடல் வரி 'வீர அபிமன்யூ' படத்தில் கண்ணதாசனின் *'பார்த்தேன் சிரித்தேன்... பக்கத்தில் அழைத்தேன்...'* - என்ற சஹானா ராகத்தில் அமைந்த இந்தப் பாடல் வரிதான்.

இந்தப் பாடல் வரிகள் தேன், தேன் எனச் சந்தவரிசையில் முடிகின்றன. தேன் இனிமையானது.

மதனமாளிகையில் மந்திர மாலைகளாம் (ராஜபார்ட் ரங்க துரை)

நாடக மேடையில் அரசன் வேடத்தில் நின்றுகொண்டிருக்கும் சிவாஜியிடம் பார்வையாளர் சீட்டிலிருந்து ஒருபெண் சின்னப் பேப்பரில் 'மதனமாளிகையில்' என்ற பாடலைப் பாடவும் என்று எழுதிக்கொடுக்கிறார். அதைக் கையில் வாங்கிய சிவாஜி, நாடக பாணியிலேயே அந்த வரிகளைத் தொகையறாவாகப் பாடுவார். அதன்பின் நாயகியின் கனவு, பாட்டின் பல்லவிக்குச் செட்டுக்குள் போய்விடும். பார்க்க மிகவும் பிரமாத மாக இருக்கும்.

- எம்.திருமேனி, கல்லாலிப்பட்டு





வாசகர்களே! உங்களுக்குப் பிடித்தமான பாடல் என்னவென்று... 10 வரி கமெண்ட்டுடன் எங்களுக்கு எழுதி அனுப்புங்க... kalki@kalkiweekly -க்கும் அனுப்பலாம்.

மருத்துவ குணம் நிறைந்தது. அதிலும் மலைத்தேன் பவித்ரமானது. அதைப்போல இந்தப் பாடலில் தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் தேனென நினைத்து, வியந்து பரவசமடைகிறார்கள்.



- நளினி ராமச்சந்திரன்,
கோவை



'பாதை வகுத்த பின்பு பயந்தென்ன லாபம்/ பயணம் நடத்திவிடு மறைந்திடும் பாவம்' 'அபூர்வ ராகங்கள்' படத்தில் கண்ணதாசன் எழுதிய 'ஏழு ஸ்வரங்களுக்குள்...' எனத் தொடங்கும் பாடலில் உள்ள வரிகள் இவை. ஒரு செயலைச் செய்ய ஆரம்பிக்கும் முன் நன்றாக யோசனை செய்து ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பித்த பின் யோசிக்கக் கூடாது என்ற கருத்தை இலக்கிய நயத்தோடு இயம்பும் வரிகள் இவை.

- பா.திலகவதி, தஞ்சாவூர்



'கேளடி கண்மணி' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள கவிஞர் மு.மேத்தாவின் பாடல் கற்பூர பொம்மை ஒன்று

கைவீசும் தென்றல் இன்று
கலங்காது கைகூப்பும் நேரம்
கண்ணோரம் ஆனந்த ஈரம்

என்ற பல்லவியுடன் ஆரம்பமாகும். இதுதான் எனக்குப் பிடித்த திரை இசைப் பாடல். இந்தப் பாடலின் ஒரு சரணத்தில் வரும்

தாயன்புக்கு ஈடேதம்மா?/ அந்த ஆகாயம்
கூட அது போதாது!/ தாய்போல யார் வந்தாலுமே
உன் தாயைப் போல அது ஆகாது!

என்ற வரிகளே யார் கேட்டாலும்... மிகவும் சிலாகித்து இரசிக்கலாம்!

- சு.ஸ்ரீகாந்த், சின்னசேலம்



பார்த்தேன்... ரசித்தேன்...!

**இடம்பெறும் ஒவ்வொரு
அனுபவத்துக்கும் ரூ.50 சன்மானம்**

அமரர் கல்கி



சந்தர்ப்பம் கிடைத்தது!



ஆங்கில மகா கவியான ஷேக்ஸ்பியர் பிறந்த தினத்தை அவர் பிறந்த ஊரிலேயே கொண்டாடுவது பற்றி ஆங்கிலப் பத்திரிகைகளில் படிக்கும்போதெல்லாம் எனக்கு எட்டயபுரம் ஞாபகம் வருவதுண்டு.

ஷேக்ஸ்பியர் பிறந்த ஊரில் அவருடைய தாயார் வசித்த குடிசை ஒன்று முக்கியமான காட்சிப் பொருளாயிருக்கிறதாம். அந்தக் குடிசையை ஏறக்குறைய வருஷா வருஷம் புதுப்பித்துக் கட்டவேண்டியிருக்கிறதாம். ஏனென்றால், ஷேக்ஸ்பியர் பிறந்த தினத்தில் அவருடைய ஊருக்கு வரும் லட்சக்கணக்கான ஜனங்கள், ஷேக்ஸ்பியரின் ஞாபகார்த்தமாக மேற்படி குடிசையிலிருந்து ஒவ்வொரு சிறு பகுதியைப் பிய்த்து எடுத்துக்கொண்டு போய் விடுவார்களாம்! அவர்கள் வந்துபோன பிறகு அநேகமாக அக்குடிசையில் குட்டிச் சுவர்தான் பாக்கி இருக்குமாம்.

மேற்படி குடிசை, ஷேக்ஸ்பியரின் தாயார் வசித்த குடிசை என்பது வெறும் கட்டுக்கதையே என்று அனைவரும் அறிந்திருந்த போதிலும், அதைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லையாம்! ஷேக்ஸ்பியரின் பெயரால் நடக்கும் மோசடியைக் கூட, ஷேக்ஸ்பியர் கொண்டாட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகவே கருதி, குதூகலத்துடன் அக்குடிசைக் கூரையில் ஒரு பகுதியைப் பிய்த்துக் கொண்டு போய் விடுவார்களாம்! ஆங்கிலேயர் தங்களுடைய கவிஞரை அப்படிப் பாராட்டுகிறார்கள்!

இதையெல்லாம் படிக்கும்போது எனக்கு எட்டயபுரம் ஞாபகம் வரும். அதோடு எட்டயபுரத்தை இன்னும் ஒரு தடவைகூட நாம் போய் எட்டிப் பார்த்து வரவில்லையே என்று அவமானமாயிருக்கும். ''பாரதியார் பிறந்த எட்டயபுரம் நமக்கு எட்டாத பழமாகவே இருந்து விடுமோ!''என்றும் சில சமயம் ஆதங்கமடைவேன்.

நல்ல வேளையாக, இந்த வருஷத்தில் (1945) பாரதியார் திருநாளுக்குச் சில தினங்களுக்கு முன்னால் எட்டயபுரம் போவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

- 'பாரதி பிறந்தார்' புத்தகத்திலிருந்து...

கோதானம் செய்வது ஓராயிரம் அஸ்வமேத யாகம் செய்த பலனை கொடுக்கும்

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று (7-10-2010) ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில் கோதானம் செய்து பித்ருக்களின் ஆசிர்வாதத்தை பெற்று அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று அனைத்து தோஷங்களில் இருந்தும் விடுபடவும், முன்னோர்களின் ஆசி வேண்டியும் கோதானம், மகிஷ (எருமை) தானம், காறாம் பசு தானம், பசுமடத்தில் நடைபெறுகிறது. யாகங்கள் செய்து, யோகங்கள் சேர்ப்பதில் வல்லவரும் ஹோமங்கள் செய்து க்ஷேமங்கள் குவிப்பதில் வல்லவரும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு விருட்ச பரிகாரம் சொல்பவருமான ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தமது வேத வித்வான்களின் குழுவுடன் கோதான பூஜை, கோபூஜை செய்ய உள்ளார். இதில் அனைவரும் கலந்து கொண்டு கோதானம் செய்து பித்ருக்களின் ஆசியை பெற்று தோஷ நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்.

கோதானத்திற்கு மிஞ்சி ஒரு புண்ணியமும் இல்லை. பரிகாரத்துக்கு அதுவே பெரிய மருந்து

கோதானம் (பசுவும் கன்றும்) செய்தால் ஜாதக ரீதியான தோஷம், பித்ரு தோஷம், திருஷ்டி தோஷம் விலகி, புத்ர பாக்கியம், தடைபட்ட திருமணம் கைகூடும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். கோதானம் செய்ய ரூ.9,000/-

காறாம் பசு (பசுவும் கன்றும்) தானம் செய்தால் 7 1/2 ஆண்டு, அஷ்டமச் சனி விலகும். நவக்கிரஹ தோஷம், நாக தோஷம், ஆபிசார தோஷம், வாஸ்து தோஷம், எதிரிகள் தொல்லை விலகி, சந்தான அபிவிருத்தி உண்டாகும். காறாம் பசு தானம் செய்ய ரூ.10,000/-

மகிஷ தானம் (எருமையும் கன்றும்) செய்தால் நோய் பாதிப்பால் பயம், வாகன விபத்து, தீய சக்தியால் ஏற்படும் பயம், வியாபாரம். உத்யோகத் தடை நீங்கும். பாப தோஷம் விலகி ஆயுள் விருத்தி, மனச்சாந்தி உண்டாகும். மகிஷ தானம் செய்ய ரூ.11,000/-

மேற்கண்ட தானம் செய்ய (Cheque/DD/MO மூலமாக) **Sri Ghosala Seva Trust, Chennai** என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி மஹாளயபக்ஷ அமாவாசை அன்று நடைபெறும் கோதானத்தில் கலந்து கொண்டு நடமாடும் தெய்வமாகிய கோமாதாவின் பேரருளை பெற அன்புடன் அழைக்கிறோம்.

மேற்கண்ட தானம் செய்பவர்களுக்கு பித்தளையிலான பெரிய கோமாதா விக்ரஹமும் வெள்ளியிலான ஐஸ்வர்ய பெருமாள் விளக்கும் அனுப்பி வைக்கப்படும்




நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

பசுமடம்

வயதான பசுக்களை பராமரிக்கும் இல்லம்
ஆதரவற்ற பசுக்களை பாதுகாக்கும் இல்லம்
ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பேணும் இல்லம்


(Recognised by Animal Welfare Board of India)

பெருமாளகரம், திருவேற்காடு (P.O), சென்னை-77 போன்: 044 -3299 9888



அற்புதமான காதலை மட்டுமல்ல
அதை உன்னிடம் சொல்லமுடியாத
அதி அற்புதமான மௌனத்தையும்
நீதான் எனக்குத் தந்தாய்
- தபூ சங்கர்

ஒரு மகா கான்வாஸில் ஓவியன் கவனக் குறைவாக வண்ணம் தோய்த்த தூரிகையை உதறியது போலிருந்தது வானம். சில வருடங்களுக்கு முன் லாரியில் அடிபட்ட கண்ணகி சமீபத்திய வருத்தம் ஏதுமின்றி அதே இரண்டாயிரம் வருட அரச்சினம் கொப்பளிக்க மாநகரைப் பார்த்து 'கோவலர்களே' 'நெடுஞ்செழியர்களே' என்று கண்களால் அலறிக் கொண்டிருந்தாள். மாநிலக் கல்லூரியின் கோபுரக் கடிகாரம் பதினொன்று காட்டிய போது வேதியியல் வகுப்பை 'கட்' செய்து விட்டு இடுப்பில் 'டெஸ்ட்டிஸியா பப்புனியா (Thestesia populnea)என்று தன் பெயரை அரைஞாண் கொடியாகக் கட்டியிருந்த மரத்தின் கீழ்உள்ள சிமெண்ட் பெஞ்சில் வந்து அமர்ந்தான் ஆனந்த்.



அவன் கைப்பேசி இன்னும் சில நொடிகளில் ஒரு முக்கியமான அழைப்பு வரப்போகிறது. அரசியல் அழைப்பு. அதற்குள் ஆனந்தைக் கொஞ்சம் பார்த்துவிடலாம். நிறம் கருப்புதான். ஆனால் மெயின் கட்டடத்திலிருந்து சயின்ஸ் பிளாக்குக்கும் லேபுக்கும் போகிற மாணவிகள் சரியாக ஆனந்த் அமர்ந்திருக்கும் இடத்தைக் கடக்கும் போது, வேகத்தடையாகக் கடக்கும் இரு சக்கர வாகனங்கள் போல் நடையை மெது வாக்குகிறார்களே! அது ஏன்? அந்திப் பொழுதில் கிழித்த மத்தாப்புக்குச்சியைப் போல ஒளிரும் அவன் கண்களா? காற்றில் அலையும் பறவையின் சிறகுபோல் முன் நெற்றியில் புரளும் முடி கற்றையா? தொட்டால் காயமேற்படுத்தி விடுமோ என அச்சமூட்டுவது போன்ற கூர்முனை நாசியா? அல்லது எப்போதும் சிரிப்பது... 'சட்' ஃபோன் அடித்துவிட்டது.

வே.எழிலரசு



''ஹலோ...''

''யுனிவர்சிடி லைப்ரரிக்கு வந்துடு.''

''சரி''

''உள்ளே போயி ஃபிலாசபி ரேக் சைடுல உட்காரு.''

''சரி...''

''தனியா போவணும். வழில நம்ம மக்களைப் பாத்தா பேசக் கூடாது. சேந்து போவக் கூடாது. தலைவர் உத்தரவு.''

ஃபோன் கட் ஆனது. ஆனந்த், எழுந்து கல்லூரிக்கு வெளியே வந்து நடக்கத் தொடங்கினான். உற்சாகமாக இருந்தது. சாகச ஆட்டத்தில், தான் வெறும் பார்வையாளன் மட்டுமல்ல என்ற நினைப்பு நடையின் கம்பீரத்தைக் கூட்டியது. பத்து நாட்களாகக் கல்லூரி வளாகத்திலும் வகுப்பறைகளிலும் தூள் கிளப்பியாயிற்று.

கல்லூரி மாணவர் மன்றத் தலைவர் பதவிக்கு, உதயகுமார் நிறுத்தப்பட்டபோது 'அட நம்ம ஆளு இனி தலைவன்டா' என முணுமுணுத்தான். வேட்பு மனு சமர்ப்பித்த நாளில் வழிமொழிபவர் பட்டியலில் தங்கள்

காதல் கேம்பஸ் 1



பெயர்களைப் பதித்துக்கொள்ள ஆளுமைத் திறனுடைய பல மாணவர்கள் 'நான்' 'நீ' என்று முன்வந்தபோது, முதலாண்டு மாணவன் ஆனந்த் வழிமொழியட்டும் என்று உதயகுமார் சொன்னதும், 'அடடா நான் தளபதிடா' எனத் தனக்குள் பெருமிதம் கொண்டான்.

தலைவர் பதவிக்கு உதயகுமாரை எதிர்த்துப் போட்டியிடுகின்ற சதீஷ் எப்போதுமே ஆளுங் கட்சியிலிருக்கின்ற அரசியல் பிரமுகரின் (எம்.எல்.ஏ.வின்) மகன். கொஞ்சம் அதீத மானவன். ஆப்பிள் நறுக்கவும் பட்டாக் கத்தியை எடுப்பான். அவனுக்கு இந்தத் தேர்தல் ரொம்ப முக்கியமானது. பல ஊர் வலங்களில் பங்கேற்றுள்ள அவனது அப்பா, திடீரென்று படுத்தபடி பயணிக்கும் ஊர் வலத்துக்கு ஆசைப்பட்டுவிட்டால், தொகுதியில் வர நேரும் இடைத்தேர்தலுக்குக் கட்சியில் சீட் வாங்க இந்தக் கல்லூரி மாணவர் மன்றத் தலைவர் பதவி ஒரு துருப்புச் சீட்டு ஆகப் பயன்படலாம். அதனால் பிரசாரம் தீவிரம் அடைந்தது.

எப்போதுமே தம் நண்பர்களுக்கு ஏ.டி.எம். ஆக இருக்கும் சதீஷ், தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து பல களியாட்டங்களை ஸ்பான்சர் செய்தான். பல மாணவர்கள் சதீஷ் உபயத்தால் எக்ஸ்பிரஸ் அவென்யுக்கும், ஸ்கை வாக்கும் சென்று வந்தார்கள். கல்லூரிக்குள் கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கலாசார மரபு காப்பாற்றப்பட வேண்டுமென குத்தாட்டம் எல்லாம் நடந்தேறின. வெற்றி ஊர்வலத்துக்குத் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை இருக்கிறதா என்றும் கேட்டுப் பார்த்துவிட விரும்பினான்.

அதிரடி வியூகங்களாலும் பட்டை கிளப்பும் பிரசார உத்திகளாலும் உதயகுமார் அசரவில்லை. எப்போதும் போலவே அமைதியாக, நிதானமாக, பணிவாகப் பிரசாரம் செய்தான். ஆஸ்டலில் ஒவ்வோர் அறையாகச் சென்று கரம் குலுக்கினான். வகுப்பறைகளில் பேராசிரியர்களின் அனுமதி பெற்று வசீகரமான சிற்றுரைகள் நிகழ்த்தினான். வேதியியல் துறையில் ''என்னை ஆதரித்து உங்கள் வகுப்புத் தோழர் ஆனந்த் இப்போது உரையாற்றுவார்'' என்று அறிவித்துவிட்டான். திடீரென்று என்ன பேசுவது என்று ஆனந்துக்குத் தெரியவில்லை. முன் தயாரிப்பு இல்லாமல் பேசுவது சாத்தியமா? அப்போது பார்த்து நாக்கு என்பது ஈரமென்று ஒன்றுண்டு என்றறியா ஈரங்குல சதைத்துண்டமாக மாறிவிட்டது. எப்படியோ சமாளித்து, ''உதயகுமார் அவர்கள் ஏன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன்

பாண்டிபஜாரில் கிடைத்த கதை!

வாடா போடா நண்பர்கள் படத்தின் இயக்குனர் மணிகைக்குப் படத்தின் கதை பாண்டிபஜாரில் கிடைத்தது என்கிறார். பாண்டிபஜாரில் இவர் போய் கொண்டிருந்தபோது பென்ஸ் காரில் வந்த ஓர் இளைஞன் காரை நிறுத்திவிட்டு இறங்கி பிளாட்பார்மில் செல்போன் பேசியபடியே நடந்து போனானாம். அவனது அவசரத்தையும் பதற்றத்தையும் கவனித்த மணிகை, இப்போது அவனுக்கு பிடித்த, பிடிக்காத ஏதாவது ஒரு விஷயம் நடந்தால் என்னாகும் என்று யோசித்தாராம். அதுதான் முழு படம்.

''இரண்டு ஹீரோ, ஒரு ஹீரோயின். அப்படின்னா முக்கோண காதலா இருக்குமோன்னு கேட்பீங்க. இல்லேன்னுதான் சொல்லுவேன். ஏன்னா எல்லா சீனுமே புதுசு'' என்கிறார் மணிகை. வாடா போடா நண்பர்கள்! டைட்டிலை தயாரிப்பாளர் கவுன்சிலில் ரிஜிஸ்டர் செய்தவுடனேயே அவர்களிடமிருந்து தலைப்புக்காகப் பாராட்டுப் பெற்றாராம் மணிகை. ஹீரோ நந்தாவும், ஹீரோயின் யஷிகாவும் கானல் நீரை குடிக்கிற மாதிரி ஒரு சீன் எடுத்தோம். சரியான மொட்டை வெயில். அதையும் பார்க்காம நடிச்சுக் கொடுத்தாங்க' என்கிறார் மணிகை.

- மகிமை

தெரியுமா?'' என்று ஆரம்பித்தான். முன் வரிசையில் அமர்ந்திருந்த மாணவிகள் கோரசாகத் ''தெரியாதே'' என்றார்கள். அடுத்த வாக்கியத்துக்கான நகர்வு புரிபடாமல் மறுபடியும் கேட்டான். நாலாவது வரிசையில் அமர்ந்திருந்த ராக்கெட் எட்வின் ''அடுத்த செமஸ்டர்ல பாத்துக்கலாம் விடு பாஸ்'' என்றான். வகுப்பு சிரித்தது. ஆனந்துக்குத் தொப்பலாக வியர்த்து விட்டது. வகுப்பின் இடது மூலையில் அமர்ந்திருக்கும் விந்தியாவின் பக்கத்தில்தான் ஸ்விட்சுகள் இருந்தன.

''விந்தியா ப்ளீஸ் அந்த ஃபேன் ஸ்விட்சை போடுங்க.''

விந்தியா எழுந்து 'ஆன்' செய்தாள்.

மேலே 'ஆன்டிக்' வகையறாவில் வைக்கப்பட வேண்டிய மின்விசிறி கொஞ்சமாக உயிர் பெற்று சின்ன ஓசையோடு நின்று விட்டது. 'நான் சர்வபள்ளி ராதா கிருஷ்ணனுக்கு விசிறியவனாக்கும். உங்களுக்கெல்லாம் விசுறுவேனா?' என்பது போல.



ஆனந்த், மேலே தொங்கிய மின்விசிறியையே ஓர் நொடி உற்றுப் பார்த்தான். வகுப்பைப் பார்த்து மின் விசிறியைக் காட்டி ''இதற்குத்தான்'' என்றான். ''இப்படிச் சுழலாமல் இருக்கின்ற மின்விசிறிகளை அகற்றிவிட்டுப் புதிய மின் விசிறிகள் பொருத்தப்பட வேண்டும். அது சாத்தியமாக வேண்டுமென்றால் உதயகுமார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.'' முதலில் ராக்கெட் எட்வின் கை தட்டினான். மாணவிகள் எழுந்து நின்று கை தட்டினார்கள். எலக்ட்ரான்களையும் தனிமங்களையும் 'அம்போ'வென்று அந்தரத்தில் தொங்க விட்டுவிட்ட கடுப்பில் இருந்த விரிவுரையாளர் கனகராஜும் புன்னகைத்தார்.

நேற்றோடு பிரசாரம் ஓய்ந்தது. நாளை நடைபெறப்போகும் தேர்தலில் சதீஷின் அடாவடித்தனங்களை எப்படி எதிர்கொள்வது என்று உதயகுமாரின் குழு கூடிப் பேசியாக வேண்டும்.


''சரியா பதினோரு மணிக்கு நாம எட்டுப் பேரும் அசெம்பிள் ஆவணும்'' எனச் சொன்ன உதயகுமாரையே பார்த்துக் கொண்டிருந்தாள் அகிலா.

பிரசாரத்துக்கு என்றே பத்து செட்

சுடிதார் தைத்து இருந்தாள். ஒவ்வொன்றும் ஒரு ஒரு டிசைன். துப்பட்டாவில் 'வோட் ஃபார் உதயகுமார்' என்று முதல் நாளில் எம்ப்ராய்டரி செய்திருந்த எழுத்துகள் கல்லூரியை ஈர்த்தது.

'அகில் இது என்ன துகில்' என்று புருஷோத் துப்பட்டாவைத் தொட்டுப் பார்த்தான்.

''நாளைக்குத் துப்பட்டாவில் என்னடி



ஃபோன் கட் ஆனது. ஆனந்த் எழுந்து கல்லூரிக்கு வெளியே வந்து நடக்கத் தொடங்கினான்.

எம்ப்ராய்டரி பண்ணியிருக்க'' என நிஷா கேட்க, ''வேற என்ன, உதயகுமாரே எனது இதயகுமார்ன்னு பண்ணியிருப்பா'' வசுமதி கிசுகிசுத்தாள்.

''பதினோரு மணிக்கு கேண்டின்ல மீட் பண்ணிப் பேசலாமா தலைவா'' என்றான் ராஜாமணி.

''டேய் நாம பேசப் போறது ரொம்ப சீரிய சான மேட்டர்ஸ். எதிர்க்கட்சிக் காரனுக்குத் தெரியக்கூடாது. அவன் நிறைய உளவுப்படை வெச்சிருப்பான்.''

''பீச்சுல ?'' என்று கேட்ட அகிலாவைக் குறும்பாகப் பார்த்த வசுமதி, ''பார் தனி ட்ராக் போடறா'' என நிஷாவின் தோளை இடித்தாள்.

''ஓ.கே. ஃப்ரண்ட்ஸ் அவுங்க வராத இடம். சேஃப்பான இடம் எதுன்னு யோசிச்சுச் சொல்றேன். நாளைக்கு ஃபோன் வரும். வந்து சேருங்க'' சொல்லிவிட்டு பைக்கை ஸ்டார்ட் செய்து புறப்பட்டு விட்டான் உதய குமார்.

நூலக நுழைவாயிலில் இருந்த வருகைப் பதிவேட்டில் பெயர் 'மன்மோகன் சிங்' தொழில் 'பிரதமர்' என எழுதிக் கையெழுத் திட்டு விட்டு உள்ளே போனான் ஆனந்த்.

ஃபிளாசபி புத்தக அடுக்குகள் பக்கத்தில் இருந்த நாற்காலிகளில் வரிசையாக வசுமதி, நிஷா, அகிலா, புருஷோத், ராஜாமணி, சத்யா ஆறுபேரும் ஆளுக்கொரு தடிமனான புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தனர். ஆனந்தும் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய் அமர்ந்தான்.

அகிலா, தமது இன்றைய ஸ்பெஷல் துப்பட்டாவைக் கழுத்தில் மாலை போல் போட்டிருந்தாள். அந்தத் துப்பட்டாவின் முனையில் சின்னதாக ப்ரெஞ்ச் கட் வைத்த ஓர் அழகிய முகம் வரையப் பட்டிருந்தது. இன்னமும் உதய குமார் வரவில்லை. ''மந்திரா லோசனைக்குச் சரியான இடம் தான்'' என முணுமுணுத்தான் ஆனந்த்.

வரலாற்றில் நிகழ்ந்திருக்கும் அத்தனை கலவரங்களுக்கும் சமாதானங்களுக்கும் புரட்சிகளுக்கும் புதுமைகளுக்கும் உற்பத்தி களுக்கும் அழிவுகளுக்கும் காரணங்களாக இருந்தவர்களின் நூல்களின் வரிசைகளுக்கு இடையே 'சரியான இடம்தான்'... என்று எண்ணமிட்டபோது, உதயகுமார் அவர்களை நோக்கி வந்தான். மாநிறமும் ப்ரெஞ்ச் கட் மீசையும் சேர்ந்து எப்போதும் ஒளிர்வதான ஓர் புன்னகைக் கவலையோடு நடையில் வேகமும் உறுதியும்.

உதயகுமார் அவர்கள் அருகே வந்து சொன்ன செய்தி ஏழுபேரையும் அதிர்ச்சியில் உறைய வைத்தது.

(தொடரும்)

அருள்வாக்கு

வழிகாட்டுங்கள்!

நிஜமான மநுஷ்யர்களாக நல்லபடி வளர்ச்சி பெறாமல் தாங்கள் வீணாகப் போய்விடக் கூடாது என்ற கவலை, தாபம், விசாரம் மட்டும் வாலிபர்களுக்கு இருந்துவிட்டால் போதும்; ப்ரியப்பட்டு மூக்கணாங்கயிறு போட்டுக் கொண்டு விடுவார்கள்; மற்றவர்கள் போடுவதற்கும் இஷ்டப்பட்டு விட்டுவிடுவார்கள்.

அவர்களுக்கு இந்தக் கவலையை எப்படி உண்டுபண்ணுவது? பெரியவர்கள்தான் விடாமல் ப்ரியத்துடனும் பொறுமையுடனும் எடுத்துச் செல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். அப்படிச் சொல்லவேண்டுமானால் சொல்பவர்களும் கட்டுப்பாடான வாழ்க்கை நடத்துபவர்களாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய வாயுபதேசத்துக்கு என்ன மதிப்பு இருக்கும்? அதற்கு யார் காது கொடுப்பார்கள்? அதுவும் generation gap என்று நன்றாகவே ஊறிப்போய்விட்ட இளந்தலைமுறைக் காரர்கள் கேட்பார்களா? அவர்களுக்காகவே gap தெரியாவிட்டாலும், இக்காலச் சிந்தனையாளர்களும், மனோதத்வ ஆராய்ச்சியாளர்களும் நவநாகரிகர்களும் சொல்லிக் கொடுத்தாவது இப்படி ஒரு gap-ஐ தெரிந்து கொண்டு விட்ட இளந்தலைமுறைக்காரர்கள் கேட்பார்களா?



தற்காலத்திலுள்ள பெரும்பாலான பெரியவர்கள் இந்தக் கட்டுப்பாடான வாழ்க்கை நடத்தும் விஷயத்தில் கேள்விக்குரியவர்களாகத்தான் இருப்பதாகத் தோன்றுகிறது. அவர்களுடைய வார்த்தைக்கு என்ன 'வால்யூ' இருக்கும்? ஆகையினால் இளம் தலைமுறையினரை உத்தேசித்தாவது வயதான தலைமுறையினர் நன்னெறிகளில் - நல்லொழுக்கங்கள் என்கிறவற்றில் - கட்டுப்பட்டு வாழ ஆரம்பிக்க வேண்டும். அதை அடுத்த தலைமுறையினருக்கும் உரிய முறையில் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

சேனல் சாய்ஸ்

சன் டி.வி.யின் 'தங்கம்' தொடர் உண்மையிலேயே தங்கம்தான். கலெக்டராக நடிக்கும் ரம்யாகிருஷ்ணன், அய்யாவாக நடிக்கும் விஜயகுமார் உள்பட அனைவருமே அற்புதமாக நடிக்கிறார்கள். இரண்டு மனைவிகள் என்றாலே சண்டை, மோதல் என்றில்லாமல் ஒற்றுமையுடனும் இருப்பார்கள் என்று இந்தத் தொடரைத் தருவது ரசிக்க வைக்கிறது. இளவஞ்சியாக நடிக்கும் காவேரிக்கு இந்தத் தொடர் ஓர் திருப்புமுனை. கிராமியச் சூழலில், இயற்கை எழில் மிகுந்த காட்சிகளுடன் இந்தத் தொடரை எடுத்து இருப்பது சூப்பர்ப்.

- ஆர்.தியாகராஜன், திருவண்ணாமலை





ராஜ் டி.வி.யில் ஒளிபரப்பாகி வரும் 'சிந்து பைரவி' மெகாத் தொடர் படு க்யூட்! ஓர் ஏழைச் சிறுமி (சிந்து)க்கும் பணக்காரச் சிறுமிக்கும் (பைரவி) இடையில் ஏற்படும் நட்பையும் மன ஓட்டத்தையும் வைத்தே கதை பின்னி இருப்பது அருமை.

சிந்துவாக நடிக்கும் சிறுமியின் நடிப்பும் அவளது ஏக்க உணர்வுகளும், அவளை அரவணைக்கும் தாய் தாமரையின் வேதனைகளும் பார்ப்பவர் நெஞ்சை நெகிழச் செய்து விடுகின்றன! குடும்ப உறவுகள்... சந்தேகம்... கொலை... வில்லத்தனம்... மாமியார் மருமகள் - நாத்தனார் கொடுமை எனத் தமிழ் சீரியல்கள் பார்த்துவிட்ட நமக்கு 'சிந்து பைரவி' செமத் தித்திப்பு!



- எஸ்.மீனலோசினி, விருதுநகர்

டி.வி.யில் உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி எதுவாயினும்... 'சேனல் சாய்ஸ்' என்ற



தங்கம் தங்கம்தான்!



வஸந்த் டி.வி.யில் 'கதை கேளு... கதை கேளு...' என்று சிறுவர்களுக்கான பொம்மலாட்ட நிகழ்ச்சியை ஒளிபரப்புகிறார்கள். ஒரு கோமாளி மாமா சிறுவர்களுக்குக் கதை சொல்வதுதான் நிகழ்ச்சி. ஒவ்வொரு கதையும் ஒரு முத்து! வாழ்வில் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை மனத்தில் பதியும்படி நாடக வடிவில் கொடுத்திருக்கிறார்கள். இந்த வார எபிசோட் ஒன்றில், சிறு பெண், கோமாளி மாமாவிடம், பக்கத்து வீட்டுப் பையன் தம்மைத் தவறான முறையில் தொடுவதை அம்மாவிடம் கூட சொல்ல முடியாமல் பயப்படுவதைக் கூற, கோமாளி மாமா ஒரு கிழவி வேடத்தில் போய் அப்பெண்ணின் தாய்க்கு விஷயத்தைப் புரியவைப்பதாக வெகு நேர்த்தியாகக் காட்டியிருக்கிறார்கள்! கடைசியாகக் கோமாளி மாமா கூறும் அறிவுரைகள் இரண்டு: 1. தகாத முறையில் யார் நடந்தாலும் அம்மாவிடமோ, ஆசிரியையிடமோ, சிநேகிதியிடமோ தயங்காமல் வெளிப்படுத்த வேண்டும்.

2. கோமாளி மாமா மாதிரி உதவிக்கு யாராவது வருவார்கள் என்று நினைக்காமல் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தானே சமாளிக்கும் தைரியம் வேண்டும்!

மொத்தத்தில் இந்த 'புரோக்ராம்' சிறுவர்களுக்கு மாத்திரமல்லாமல் பெரியவர்களுக்கும் மிகவும் உபயோகமான ஒன்று!

- விஜயா ராஜன், கோரமங்களா

சேனலில் நான் விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சிகளுள் காஃபி வித் அனுவும் ஒன்று. காரணம், பேட்டி எடுக்கும் அனு, தாம் அதிகம் பேசாமல் விருந்தினரைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொண்டு, அதைப் போட்டுடைத்து அவர்களைப் பேச வைப்பதுதான். ஆரம்பத்தில் அதிகமாக உபயோகித்த ஆங்கிலத்தையும் போகப் போகக் குறைத்துக் கொண்டது பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

- பானுமதி வெங்கடேஸ்வரன்,
ராமாபுரம்

குறிப்பிட்டு எழுதுங்க. kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

காஞ்சிபுரத்தின் இருபத்தோரு கூட்டுறவு சங்கங்கள், பத்து தனியார் பட்டுச் சேலை உற்பத்தியாளர்கள் இப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள். காரணம், இவர்களைத் தவிர வேறு யாரும் காஞ்சிப்பட்டு என்ற பெயரால் பட்டு சேலையை உற்பத்தி செய்து, விற்க முடியாது. வேண்டுமானால் வாங்கி


சஞ்சய் காந்தி

காஞ்சிப் பட்டுக்குக்

பட்டியலே இருக்கு : ஈரோடு மஞ்சள், சென்னிமலை பெட் ஷீட், சிறுமலை மலை வாழைப்பழம், பழனி விருப்பாட்சி வாழைப்பழம், போடி ஏலக்காய், ஊத்துக்குளி வெண்ணெய், நீலகிரி டீ, சேலம் மாம்பழம், கிருஷ்ணகிரி ரோஜா, மதுரை மல்லி, சிவகாசி பட்டாசு, வேதாரண்யம் உப்பு, பத்தமடை பாய், மகாபலிபுரம் சிற்பம்... இவற்றுக்கெல்லாம் புவிசார் சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்க இருக்கிறார் சஞ்சய் காந்தி.

விற்கலாம். காரணம், சென்னையில் உள்ள அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தில் காஞ்சிபுரப் பட்டின் தனித்தன்மை பதிவு செய்யப்பட்டு, புவிசார் குறியீட்டு (ஜியோகிராபிகல் இண்டிகேஷன்) சான்றிதழ் வாங்கியிருக்கிறார் சென்னையைச் சேர்ந்த அறிவுசார் சொத்துரிமை வழக்கறிஞரான சஞ்சய் காந்தி. காஞ்சிப் பட்டுக்கு மட்டுமில்லை; பவானி ஜமுக்காளம், மதுரைச் சுங்கிடி புடைவை, சேலம் வெள்ளைப் பட்டு, கோவை கோரா காட்டன், ஆரணிப் பட்டு, தஞ்சாவூர் ஓவியம், தலையாட்டி பொம்மை, ஈத்தாமொழி உயர் ரக தென்னை (கன்னியாகுமரி மாவட்டம்), தங்காலியா சால்வை (குஜராத்) எனப் புகழ்பெற்ற ஐட்டங்களுக்கு ஜி.ஐ. சான்றிதழ் பெற்றுக் கொடுத்திருக்கிறார் சஞ்சய் காந்தி. அவரைச் சந்தித்தபோது...

சட்டம் வந்தது : ''உலக வர்த்தக அமைப்பில் உறுப்பு நாடான இந்தியா, வர்த்தகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை (டிரிப்) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அதன்படி, எந்த ஓர் உறுப்பு நாடும் தங்கள் நாட்டில் உற்பத்தி செய்யும் பொருளை இந்தியாவில் விற்பனை செய்யலாம். அதற்குண்டான சட்டரீதியான பாதுகாப்பினை அளிக்கவேண்டிய கடமையும், பொறுப்பும் இந்தியாவுக்கு உண்டு. அதேபோல இந்தியாவில் உற்பத்தியாகும் பொருட்களை உலக வர்த்தக அமைப்பைச் சேர்ந்த எந்த நாட்டிலும் நாம் விற்பனை செய்யலாம். அப்படிச் செய்யும்போது இங்கு உற்பத்தியாகும் பிரத்யேகமான பொருட்களின் தனித்தன்மையைப் பாதுகாக்கச் சட்டபூர்வமான சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம். அதன்படி 1999ஆம் ஆண்டில், இந்தியாவில் புவிசார் குறியீடு பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. அதில் இந்தியாவில் மொத்தம் 132 பொருட்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.''

சிலப்பதிகாரத்தில் காஞ்சிப் பட்டு : ''ஒரு பொருளுக்கான புவிசார் குறியீட்டுச் சான்றிதழ் பெற விண்ணப்பிக்கும்போது,

அந்தப் பொருளுக்கு உரிய தனித்தன்மை, பழைமையான வரலாறு, அந்தக் குறிப்பிட்ட பூகோளப் பகுதிக்கு மட்டுமே அது சொந்தமானது என்பதற்கான ஆதாரங்கள்... போன்றவற்றை அளிப்பதுடன், அதற்குரிய கட்டணத்தையும் செலுத்த வேண்டும். நிபுணர்கள் அடங்கிய குழுவால் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டுப் பின்னரே சான்றிதழ் வழங்கப்படும். காஞ்சிப் பட்டின் பழைமைக்கும் சிறப்புக்கும் ஆதாரமாக சிலப்பதிகாரத்தில் வரும் பகுதிகளையும், இந்திய அரசின் கெசட், காஞ்சிபுரம் மாவட்ட கெசட் இரண்டிலும் வெளியான காஞ்சிப் பட்டு பற்றிய குறிப்புகளையும் சமர்ப்பித்திருந்தேன். சான்றிதழ் பெற்ற பொருட்களின் தரம் ரொம்ப முக்கியம். எங்கே, யாரால் அந்தப் பொருள் தயாரிக்கப்பட்டது என்பது அந்தப் பொருளிலேயே குறிப்பிடப்பட வேண்டும். தயாரிப்புக்கென தனி முத்திரையையும் வைத்துக் கொள்ளலாம். இது போலிகளை அடையாளம் காணவும் உதவும்.''



காப்புரிமை!

சஞ்சய் காந்தி ஆன செந்தில் குமார் : சஞ்சய் காந்தியின் இயற்பெயர் செந்தில்குமார். இவர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சமயம், முன்னாள் பிரதமர் இந்திராவின் இரண்டாவது மகனான சஞ்சய் காந்தி விமான விபத்தில் மரணமடைந்த செய்தி கேட்டுத் துடித்துப்போன செந்தில்குமாரின் தாத்தா, தன் பேரனை அழைத்து, ''பேராண்டி! இனிமே உன் பேர் செந்தில்குமார் இல்லை; சஞ்சய் காந்தி'' என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு முறைப்படி பெயரை மாற்றியிருக்கிறார்.

பணத்துக்காக இல்லை : ''நான் தொழில் ரீதியாக வழக்கறிஞர் என்றாலும், நம் பாரம்பரியத்தின் மீது கொண்ட ஆழமான ஈடுபாடு காரணமாகத்தான் புவிசார் குறியீட்டுத் தொடர்பான பணிகளைச் செய்து வருகிறேன். இதற்காக நான் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து சட்ட ஆலோசனைக் கட்டணம் எனப் பெரிதாக எதுவும் வாங்குவதில்லை. சில சமயங்களில் கைக்காசு செலவழித்திருக்கிறேன். மகாத்மா காந்திஜிக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அவர் அளித்த கதருக்கு ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான புவிசார் குறியீடு பெறுவதுதான் என் இலட்சியம்'' என்கிறார் சஞ்சய் காந்தி.

- சந்திரமௌலி



காதல் மன்னன் ஜெமினி கணேசனின் தீவிர ரசிகன் நான். அவருடன் எடுத்துக் கொண்ட இந்தப் புகைப்படம் என் பொக்கிஷம். காரணம், ஜெமினி கணேசன் பிறந்த நட்சத்திரத்தில் அவரின் இல்லத்தில் குறிப்பிட்ட என்னைப் போன்ற ரசிகர்கள் அவரின் நலன் கருதி ஹோமம் நடத்தினோம். மிகவும் இன்பமான சூழ்நிலையில் 1972ல் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது!

- ஜெமினி ஸ்ரீதர்,
நங்கநல்லூர்.

வாசகர்களே! திருமண ஃபோட்டோ மட்டுமல்ல, நீங்கள் பெரிதும் ரசிக்கும், பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் 'ஜம்முன்னு' எழுதி அனுப்புங்க...

கல்கியில் விஜயின் அம்மா ஷோபா சந்திரசேகர் பல வாரங்கள் விஜய் பற்றியும் அவரின் திரைப்படங்கள், அனுபவங்கள் பற்றியும் 'என் செல்ல தளபதி' என்ற தொடர் எழுதி வந்தார். அப்போது கல்கி நடத்திய விஜய் வின்னர்ஸ் போட்டியில் வெற்றி பெற்றேன். பரிசைப்பெற விஜயிடம் கல்கி பத்திரிகை அழைத்துச் சென்றபோது எடுத்த புகைப்படம் இது! அடிக்கடி எடுத்துப் பார்த்துக் கொள்வேன்!

- அலமேலு இராசகோபால்,
மேற்கு மாம்பலம்.



அண்ணா பல்கலைக் கழக மாணவர்களான நாங்கள் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமைச் சந்தித்த அன்று ராஜீவ்காந்தி இறந்த தினம் (பயங்கரவாத எதிர்ப்பு / ஒழிப்பு





தினம்). கடுமையான சோதனைகளுக்குப் பிறகே அவரைப் பார்க்க விட்டார்கள். அவரோ மிக எளிமையாகப் பேசினார்.

எல்லோரிடமும் மட்டுமல்லாமல் எனக்கே என்னை அறிமுகம் செய்யும் புகைப்படம் இது.

- ஆர். கார்த்திகேயன்.
பெங்களூரு.



ஃபோட்டோவுடன் இடம்பெறும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் பரிசு ரூ.50/.

முன்னாள் குமரி மாவட்ட கலெக்டர் எஸ்.ஜே.சிருவின் மகன் டேவிட் என்னிடம் எல்.கே.ஜி. படித்தான். கலெக்டரும், அவருடைய துணைவியாரும் மற்ற பெற்றோர்கள் போலவே வந்து அவனது வகுப்பாசிரியையான என்னைச் சந்திப்பார்கள். வீட்டுக்கு அழைத்து விருந்தும் கொடுத்தனர். அவர்கள் தேனிக்கு மாற்றலாகிச் செல்லும் போது எனது வகுப்பறையில் டேவிட்டோடு நான் எடுத்துக் கொண்ட ஃபோட்டோ இது!

-சித்ரா கென்னடி,
நாகர்கோவில்

தேரழகு... பேரழகு

மரத்தில் இழைத்த பெருவடிவம்
உருளும் பெரிய சக்கரங்கள்
உளியால் எழுதிய சிற்பக்கதைகள்
அருளைப் பொழியும் தேவதைச் சிலைகள்
கிணுகிணுக்கும் வெண்கல மணிகள்
பளபளக்கும் பட்டுத்துணிகள்
அசைந்தாடும் தோரணங்கள்
வண்ணவண்ண மலர்ச்சரங்கள்
உச்சியில் அசையும் கொடி
ஊர்வலம் வருகின்ற தெய்வம்
அனைத்தும் அழகுதான்
ஆயினும் பேரழகு
ஆயிரம் கைகளை இணைக்கும் வடம்.

- இரா.சிவசுப்பிரமணியன்



இப்படியும் இருக்கலாம்

பருவம் தவறாமல்
ஆட்டுக்கடை போடுபவர்
முத்தையா கோனார்.
நட்டக் கணக்குச் சொல்லிக்கொண்டே
எல்லா வருடமும் வருவார்
முப்பது கிலோமீட்டருக்கு
அந்தப் பக்கம் இருந்து
இங்கு வந்து கடை
போட்டதற்கான காரணம்
கோனார் இறந்தபோது
மாரடித்து அழுத
மோர்க்கார முத்தாச்சியாய்க்கூட
இருக்கலாம்.

- லதாமகன்

உறங்கும் காகிதக் கப்பல்

கழுவப்பட்ட இலைகள்
அழகாயிருந்தன.
காளான்கள் முளைத்திருந்தன
அருகருகே.

சாலை பள்ளங்களில்
நிறைந்த மழையில்
அசைகின்றன பிம்பங்கள்.

வெளிவரவிடாமல்
வீட்டிற்குள்ளே அடைக்கப்பட்ட,
என் காகிதக் கப்பல்
ஒருக்களித்து உறங்குகிறது
அறிவியல் புத்தகத்துள்!

- ஜா.பிராங்க்ளின்குமார்

வாசகர்களே! உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு



கருநிறக் கனிகள்

வெளியின் பெரும்பகுதியை
முயன்று நிரப்பியிருக்கும் அந்த மாமரம் நோக்கி
கல்லொன்றை அச்சிறுமி விட்டெறிந்ததும்
திடுமென அதிர்ந்த பறவைகளனைத்தும்
அச்சம் கலந்த ஒலியுமிழ்ந்து சிதற
விருட்டென சிறகு முளைத்தவளாய்
தானும் பறக்கிறாள் கனிகள் பொறுக்க.
அவளது கைக்குச் சிக்காமல்
மண்ணில் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன
கருநிறக் கனிகளென பறவைகளின் நிழல்கள்.

கட்டளையல்ல

எங்கள் நிறுவனத்துக்கு
விருந்தினராய் வந்திருந்த உங்களை
வெகுபத்திரமாய் வழியனுப்புவதற்கென
நியமிக்கப்பட்ட நான்
உங்களின் மிகச்சிறந்த சேவகன் என
ஊதியத்தை மனத்தில் வைத்து
நடித்து முடித்தாலும்
இறுதியாய் ரயில் மெல்ல ஊர்ந்தோடத்தொடங்கியதும்
ஜன்னலில் நீண்ட உங்கள் செல்ல மகளின்
பிஞ்சுக் கையசைப்புக்கு
பதில் கையசைப்பு நான் செய்ததில்
எங்கள் நிறுவனத்தின்
கட்டளைகள் ஏதுமில்லை.

- பா.ராஜா

'கவிதை கஃபே' பகுதியில் இடம்பெறும் கவிதைகளுக்கு சன்மானம் உண்டு.

றிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.





இன்ஸ்பெக்டர் தலையில

''வரவர டி.வி.ல 'அழுகை' அதிக மாயிடிச்சு இல்ல!''

''மெகா சீரியலைச் சொல்றியா?''

''அதைவிடு, 'டான்ஸ், பாட்டு' போட்டிகளைப் பத்திச் சொன்னேன்!''

– டாக்டர்.வெ. சீதாராமன்

''அண்ணே! நம்ம கட்சி எந்தக் கூட்டணியில் இருக்கு?''

''பேசாமல் இருப்பா. அதைத் தெரிஞ்சுக்கத்தான் இந்தப் பொதுக்குழுக் கூட்டமே நடந்துகிட்டுருக்கு!''

- ஞா.ஞானமுத்து

''என்னங்க என்னைப் பொண்ணு பார்க்க வந்த அன்னிக்கு என்ன நினைச்சிங்க?

''வம்பை நாமளே தேடிப் போய் வாங்கப் போறமேன்னு நினைச்சேன்''

-பி.பாலாஜிகணேஷ்





''இன்ஸ்பெக்டர் இடிவிழுந்தாப் போல உட்கார்ந்திருக்காரே, ஏன்?''

''கபாலி வந்து 'அரசியல்ல குதிக்கப்போறேன்'னு சொன்னானாம்!''

-பா. மனோகரன்





''எடை பார்க்கும் மிஷினை எதுக்காக முறைச்சு, முறைச்சுப் பார்க்கிறே... அப்படி கார்டுல என்னதான் போட்டிருக்கு?''

''தயவுசெய்து யானையை ஏற்றாதீர்கள்'ன்னு போட்டிருக்கு!''

- ஜி. சுந்தரராஜன்



''புது சமையல்காரர் சரியா சமைக்காததால, என் ஒய்ஃப் அவரையும் வேலைய விட்டுத் தூக்கிட்டா!''

''பெட்டர் 'குக்' நெக்ஸ்ட் டைம்!''

- டாக்டர்.வெ. சீதாராமன்

பரிசுபெற்ற குறும்படம்

நாங்களா திருடர்கள்?

திரைப்பட வசனகர்த்தா ஆரூர்தாஸின் உதவியாளர் ஏ.ஆர்.சுப்புராஜ் இயக்கி, நடித்திருக்கும் 'பயணம்' குறும்படம் சமீபத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

நெய்வேலி புத்தகக் கண்காட்சியின் குறும்படப் போட்டியில் முதல் பரிசையும், சென்னை வர்த்தக மையத்தில் நடத்தப்பட்ட குறும்படப் போட்டியில் இரண்டாவது பரிசையும் பெற்ற 'பயணம்', நாகர்கோவில் வட்டாரத்தின் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டது.

வட இந்தியாவில் மனநிலை சரியில்லாத முதியவர்களைப் பராமரிக்கத் திராணியில்லாதவர்கள், தென்னிந்தியாவுக்கு வரும் இரயில்களில் ஏற்றிவிடுவது வழக்கம். இரக்கமற்ற இச்செயல் காரணமாக, தமிழகத்தின் தென்மாவட்டங்களில் கவனிப்பாரற்றுத் திரியும் பரிதாபத்துக்குரிய ஜீவன்களின் பின்னணி எத்தனை குரூரமானது என்று இப்படம் உணர்த்துகிறது.

மும்பை அடுக்குமாடிக் குடியிருப்பில் நல்ல வசதியோடு வாழ்ந்துகொண்டிருக்கும் வட இந்தியக் குடும்பத்தில் நான்கு சகோதரர்கள். அவர்களைப் பாசத்தோடு வளர்த்து ஆளாக்கிய தந்தைக்கு, மனநிலை பிறழ்ந்து விடுகிறது. தந்தையின் வீட்டை விற்று நான்கு பிள்ளைகளும் பல லட்ச ரூபாய் பங்காகப் பெறுகிறார்கள். ஆனால் ஒருவருக்கும் தந்தையைத் தங்களோடு வைத்துக்கொள்ள இஷ்டமில்லை. முடிவில் கன்னியாகுமரி செல்லும் இரயிலில் அவருக்கு டிக்கெட் எடுத்து ஏற்றி விட்டுவிட்டுத் தங்கள் பொறுப்பிலிருந்து நழுவிவிடுவது அவர்கள் திட்டம். அதன்படி அவர் ஏற்றிவிடப்படுகிறார். அதே இரயிலில் வயிற்றுப்பிழைப்புக்காகச் சிறு சிறு திருட்டுக்கள் செய்துவரும் சிறுவர்கள் இருவர் கன்னியாகுமரிக்குப் பயணிக்கிறார்கள்.

பசிக்கும்போது 'கானா' 'கானா' என்று சொல்வதைத் தவிர வேறொன்றும் சொல்லத் தெரியாத அந்த முதியவரின் செய்கைகள், முதலில் அச்சத்தோடும் பின்பு கவலையோடும் கவனிக்கப்படுகின்றன. இரயில் ஒவ்வொரு மாநிலமாகக் கடந்து தமிழகத்துக்குள் நுழைகிறது. சிறுவர்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் சிறு சிறு பொருட்களைத் திருடுகின்றனர். பெரியவருக்கு ஒன்றிரண்டு தின்பண்டங்கள் தின்னக் கிடைக்கின்றன.



சிறுவர்களில் ஒருவனுக்கு, தான் மும்பையில் திருடச் சென்ற வீட்டில் இப்பெரியவரைக் கட்டிப் போட்

டிருந்தது நினைவுக்கு வருகிறது. யாரோ வரும் சந்தடியில் மறைந்திருந்து, அங்கு வந்த அவரின் மகன்கள் நால் வரையும் அவர்களின் திட்டத்தை யும் கேட்டவன் சந்தடியின்றி நழுவி யதையும் ஞாபகப்படுத்திக் கொள் கிறான். ஆக அவர்கள் திட்டப்படி அவரை அநாதரவாக இரயிலேற்றி விட்டிருக்கிறார்கள் என்று புரிந்து





சுப்புராஜ்

போகிறது. சிறுவன், தன் நண் பனிடம் பெரியவர் பற்றிய உண்மைகளைச் சொல்லி, அவரைக் காப்பாற்றிப் பராமரிக்கலாமென அனு தாபத்தோடு சொல்கிறான். தங் களது பல தவறுகளுக்குப் பிராயச்சித்தமாய் அது இருக்கட்டுமென அவர்கள் முடிவுசெய்கின்றனர். கருணையுடன் அவரை அணுகும் போது, பழைய திருட் டுக்களுக்காக அவர்களைத் தேடிக்கொண்டிருக்கும் காவலரிடம் மாட்டிக் கொள்கின்றனர்.

''வாங்கடா திருட்டுப் பசங்களா'' என்றபடி தங்களைப் பிடித்துக்கொள்ளும் காவலரிடம், ''அந்தப் பெரியவ ரோட பிள்ளைகளை என்னன்னு சொல்வீங்க?'' என்று அந்தச் சிறு வர்கள் கேட்கும் காட்சி, பார்வை யாளர்களான நம்மைச் சுடுகிறது.

பெரியவர், யாரும் கவனிப் பாரற்று, 'கானா... கானா' என்றபடி நடந்து செல்கிறார் தனியாக...

நெஞ்சைப் பிழியும் இந்தக் காட்சியுடன் படம் முடிவடைகிறது!

பயணம் குறும்படத்தில் மனநிலை பிறழ்ந்த முதியவராக நடித்திருக்கும் இயக்குநர் சுப்புராஜின் தந்தை எஸ். அருணாச்சலம் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவில் மேலாளராக ஓய்வு பெற் றவர். அவ்வப்போது, அவரது சொந்த ஊரான நாகர்கோவிலில் நாடகங்களில் நடித்திருக்கிறார். பின், பணிச்சுமை காரணமாக நடிக்கமுடியாத ஏக்கத்திலேயே இருந்திருக்கிறார்.

அண்மையில் அருணாச்சலத்தின் ஐம்பதாவது திருமண நாளைக் கொண்டாட, அவரது பிள்ளை கள் ஏ.ஆர். சுப்புராஜ் உள்பட நால்வரும் முடிவு செய்தபோது, அவருக்கு என்ன பரிசளிக்கலா மென்ற பலத்த ஆலோசனைகளுக்கு இடையில் சுப்புராஜ் தம் குறும்படத்தில் அவரை நடிக்க வைக்கும் யோசனையைச் சொல்லியிருக் கிறார்.

தத்ரூபமான நடிப்பு, அந்தக் கதா பாத்திரத்தின் மீது ஈரம் கசிந்த பார்வை யைப் பதியச் செய்கிறது. அவர் தமது யதார்த்தமான நடிப்பாற்றலால், அந்தக் கதைக்கு உயிரூட்டியுள்ளார். சுப்புராஜ் ஏற் கெனவே இயக்கிய 'செடி' என்ற குறும் படம், திருப்பூர் அரிமா சங்கப் பரிசு, திருச்சி லயன்ஸ் க்ளப்-கிழக்குவாசல் உதயம் குறும்படப் போட்டியில் பரிசு, சென்னை prime force academy பரிசு உள்ளிட்ட பல பரிசுகளை வென்றுள்ளது.

நெய்வேலி பாரதிக்குமார்

“இங்கே எல்லா அரசியல்வாதிகளும் சாதியை வெச்சித்தானேய்யா அரசியல் பண்றாங்க'' சமீபத்தில் மதுரைப் பக்கம் நடந்த சாதிச் சண்டையில் நாலைந்து பேர் செத்துப் போனதைப் பற்றிப் பேச்சு வந்தபோது,. மதிவாணன் என்கிற எங்கள் மதிப்புக்குரிய மதி சார் இப்படித்தான் தம் பேச்சை ஆரம்பித்தார்.

அப்போது ஈஸ்வரி லாட்ஜ் வாசலில் ஒரே கூட்டமாயிருந்தது. தடித்த பேச்சுகளும், அழுகைக் குரல்களும் கேட்கின்றன.

'' டாய்... டாய்... புடி...



அவனை... அடிப்பாவி... இது அடுக்கு மாசு? ''

என்னவோ பிரச்னை வெடித்திருக்கிறது. இது போன்ற விஷயங்கள் மதி சாருக்கு அல்வா சாப்பிடற மாதிரி. அங்கே சிவப்பாய், அழகாய் பாவாடை தாவணியில் ஒரு பெண் நிற்க, அவள் கையைப் பற்றிக்கொண்டு ஒரு சிவப்புச்சட்டை இளைஞன் நின்றிருந்தான். எதிரே அழுதபடி சற்று வயதான தம்பதியும், அவர்களை ஆற்றுப்படுத்தியபடி நீலக்கலர் சட்டையில் ஒரு வாலிபனும் நின்றிருந்தனர். வாலிபன் அவர்களின் மகனாயிருக்க வேண்டும். ஜாடை தெரிகிறது.

''காதல் ஜோடி விவகாரம்'' - மதி சார் கண் சிமிட்டினார்.

''ரெண்டும், ரெண்டுநாளா இந்த லாட்ஜ்லதான் தங்கி இருக்குதுங்களாம். பெத்தவங்க ரெண்டு நாளா தேடித்தேடி இப்பத்தான் புடிச்சிருக்காங்க. என்ன தைரியம் பாருங்க '' - தினகர்.

பெரியவர் வேகமாய் வந்து சிவப்புச் சட்டைக்காரனைப் பிடித்து உலுக்கினார்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான சிறுகதைகள்

6

தோற்றப்பிழை

''டேய்... பாவி! புள்ளை மாதிரி நெனைச்சிருந்தோம். இப்படிப் பண்ணிட்டியே? பலானவர் பொண்ணு வேற சாதிப் பையனோட ஓடிட்டான்னு தெரிஞ்சா காறித் துப்பிடுவாங்களே, எஞ்சாதி ஜனங்க. பெருமாளே! பெருமாளே! ஆ... ஆ...!''

நாலைந்துபேர் ஓடி சிவப்புச் சட்டையை அடிக்க ஆரம்பித்தார்கள். மதி சார் குறுக்கே பாய்ந்தார்.

''யோவ்! நிறுத்துங்க. ஏய்! நில்றா. இங்க வந்து அடிக்கிற வேலையெல்லாம் வெச்சிக்காதீங்க. நியாயத்தைப் பேசுவோம். பேசி முடிவெடுப்போம்.''

''டேய்! கதிர்வேலு! ஃப்ரண்ட்-க்கு அர்த்தம் தெரியுமாடா உனக்கு?'' சிவப்புச் சட்டை எந்தவிதப் பிரதிபலிப்புமின்றி நின்றான். கண்களைத் துடைத்துக்கொண்டு தங்கச்சியிடம் வந்தான்.

''மஞ்சு! என்னம்மா இதெல்லாம்? இவ்வளவு சின்ன வயசுலேயாவா? வேணான்டீ, இவன் நல்லவன் இல்லை. வந்துட்றீ !''

''நான் வரமாட்டேன்'' - அவள் தீர்மானமாகப் பேசினாள்.

அப்பா, ஓடி வந்து பெண்ணை அணைத்துக் கொண்டார்.

''மஞ்சு குட்டி...! அப்பா சொல்றதைக் கேளுடா. வாணான்டா, இவன் நல்ல பையன் இல்லை. துரோகி. சீரழிஞ்சிப் போயிடுவே.''

அந்தப் பெண் மூர்க்கத்துடன் அவரை உதறிவிட்டுச் சிவப்புச் சட்டைக்காரனிடம் போய் நெருங்கி நின்று கொண்டாள்.

''அடிப்பாவி! என்ன துணிச்சல்? காதலின் வலிமையைப் பாருங்கப்பா.'' - சொல்லிவிட்டு மதி சார் சிரித்தார்.

''பெரியவரே! அவதான் வரமாட்டேன்னு தீர்த்துச் சொல்றாளே. கவுரவமா இவனுக்கே கட்டிவெச்சிடு; தப்பில்லை.''

''யோவ்! இது மைனர் பொண்ணுய்யா; கடத்தியிருக்கான்.'' ஆளாளுக்குத் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருந்தார்கள். மதி சார் அந்தப் பெண்ணைக் கூப்பிட்டார்.

''இதோ பாரும்மா, எல்லோருமே இவன் நல்லவன் இல்லைன்றாங்க. நீ நிதானமா யோசிச்சி பதில் சொல்லு. உங்கப்பா கூட போவ சம்மதிக்கிறீயா? '' அவள் யோசிக்கவில்லை.

''மாட்டேன். என்னை இவர் கூட சேர்த்து வையுங்க. இவர் இல்லைன்னா செத்துடுவேன்'' - அந்தப் பெண் பித்துப் பிடித்தவள் போல் உரத்தக் குரலில் பேசினாள். பெற்றவர்கள் தலையில் கை வைத்துக்கொண்டார்கள்.

''ஐயா! விவரம் தெரியாத வயசுய்யா! வெகுளிப்பொண்ணு. கொழந்தை மனசை இப்படிக் கெடுத்து வெச்சிட்டானே சண்டா

செய்யாறு தி.தா.நாராயணன்

ளன்.''- மதி சார் போய் பெரியவர் கையைப் பிடித்தார்.

''இப்ப இவங்களைச் சேர்த்து வைக்க எதுய்யா உன்ன தடுக்குது? சாதியா?''

''ஆமாய்யா சாதிதான்.''

''ஐயா இப்படிச் சாதி சாதின்னு வெறி புடிச்சிக்கிட்டு அலையறீங்க? மாறிடுங்க. உம் பொண்ணுதான் ஸ்டெடியா நிக்கிறாளே விட்ருங்க!''

பெரியவர் சற்றுக் காட்டமாகப் பார்த்தார்.

''எங்களைப் பத்தி உங்களுக்கு என்ன சார் தெரியும்? ஊர்ல நாலு பேருக்கு வழிகாட்றாப்புல பெருமையா வாழ்ந்தோம். எல்லாம் போச்சு. நாட்ல புத்தி சொல்றதுன்னா வந்துட்றீங்க.''

''பெரியவரே! உங்க கவுரவத்தைவிட உங்க பொண்ணுடைய வாழ்க்கை பெருசு. எதையும் சுயநலமாய் முடிவு செய்யாதீங்க.''

''எதுய்யா சுயநலம்? அவனைப் பாரு பரம ஏழை. அடுத்த வேளை சாப்பாட்டுக்கே கஷ்டம். எங்கொழுந்தை செல்வாக்கா வளர்ந்ததாச்சே. எங்கபோய் சீரழிஞ்சிடுமோ? என்னா கஷ்டப்படுமோ? இதயெல்லாம் நெனச்சித்தான் அழுவறோம்.''

சொல்லிவிட்டுக் குழந்தையைப் போல் தேம்பினார். அவன் அலட்சியமாய் இந்தக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். அடுத்து பெரியவர் கண்களைத் துடைத்துக்கொண்டு சிவப்புச் சட்டைக் காரனை நெருங்கினார்.

''டேய் கதிர்வேலு! உனக்கும் எங்களுக்கும் என்னடா சம்பந்தம்? நீ இப்படிச் செய்ய லாமா? தர்மமா? காலேஜ்ல என்கூடப் படிக்கிற ஃப்ரண்டுன்னு என் பையன் உன்னைக் கூட்டியாந்தான். நீ ரொம்ப ஏழைன்னு சொல்லி ஒரு வருசமா உன் காலேஜ் ஃபீஸை அவன்தானே கட்டிட்டு வர்றான்? அவன் வாங்கிக்கொடுத்த புக்ஸைத்தானே படிக்கிறே? பாவி... பாவி! ஒரு வருஷமா சாப்பிட்டுட்டு அப்புறம் எப்படிடா சாப்பிட்ட வீட்டுக்கே துரோகம் பண்ண மனசு வந்துச்சி? பாவி இவளுக்கு என்னா வயசு? நல்லது கெட்டது தெரியுமா இதுக்கு? இவளை நாசம் பண்ணிட்டியே. வயிறெரிஞ்சி சொல்றேன், நல்லாயிரு. புண்ணியம்னு நெனைச்சது எங்குடிக்கு தீம்பா வந்து முடிஞ்சிட்டதே. பகவானே!''

அப்போதுதான் இங்கே கூடியிருந்த எல்லோர்க்கும் விவகாரத்தின் முழுப் பரிமாணமும் புரிந்தது.

அவர்களுடைய உறவினர்கள் ஒரு முடிவோடு பெண்ணைக் குண்டுக்கட்டாய்



தூக்கி வேனில் ஏற்ற முயற்சித்தார்கள். அவள் கை கால்களை உதைத்துக்கொண்டு கூச்சல் போட ஆரம்பித்தாள்.

பெரியவர், ''டேய்... டேய்! வாணாம் வுட்ருங்க. இங்கியே தலை முழுகிட்டுப் போவவேண்டியதுதான்.'' அதைக் கேட்டுவிட்டு அம்மாவும் பிள்ளையும் முகத்தைப் பொத்திக் கொண்டு குலுங்கினார்கள். பெரியவர் பிள்ளையைக் கூப்பிட்டார்.

''அப்பா! நான் சொல்றாப்பல செய். பொண்ணு புள்ளையை வேன்ல ஏத்திக்க. நம்ம ஜனங்களையும், கூட்டிக்கோ... இட்டும் போயி கோயில்ல தாலி கட்டி முடிச்சிட்டு அப்படியே போயி ரிஜிஸ்டர் ஆபீஸ்ல பதிவு

பண்ணி வுட்ரு. பெத்த கடனுக்குச் செய்ய வேண்டிய சீர்செனத்திகளுக்கு நான் ஏற்பாடு பண்றேன். ஒரு டெம்போ பேசி ஏத்தி அனுப்பிடலாம்.''

இவ்வளவு நடந்ததுக்கும் வாயைத் திறக்காமல் கல்லுளிமங்கனாட்டம் இருந்த சிவப்புச் சட்டைக்காரன் இப்போது முதல் முறையாக வாயைத் திறந்தான்.

''இந்தப் பொண்ணை நான் கட்டிக்கமாட்டேன்.''

''டாய்.. டாய்.. ராஸ்கோலு! உதைக்காம நீ வழிக்கு வரமாட்டடீ. வாத்தியாரே! நீங்க ஒத்துங்க. இன்னிக்கு உனக்கு நாயடி பேயடி தான்டியேய்!''

மதி சார் கையை உயர்த்திக் கத்திய கும்பலை அடக்கினார். எட்டிக் கொத்தாக அவன் ஷர்ட்டைப் பற்றினார்.

'' உண்ட வூட்டுக்கு ரெண்டகம் பண்ண பொறம்போக்கு. ஏன் கட்டிக்க மாட்டே ? ''

''இவள கட்டிக்கிட்டா அவங்க சொல் நாப்பல பூவாக்கு எனக்கு வழியில்ல. ''

''அதுக்கு. ''

''இவ அப்பா பேர்ல இருக்கிற நாலு ஏக்கரா எழுபது சென்ட் பம்ப் செட்டை எம்பேருக்கு எழுதி வெச்சா கட்டிக்கிறேன்.''

அவ்வளவுதான் மதி சார் பாய்ந்து விட்டார். பளார் பளாரென்று அறைந்து தள்ளிவிட்டார்.

அவன் பேசிய வார்த்தைகள் அவளுக்கு ஜீரணமாகவில்லை போலும். பேந்த பேந்த முழிச்சிக்கிட்டு நின்றாள். பெரிய அதிர்ச்சி. அவன் கையைப் பற்றிக் கொண்டிருந்த பிடியை எப்போதோ விட்டுவிட்டிருந்தாள்.

தினகரன் போய் சிவப்புச் சட்டைக் காரனிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்த மதி சாரை வேப்ப மரத்தினடிக்கு இழுத்துக்கொண்டு வந்தான். அவர்களுக்குப் பின்னால் சற்றுத்தள்ளி நான் நிற்பதை அவர்கள் கவனிக்கவில்லை. மதி சார் கோபம் குறையாமல் நின்றார்.

''ராஸ்கல் என்ன திமிர் பார்த்தியா? ஒரு இருபத்திரெண்டு வயசு இருக்குமா? அதுக் குள்ள என்ன திருட்டுப்புத்தி? நாலு ஏக்கர் எழுவது சென்ட் என்றதைக் கூட துல்லியமாப் பார்த்து வெச்சிருக்கான் பார்! ப்ளான் பண்ணிக் கெடுத் திருக்கான்யா. இவனை வுடக்கூடாது. செமத்தியா உதைக்கிறதே சரி. உம், சொல்விட்டா ஜனங்களே பிச்சி எடுத்துடும். கடைசியில கச்சேரிதான். கன்னிங் ஃபெலோ.''

தினகர் அக்கம் பக்கம் பார்த்து விட்டு அடிக்குரலில்,

''பய நம்மாளு சார்!''

''என்னய்யா சொல்ற?''

''ஆமாம் சார்! அவன் நம்ம சாதிப் பையன்தான். விசாரிச்சிட்டேன்'' - அவன் குரல் சற்றேறக்குறைய கிசுகிசுப்பாய் இருந்தது. மதி சார் எதுவும் பேசவில்லை; அமைதியாகி விட்டார்.

''என்ன சார்?'' பதிலில்லை.

இப்போது அவர், இரண்டு பக்கங்களிலும் பார்த்துவிட்டுத் தணிந்த குரலில்,

'' ஒண்டி ஆளா இம்மா நேரம் எல்லாருக் கும் சவால் கொடுக்கும்போதே நெனைச்சேன். பையன் கெட்டிக்காரனில்லே?'' மதி சார் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

எனக்கு அதிர்ச்சி வெறுப்பு கொப்பளித்தது. ச்சே! இந்த நாட்டின் சாபக்கேடு இது. இங்கே சாதி இல்லை என்று முழங்குகிற எல்லோரும் பொய்தான் பேசுகிறோம்.

கண்களால் கத்திச் சண்டை போடாதே காந்தமே தள்ளி நின்னு தீண்டாதே - இந்தப் பாடல் காட்சி ஜீவா இரட்டை வேடங்களில் நடிக்கும் சிங்கம்-புலி படத்துக்காக மஸ் கட்டில் படம்பிடித்திருக்கிறார்கள். ஜீவா, மீன் வெட்டும் பையனாகவும், நகைச்சுவை உணர்வுமிக்க வக்கீலாகவும் இரட்டை வேடங்களில் நடித்திருக்கிறார். தூள்...

- மகிமை



கமான், கமான் கலெக்ஷன்

சென்னை கிண்டியில் குதிரை ரேஸ் இல்லாதபோது மற்ற இடங்களில் நடக்கும் போட்டிகளின் வீடியோ காட்சிகள் லைவ் ஆக ரிலே செய்யப்பட்டு பெட்டிங் நடக்கும். இப்படிச் செய்ய அரசின் அனுமதி அவசியம். ஆனால், இப்போது சென்னையின் முக்கிய பகுதியான புரசைவாக்கத்தில், வெளி மாநில ரேஸ்களுக்கான பெட்டிங் பெரிய அளவில் நடக்கிறதாம்! சட்ட விரோதமாக நடக்கும் இதற்கு ஆளும் கட்சிப் பிரமுகர்களின் முழு ஆதரவும் இருக்கிறதாம். ''லாட்டரிச் சீட்டு தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் மாலை வேலைகளில் பல டீ கடை, பெட்டிக் கடைகளில் பல மாநில லாட்டரி ரிசல்ட்டுகள் வைத்திருப்பார்கள். எல்லாச் சட்ட விரோத காரியங்களும் ஆளும் கட்சி (அது எந்தக் கழகமாக இருந்தாலும் சரி) ஆதரவோடுதான் நடக்கிறது'' என்கிறார் புரசைவாக்கத்தில் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரமுகர் ஒருவர்.



* வெள்ளையன்



* அனிதா ராதாகிருஷ்ணன்

கைவிட்ட மதுரை

திருச்சியில் கருணாநிதி பேசிய கூட்டத்துக்கு வந்த கூட்டம், ஜெ.வுக்கு வந்த கூட்டத்தை விட அதிகமா? அந்தப் பட்டி மன்றம்தான் இப்போது நடக்கிறது. திருச்சி சுற்று வட்டாரத்தில் இருக்கும் மாவட்டங்களில் உள்ள கழகப்பிரமுகர்கள் நன்றாகக் கவனிக்கப் பட்டு கூட்டத்தைத் திரட்டி வர ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் திருச்சிக்குத் தெற்கே திண்டுக்கல், மதுரை போன்ற மாவட்டங்களிலிருந்து தொண்டர்கள் யாரும் வரவில்லையாம். காரணம் அமைச்சர் நேரு, பேனர்களில் அழகிரி படம் போடக் கூடாதென்று உத்தரவிட்டதுதானாம். உள்ளூர் கோஷ்டி மோதல் காரணமாக திருச்சி சிவா, மதுரை அதிகாரமையத்தோடு கைகோத்து விட்டாராம்.



* நேரு



* அழகிரி



* சிவா

ஜால்ரா சங்கம்

தமிழ்நாடு வியாபாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பினுடைய தலைவராக இருக்கிறார் த.வெள்ளையன். இப்போது இந்த அமைப்பு இரண்டாக உடைந்து தமிழ்நாடு வணிகர்கள் பேரமைப்பு என்று உருவாகியிருக்கிறது. இந்த உடைப்பு வேலைக்குப் பின்னால் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் இருப்பதாக முணுமுணுக்கிறது வெள்ளையன் தரப்பு. ஆளுங்கட்சி தலைமையின் உத்தரவின் பேரில்தான் இது நடந்ததாகக் குமுறுகிறார்கள் அவர்கள். ''வெள்ளையன் சர்வாதிகாரி போல நடந்தார். கொஞ்சம் வளைந்து கொடுத்துப் போனால்தான் அரசாங்கத்தில் காரியங்களைச் சாதிக்க முடியும். எனவேதான் ஆளும் கட்சிக்கு அனுசரணையாக இருக்க, பிரிந்து விட்டோம்'' என்கிறார் ஒரு வணிகப் பிரமுகர்.

வருத்தப்படுகிறார் ரஜினி?

* ''ரஜினி சொன்னதையெல்லாம் வைரமுத்து என்னிடம் சொல்லிவிட்டார்'' என்று வைரமுத்து மகன் கல்யாணத்தில் முதல்வர் கருணாநிதி சொன்னாரல்லவா! இப்போது சினிமா மற்றும் அரசியல் வட்டாரத்தில் 'அந்த விஷயம்' என்ன என்பதைப் பற்றி பலவிதமான கிசுகிசுக்கள். ''முதல்வரின் பேரன்கள் சென்னையில் தியேட்டர்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு மற்ற படங்களை ரிலீஸ் செய்ய இடம் கொடுக்காததைப் பற்றிப் பேசியிருப்பார்... இல்லையில்லை வெளிவரக் காத்துக் கொண்டிருக்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட படங்களை மலிவான விலைக்குக் கேட்டு, குடைச்சல் செய்வதைப் பற்றி சொல்லியிருப்பார்..'' என்று பலவிதமான செய்திகள். ஆனால் மகளின் கல்யாணப் பத்திரிகை கொடுத்த சமயத்தில் சில தலைவர்களிடம், குறிப்பாக காங்கிரஸ் தலைவர்களிடம், தற்போதைய சினிமா துறையின் நிலையைக் குறித்து வருத்தப்பட்டுச் சொல்லியிருக்கிறார் ரஜினி. ''என்னோட காலம் முடிந்துவிட்டது; எனக்கொன்றும் பாதிப்பில்லை'' என்பதையும் அவர் சொன்னாராம்.

- சஞ்சயன்



பாலிடிக்ஸ் பஜார்

காலை எழுந்தவுடன் சிரிப்பு!


ஜோடி நெம்பர் 1

எங்க உறவினர் குடும்பத்தில ஒரு நிச்சயதார்த்தம். இந்தப் பொண்ணுக்கும் அந்தப் பையனுக்கும் கல்யாணம்னு பேசி ஒன்னு சேர்த்துட்டோம். நிச்சயதார்த்தம் நடக்குறதுக்கு முன்னால பொண்ணும் பையனும் ஒருத்தரை ஒருத்தர் பேசிக்கணும்னு பிரியப் பட்டாங்க. பெரியவங்களும் சரின்னு சொன்னாங்க. பேசிய ஜோடி திரும்பி வந்து சொன்னாங்க: ''இந்த நிச்சயதார்த்தம் வேணாம்... சரிப் படாது... நாங்க ஃப்ரெண்ட்ஸா தான் இருக்க முடியும். கல்யாணம் பண்ணிக்கிட்டா சரிப்படாது.'' பொண்ணும் பையனும் சேர்ந்து சொன்னதாலேயும் ரெண்டு குடும்பமும் சொந்த பந்தம் என்றதாலேயும் அதைப் பிரச்னையாக்காமல் சாப்பிட்டுக் கிளம்பிட்டோம். வடிவேலு புலம்பு வாரே ஒரு படத்துல... 'எதுக்குடா நான் சரிப்பட மாட்டேன்... சொல்ல லேன்னா நிம்மதியா தூங்கக் கூட முடியாதே'ன்னு... அது மாதிரி தான் நாங்களும் மனசுக்குள்ள புலம்பினோம். ஏன் கல்யாணம் சரிப்படாதுன்னு சொன்னான்? அவளும் பெண் சுதந்திரம் தனித்துவம் பேசுகிறவள்தான்.

பல வருடங்களுக்குப் பிறகு ஒரு குடும்ப நிகழ்ச்சியில் மீண்டும் சந்தித்துப் பேச வாய்ப்பு வந்தது. அப்போதும் அவர்கள் இருவர்க்கும் திருமணம் ஆகாமலேயே இருந்தது.

ஜோடி நெம்பர் 2

ஒருமுறை இரயில் பயணத்தின்போது ஒரு ஸ்டேஷனில் ஒரு குடும்பக் கும்பல் சோகத்தோடும் 'அய்யோ பாவம்' என்பது போன்ற முகங்களோடும் ஒரு ஜோடியை வழியனுப்ப வந்திருந்தனர். அந்த ஜோடி இரயில் ஏறி, என் எதிரே இருந்த இருக்கை



யில் வந்தமர்ந்தனர். அவர்களின் பெருமூச்சில் கனத்த துக்கம் இருப்பதை உணர முடிந்தது. நம்மளால தான் இதுமாதிரி ஊமைப்படம் பாக்க முடியாதே. நானே வலிய போய் பேச ஆரம்பிச்சேன் (எதிரே ஒரு நடிகை இருக்கேன். அப்படியொரு ஆள் இருப்பதாகத் துளியும் காட்டிக்கொள்ளாமல் சிவனேன்னு உக்கார்ந்து இருப்பது எவ்வளவு கடுப்படிக்கிற தன்மையின்னு நீங்க ஒரு வி.ஐ.பி.யா இருந்தா தெரியும்). நான் என்னை அறிமுகப்படுத்திக்கிட்டேன். 'உங்கள தெரியும்' என்றார். அடச் சேன்னு ஆயிடுச்சு. அவரு பேச ஆரம்பிச்சார்.

அதுக்கு நீ சரிப்பட மாட்டே?!



சமீபத்தில் ஓய்வுபெற்ற ஊழியர். அவரோடு இருந்த பெண்மணி ஓய்வு பெறவே முடியாத அவரின் இல்லத்தரசி (அவுஸ் ஒய்ஃப்பை எப்படிச் சொல்றது). இந்த ஜோடிக்கு ஒரு பொண்ணு, பையன் உண்டு. அவங்கள படிக்க வெச்சி, கல்யாணம் பண்ணி அவங்களுக்காகவே உழைச்சு இப்போதான் ரிடையர் ஆனதும் தனக்கான சின்னச்சின்ன ஆசைகளை நிறைவேத்தித் தனக்காக வாழ ஆரம்பிச்சி இருக்காங்க. அதுல வந்தது பாச வேட்டு! வொய்ஃப் வேலைக்குப் போறதால அப்பா தன்னோட வீட்டில வந்து இருக்கச் சொல்லி புள்ளையும், குழந்தைகள பார்த்துக்கச் சொல்லி அம்மாவ பொண்ணும், ஆளுக்கொரு பக்கமாய் அவரவர் சுயநலத்துக்கு இழுக்க இந்த ஜோடி இப்போ பிரியப்போற நேரம். சிவசக்தியா வாழ்ந்த ஜோடி திசைக்கு ஒண்ணா பிரிச்ச அந்த வாரிசுகளை, அட நார பசங்களான்னு திட்டத்தோணுச்சு. அவர் சொன்னார் ''மேடம் எனக்கு எம்பொண்டாட்டிய விட்டு வரமுடியாது''ன்னு. நானும் எம்புருஷன் சாவுறவரைக்கும் என்கூடத்தான் இருக்கணும்னு அவளும் சொல்ல முடியாதபடி இருக்கும் போதுதான் நம்

அப்போதுதான் சுதந்திரத்தின் உண்மையான மதிப்பும் அதன் ருசியும் தெரிய ஆரம்பித்தது. அவர்

செப்டெம்பர் மாதப் பட்டுப் புடைவைகளைப் பரிசாக வழங்குவோர்:

சுதந்திரம் என்னன்னு தெரியுது. ''எங்களுக்கான வாழ்வை வாழ 'நாங்க வரமுடியாது'ன்னு குரல் கொடுத்தா நம்ம சொந்தங்களே நம்மள ஏசுமே... 'இந்த வயசுல என்ன ஜோடி போட்டுக்கிட்டு புள்ளைங்களவிட என்ன வாழ்க்கை' யின்னு நக்கலடிக்கும். ஏன்னா அவங்களும் அடிமைத்தனத்தை சுகமா நெனைச்சு வாழுறவங்க தானே'' என்றார்.



பல வருடங்களுக்குப் பின் அந்த நபரை மீண்டும் பார்க்க நேர்ந்தது. மனைவியின் மரண தருவாயில்தான் பொண்ணு வீட்டுக்குப் போய் பார்க்க முடிந்ததாகச் சொல்லிவிட்டு ஓவென அழுதார் சுதந்திரமாக.

அந்த ஜோடி நெம்பர் 1 பத்தி சொல்லவில்லையே...! 25 - 35 வயசுல இது சரிப்படாதுன்னு விலகின ஜோடி, 20 வருடம் கழித்து வேறொரு கல்யாண வீட்டில் மீண்டும் சந்தித்தபோது, அவர்கள் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்தனர். இப்போ வயது 45-55. ஏன்டா காரணம்னு பார்த்தா வேலைக்குப்போற பொண்ணு ஆணவமா இருப்பா அடங்கி இருக்கமாட்டாள் கல்யாணத்துக்குப் பிறகு வேலைய விட்டுடுன்னு இவரு சொல்லி இருக்காரு. அதற்கு அவளோ எனக்குன்னு கடமை இருக்கு. அதை முடிக்க வேலை அவசியம்னு சொல்லிவிட்டாளாம். இவ்வளவு காலத்துக்குப்பின் அவர் விரும்பின பெண்ணா இவ தெரிஞ்சி இருக்கா. இப்போ பாதி ஆயுள் தாண்டியபின் கல்யாணம் நடந்தது. ஜெயிச்சது என்னவோ அவள்தான். இது மாதிரியான சுதந்திர வெற்றிகள் பலருக்குத் தெரியவில்லை. சில்க் ஸ்மிதா மாதிரியான சுதந்திரத்தின் தோல்விகள்தான் பலருக்குப் பளிச்சுன்னு தெரியுது. சில்க் ஸ்மிதா தோற்றவரா?

(தொடரும்)

படம் : ஞானம்

ஊர்வசி போட்டி சில்க்கி சாரி!



மாதம் 3 புடைவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவைப் பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

செப்டெம்பர் மாதக் கூப்பன்களை இணைத்து அனுப்ப

கடைசித் தேதி : **06.10.10**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

..................பின்கோடு:..................

தொலைபேசி : ....

இ-மெயில் : ....

செப்டெம்பர் - 26

ஜோடி நெம்பர் ஒன்னின் திருமணம் தடைபட்டது ஏன்?

விடையை டிக் செய்யவும்

- ☐ பெண் வேலைக்குப் போகக் கூடாது
- ☐ வரதட்சணை பத்தலை!
- ☐ வயசு அதிகம்
- ☐ அழகில்லை

கந்தசஷ்டிக் கவசமும்... அருட்காப்பு வளையமும்!

காலை எழுந்ததும் முன் கதவைத் திறப்பேன், வாலை ஆட்டியவாறும் ஒருவித உற்சாகக் குரல் எழுப்பிக் கொண்டும் நாங்கள் வளர்க்கும் இரண்டு நாய்களும் நிற்கும். நாய்க்குப் போடுவதற்கென்றே ஐம்பது காசு அளவான பிஸ்கட்களை வாங்கி வைத்துள்ளேன். அதைப் போடுவேன். சாப்பிட்டுவிட்டு இன்னும் போடு என்கிற பாவனையில் துள்ளிக் குதிக்கும். மீண்டும் போடுவேன். எட்டு வருட காலமாகத் தொடர்ந்து செய்துவருகிறேன். நான் வெளியூர் சென்றால் என் மனைவியோ, குழந்தைகளோ காலையில் கதவைத் திறந்து பிஸ்கட்டுகளைப் போடுவார்கள். என்னுடைய இஷ்ட தெய்வம் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திலுள்ள பைரவர். அனுதினமும் காலை அவரை நினைத்துக் கொள்வேன். எடுத்த காரியங்கள் எவ்விதத் தடங்களும் இன்றி எளிதில் நடக்கும். இதனால் நாய் முகத்தில் விழிப்பது எனக்குக் கூடுதல் தெம்பை அளிக் கிறது!


- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

வீட்டில் நல்ல விஷயம் நடந்தாலும் பிரச்னையானாலும் கந்த சஷ்டிக் கவசம் சொல்வது நீண்டகாலமாகப் பழக்கம். கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக 'மனவளக்கலை' பயிற்சி பெற்ற பின்பு 'வாழ்க வளமுடன்' எனக் கூறுவது பழக்கமாகிவிட்டது. ஃபோனில் பேசும் முன்பும், தெரிந்தவர்களுடன் பேசும் முன்பும் வாழ்க வளமுடன் என்று கூறிய பின்பே பேச ஆரம்பிப்பதுதான் இப்போது எங்கள் செண்டிமெண்ட்.

வீட்டைவிட்டு வெளியே புறப்படும் முன்பு 'அருட்காப்பு' என்ற பாதுகாப்பு வளையம் கூறத் தவறுவதில்லை.

பள்ளிச் செல்ல ஆரம்பித்த நாளி லிருந்தே வெளியே கிளம்பும் போதெல்லாம், 'அம்மா போயிட்டுவரேன்' (கல்யாணப் பரிசு படத்தில் சரோஜா தேவி போல) என்று கூறும் நான், என் தாயார் மறைந்த பிறகு மனைவியிடம் அவ்வாறு சொல்லிக் கிளம்புகிறேன். வாசல் வராண்டாவில் மாட்டியுள்ள பெரிய சைஸ் 'பாபா' படத் துக்கும் மாடிப்படிச் சுவரில் மாட்டியிருக்கும் பிள்ளையார் படத்துக்கும் 'அரஹரா' போட்டுக் கொண்டுதான் வெளியே கிளம்புவேன். நான் விரும்பி வாங்கிய ஒரு ரெடிமேட் ஷர்ட்டைப் போட்டுக் கொண்டு வெளியே சென்ற அன்று, பெரிய தகராறு மூண்டது. அதற்குப் பின் இன்னொரு நாளும்

செண்டிமெண்ட்



பயணங்களில் மூன்று பேராகச் சேர்ந்து போக நேரும்போது ஒருவர் முன்னே கிளம்பிய பின் சிறிது இடைவெளிவிட்டு, மற்ற இருவரும் கிளம்பி அவருடன் இணைந்து கொள்வதும் உண்டு.

வீட்டில் செய்யும் பலகாரங்களில் முதலில் செய்த இரண்டு துண்டுகளையாவது கடவுள் முன்னே வைத்துக் கும்பிட்ட பின் சாப்பிடுவதும், எந்தப் புதுப்பொருளை வாங்கி வந்தாலும், பூஜையறையில் ஒரு சில நிமிடம் வைத்திருந்த பின் உபயோகிப்பதும்தான் எங்களின் குடும்பப் பழக்கம்.

- எஸ்.மங்கை,
குளித்தலை

இடம்பெறும் ஒவ்வொரு செண்டிமெண்டும் ரூ.50 சன்மானம் பெறுகிறது.

அதேபோல் ஆனதால் அந்த ஷர்ட்டை வீட்டில் கூட அணிவதில்லை. பஸ்ஸில் போவதென்றால் நான் உடனே வருகிற பஸ்ஸில் ஏற மாட்டேன். அதன் நம்பரைக் கூட்டி கூட்டுத்தொகை '9' என்றால் தாமதமானாலும் பரவாயில்லை என்று அடுத்த பஸ்ஸில்தான் போவேன். மூடநம்பிக்கையின் மொத்த அவதாரம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனாலும் இந்த செண்டிமெண்ட் என்னை விடவில்லையே! என்ன செய்ய!?

- ந.சுப்பிரமணியன், சென்னை - 93

எங்கள் குடும்ப செண்டிமெண்ட் சற்று வித்தியாசமானது! ஒவ்வொரு தமிழ் மாதப் பிறப்புக்கும் வீட்டுக்கு அருகில் உள்ள கோயிலுக்குச் சென்று அன்றைய முதல் செலவைக் கோயிலிலிருந்து ஆரம்பிப்போம். அதற்குப் பின்னரே பிற தேவைக்கான செலவுகள் ஆரம்பமாகும். இந்தப் பழக்கம் எங்கள் பெற்றோர் காலம் முதலே தமிழ் மாதத்தை மறக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக கடைபிடிக்கப்படும் வழிமுறை.

- சாந்தினி, மதுரை

வாசகர்களே! உங்களோட செண்டிமெண்ட், குடும்ப நம்பிக்கைகள் என்ன? எழுதுங்க... kalki@kalkiweekly -க்கும் அனுப்புங்க.



தந்தையைத் தனியே விட்டு வந்ததில் ஞானதேவருக்கு வருத்தம். அவரிடம் சென்றார். ''நாட்டு வாழ்க்கை எனக்கு ஒத்துவராது. தவிர சந்தடி நிறைந்த சூழலில் என் தியானம் கலைந்துவிடும்'' என்றார் விடோபா.

'ஞானி என்றான பிறகு இடத்தில் பேதமேது? எந்தச் சூழலிலும் தியானம் செய்யக் கூடியவர்தானே ஞானி?' என்று விதவிதமாக விவாதம் செய்து தந்தையின் மனத்தை மாற்றி, தம்முடன் நாட்டுக்கு அழைத்து வந்தார்.

விடோபா, தெய்வநெறியைப் பரப்பத் தொடங்கினார். ஆனால், மக்கள் அவரை ஏற்க மறுத்தனர். 'என்ன இருந்தாலும் காவி உடை உடுத்திய பிறகு சம்சார பந்தத்தில் சிக்கியவரல்லவா இவர்!' என்ற அலட்சியம்.

அரசனும் இதைக் கேள்விப்பட்டான். அவனுக்கு விடோபாவை ஏற்பதா மறுப்பதா என்று புரியவில்லை. விடோபாவிடம், ''பைட்டண் எனும் இடத்தில் எமது குரு இருக்கிறார். அவரிடம் சென்று

4

திருமாலின் அம்சம்

அழகான நான்கு குழந்தைகள். கேட்கக் கேட்க அலுக்காத மழலை. கண்களும் காதுகளும் நிறைவு பெற்றன. ஆனால் வயிறு என்று ஒன்று இருக்கிறதே. ஊரார் ஒதுக்கிவிட்ட நிலையில் விடோபா திகைத்தார். ''காட்டில் வாழ்ந்தது போதும் நாட்டுக்குச் செல்லலாம்'' என்றார் ருக்மாபாய். மறுத்தார் விடோபா. இறைவனைத் தியானித்தபடியும் பாடல்களை இயற்றியபடியும் அங்கேயே இருந்தார். ருக்மாபாய் குழந்தைகளுடன் தம் தந்தையின் வீட்டை அடைந்தார். அங்கும் வறுமை.

நீங்கள் உங்கள் பக்தியையும் திறமையையும் வெளிப்படுத்துங்கள். விடோபாவைப் புறக்கணிப்பது தவறு என்று அவர் ஓர் ஓலை எழுதி அனுப்பட்டும். அதன்பிறகு நமது நாட்டில் அனைவரும் உங்களை ஏற்குமாறு செய்வது என் பொறுப்பு'' என்றான்.

இதன்படியே மன்னனின் ஓலையைச் சுமந்தபடி விடோபா தனது நான்கு வாரிசுகளுடன் பைட்டண் நகரை அடைந்தார்.

மன்னனின் ஓலை, குருவை அடைவதற்கு முன்பே வேறு பல பொறாமை பிடித்தவர்களின் ஓலைகள் அந்தக் குருவை அடைந்துவிட்டிருந்தன. இதனால் விடோபாவுக்கு எதிரான மனநிலையைக் கொண்டிருந்தார் குரு.

“முதலில் என்னோடு வாதம் செய். அதில் நீ வென்றால் பிறகு ஓலை அளிக்கிறேன்'' என்றார் குரு.

குரு கேள்விகளைக் கேட்க, விடோபாவுக்கும் முன்னதாக ஞானேஸ்வரர் பதில் அளிக்கத் தொடங்கினார்.

விவாதம் தொடர்ந்தது. கேள்விகள் மேலும் சிக்கலானவையாக மாறின. சளைக்காமல் சரியாக விடை அளித்தார் ஞானேஸ்வரர்.

விவாதம் முடிவதாகத் தெரியவில்லை. நடப்பது என்ன என்பதையும் விவாதத்தின் நோக்கத்தையும் விடோபா புரிந்துகொண்டார். துயரமும் கசப்பும் பொங்க ''ஞானேஸ்வரா, நாம் கிளம்பிச் செல்லலாம்'' என்றார்.

சுற்றியிருந்தவர்கள் ''ஏன் தொடர்ந்து வாதம் செய்ய பயம் உண்டாகிவிட்டதா?'' என்று கேலி பேசினர். ஞானேஸ்வரர் பொறுமை இழந்தார். குருவைப் பார்த்து ''மன்னன் உங்களுக்கு ஓலை அனுப்பியுள்ளார். அதற்கு ஒரு பதில் ஓலை எழுதிக் கொடுங்கள்'' என்றார்.

குருவிடம் பதில் இல்லை. ஞானேஸ்வரர் பொறுமை இழந்தார். அங்கு நியாயம் கிடைக்காது என்று தெரிந்தது. தந்தையின் நிலை அவரை வருத்தியது. சோகம் பொங்கச் சுற்றுமுற்றும் பார்த்தார். அவரது பார்வையில் சற்றுத் தள்ளி வந்துகொண்டிருந்த ஓர் எருமை தென்பட்டது. சட்டென அவரிடமிருந்து வெடித்து வந்தன வார்த்தைகள். ''வேதத்தின் உட்பொருளை உணர்ந்துகொண்டவர்களாக நீங்கள் இல்லை. இவ்வளவு நேரம் உங்களிடம் விவாதம் செய்ததற்குப் பதில், இந்த எருமையிடம் விவாதம் செய்திருக்கலாம்'' என்றார்.

கூடியிருந்தவர்கள் இகழ்ச்சியுடன் ''சரியாகச் சொன்னாய், அந்த எருமையும் நீயும் தான் சமம்'' என்றனர்.



-ஞானேஸ்வரர்!

அருண்சரண்யா



''உண்மைதான். எல்லோரிடமும் நிறைந்திருப்பது பரமாத்மாதானே'' என்றார் ஞானேஸ்வரர் பளிச்சென்று.

''அப்படியானால் இந்த எருமையை அடித்தால் உன் உடலில் தழும்பு உண்டாகுமா?'' என்று கேட்டார் ஒரு குறும்புக்காரர்.

''தாராளமாக'' என்றார் ஞானேஸ்வரர்.

உடனே அந்த எருமை மீது பலமாக ஓர் அடி விழுந்தது. ஞானேஸ்வரரின் முதுகில் தழும்பு உண்டானது.

''இப்போதாவது புரிந்துகொண்டீர்களா?'' என்று கேட்டார் ஞானேஸ்வரர். அப்போதும் புரிந்துகொள்ளவில்லை. 'ஏதோ காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்திருக்கிறது, அவ்வளவுதான்' என எண்ணினார்கள் அவர்கள்.

''எருமையை அடித்த போது உன் உடலில் தழும்பு உண்டானது இருக்கட்டும். அதற்கு நேரெதிர் திசையிலும் இதை நிரூபிக்க முடியுமா? உனக்கு வேதம் தெரியுமே. அப்படியானால் இந்த எருமை வேத விளக்கம் கூறுமா?'' என்று கேட்டனர் அந்தணர்கள்.

தம்மைச் சுற்றி ஏதோ விவாதம் நடப்பதை அறியாத எருமை அவர்களை நெருங்கிக்கொண்டிருந்தது, தமக்கு நிகழப்போகும் அற்புதத்தை அறிந்துகொள்ளாமலே.

ஞானேஸ்வரர் சளைக்கவில்லை. அந்த எருமையின் எதிரே நின்றார். அதன் தலையில் தமது கையை வைத்தபடி, ''ஒரு மனிதன் எதனால் அந்தணன் ஆகிறான்? பிறப்பினாலா? தவத்தினாலா? ஞானத்தினாலா? அல்லது செய்யும் காரியங்களினாலா?'' என்று கேட்டார்.

எருமையிடம் இவ்வளவு ஆழமான கேள்விகளைக் கேட்கும் ஞானேஸ்வரரைப் பார்த்து அத்தனை பேரும் சிரித்தனர். விடோபாகூட தம் மகனின் செயலைக் கண்டு திகைத்தார்.

ஆனால் அந்த அரிய அற்புதம் அப்போது நிகழ்ந்தது. எருமை பேசத் தொடங்கியது - தெளிவான குரலில் வேதத்தை அடிப்படையாகக் கொண்ட தெவிட்டாத பதில்கள்.

''பிறவி முக்கியம் அல்ல. செய்யும் செயல்களால்தான் ஒருவன் அந்தணன் ஆகிறான்.'' இதைப் பல உதாரணங்களோடு விளக்கியது. பின்னர் வேதபாரா

யணமும் செய்தது. கூடியிருந்தவர்களுக்கு ஞானேஸ்வரரின் பெருமை புரிந்தது. அவர்களின் செருக்குச் சிதைந்தது. ஞானேஸ்வரரின் முகத்தில் தெய்வீகக் களை ஒளிர்ந்ததையும், அதேபோன்ற சிறப்பு அவரது சகோதரர்கள் மற்றும் சகோதரியின் முகத்திலும் தென்பட்டதையும் இப்போதுதான் அவர்களால் உணர முடிந்தது.

ராமநாதன் இந்த இடத்தில் கதையை நிறுத்தினார். இந்த இடைவெளிக்காகவே காத்திருந்ததுபோல் ஜருகண்டி வீசினான் ஒரு கேள்வியை. ''ஞானேஸ்வரரின் உடன் பிறந்தவர்களும் தெய்வீகத் தன்மை கொண்டவர்களா?'' எனக் கேட்டான்.

''ஞானேஸ்வரர் திருமாலின் வடிவம் என்றும், நிவ்ருத்தினாதர் சிவனின் வடிவம் என்றும், சோபானதேவர் பிரம்மனின்



அபங்க அமுதம்

ஸந்த ஜேணே வ்ஹாவே
ஜக போலணே ஸாஹாவே
தரீச அங்கீ தோரபண
ஜயா நாஹீ அபிமான
தோரபண ஜேதே வஸே
தேதே பூததயா அஸே
ராகே பராவே கவணாச
ஆபண ப்ரஹ்ம ஸர்வதேசீ
ஐஸீ ஸமத்ருஷ்டீ கரா
தாடீ உகடா ஞானேச்வரா

- முக்தா பாய்

'சாதுக்கள் உலக மக்கள் கூறும் விமர்சனங்களை சகித்துக்கொள்ள வேண்டும். ஆசாபாசம் இல்லை என்றால் உயர்ந்த குணம் தோன்றும். அப்போது பிற உயிர்கள்மீது கருணை ஏற்படும். கோபம் கொள்ளாமல் அனைவரையும் இறைவனாக பாவிக்க வேண்டும். இத்தகைய சமப் பார்வைதான் அனைத்திலும் உயர்ந்தது.'

அம்சம் என்றும், முக்தாபாய் யோக மாயாவின் அவதாரம் என்றும் கருதப்பட்டனர்'' என்றார் ராமநாதன்.

ஞானேஸ்வரரின் சமாதியையும் அதன் அருகிலிருந்த விருட்சத்தையும் மீண்டும் வணங்கினார் ராமநாதன். -பின்னர் ''இந்தச் சமாதியைப் பற்றிய மற்றொரு புல்லரிக்கும் சம்பவம் உண்டு.''

மற்றொரு சுவாரசியத்துக்கு நாங்கள் தயாரானோம். தொடர்ந்தார் ராமநாதன்.

யாத்திரை தொடரும்



கல்கி விஸிட்

அழகு பொம்மைகள் அல்ல... ஆக்டிவ் கேர்ள்ஸ்..!

ஆல் இன் ஆல் அப்பாசாமி!

''என்னங்க என் அம்மா சிங்கத்துக்கிட்ட மாட்டிக்கிட்டாங்க. காப்பாத்துங்க.''

''கவலைப்படாதே. சிங்கம் காட்டுக்கே ராஜா. அது கண்டிப்பா தப்பிச்சுடும்.''

- மை. மைக்கேல் ஆரோக்கியராஜ்



ரொம்ப நாளாச்சே... ஜாலி விஸிட்டில் காலேஜ் கனவு காட்டில்... ஆண் மயில்களோடும் பெண் சிங்கங்களோடும் கைகுலுக்கணும்னு தோணுச்சி... ஜிவ்வென்று கோவைக்கு விட்டோம் ஜூட்....

கோவை நகரத்தின் இதயப்பகுதி ரேஸ் கோர்ஸ் சாலையில் இதயத்தைப் போலவே நகரின் எல்லாப் பகுதிகளையும் தன்னோடு இணைத்துக்கொண்டு சகல வசதிகளுடன் சாந்தமாய் அதே நேரம் கம்பீரமாய் நிற்கிறது **சி.எஸ்.ஐ. பிஷப் அப்பாசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி.**

உள்ளே போனோம் அடடா! கடவுளுக்கே ஆசை வந்துடும். இந்த காலேஜில் கொஞ்சநாள் படிக்கலாம்னு. ஆட்டம், பாட்டம் மட்டுமில்ல; சகலத் துறையிலும் சளைத்தவர்கள் இல்லைன்னு நிரூபிச்சுட்டாங்க. வாங்க ஒரு ரவுண்டு போய் பார்ப்போம்.

நான் ரசித்த எஸ்.எம்.எஸ்:

''மொளைச்சு மூணு இலை விடல அதுக்குள்ள அந்தப் பையன் இப்படி பண்ணிட்டானே''

''என்ன பண்ணான்?''

''அந்தச் செடியைக் கிள்ளிட்டான்''




✱ கெவிலா



படிப்பும் கலையும் எங்கள் கண்கள்!

நடப்பு தமிழகம்!



மாநில அளவில் பாட்டுப்போட்டியில் 10,000 பரிசுப்பெற்ற கே.வினோத் குமாரின் கவிதை.

* நடப்பு தமிழகம்

உள்ளே வந்தது இலவசப் புரட்சி
வெளியே சென்றது மக்களின் முயற்சி.

* செம்மொழி


''என்கு தமில் தெர்யாது.''

ஆல்-ரவுண்டர்!



ஜெடக்குழு TO
கலைக்குழு,
கண்காணிப்புக்
குழு TO கல்விக்
குழு
எல்லாத்திலும்
'ஆல்ரவுண்டர்'
சா.ஓர்மிளா
ஆரோக்யஜெசி
தாம்!
(வணிகவியல்
3-ம் ஆண்டு)

போராடு!



உறங்குவது தரையாக இருந்தாலும்
எழுகின்ற இலட்சியங்கள்
எவரெஸ்டாக இருக்கப் போராடு!
உன் செயலின் விழுதுகள்
விருதுகளாக மாற...

நாங்களும் விமர்சிப்போம்!



சரண்யா



ஹரிப்ரியா

“எனக்குத் தெரிந்த நாளில் இருந்து எங்க வீட்ல கல்கி இருக்குது. அதுல எனக்குப் பிடித்தது தராசு கேள்வி பதில் தான். கேட்கிறது சுலபம். அதற்கான பதிலை எல்லோரும் ஒத்துக்கும்படிச் சொல்றது கஷ்டம். அதுல கல்கி சூப்பர்தான்.''

- சரண்யா.

“எங்கள தேடிவந்து எங்க திறமையை வெளிப்படுத்தும் கல்கி எங்கள மாதிரி மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான விஷயத்தை இனிமேலாவது அளிக்குமா? அளிக்கணும். இதுதான் எங்க எதிர்பார்ப்பு.''

- ஹரிப்ரியா


சுந்தரக் தமிழ்த்துறையின் சுதந்திரச் சுற்றுலா!

திருநங்கைகள் பற்றிய 'Come on People' என்ற குறும்படத்தை எடுத்து, தமிழக அரசின் 25,000 பரிசு பெற்று காலேஜ்க்கு கலக்கலான பெயரை வாங்கித் தந்தவர் சி.விஸ்வ பிரதீஸ். (நாளைய இயக்குநரா?)



எச்சரிக்கை!

★ என்னதான் பெண்களைப் பார்க்கும்போது முகத்தில் பளிச்சுன்னு பல்பு எரிந்தாலும் அதை வெச்சு இருட்டுல நடக்க முடியுமா?

★ ஃபிகரைப் பார்த்துப் பந்தாவா பைக்கில் நீ 100-ல் போனா 108-ல் திரும்பி வருவ ஜாக்கிரதை!

-ஜோஷ்வா முத்துரத்தினம்


ஸ்போர்ட்டிவான ஸ்போர்ட்ஸ் டீம்!

சத்தமிட்ட குருடன் சந்தேகமின்றி
மொத்தமாய் பார்வையடைந்தான்
- அக்காலம்!
நித்தம் நித்தம் நியாய ரத்தம் சத்த
மின்றி சங்காரமாவது - இக்காலம்!
காட்சிகள் மாறுவது
எக்காலம்?

-பி.எஸ்.சாமுவேல்
(கல்லூரி
பொறியாளர்)



மாறுவது எக்காலம்?


இந்தப் பூனை நடைக்கு எல்லா எலிகளும் ஓடிவரும்!

கல்லூரி செயலாளர் சுசீலா வில்லியம்ஸ்

''உண்மை, நேர்மை, பணிவு என்ற அடித்தளத்தின் மீது கட்டப்பட்ட எங்கள் பிஷப் அப்பாசாமி கல்லூரியின் கல்விப்பணி தனிமனித மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. தன்னம்பிக்கையும், சமுதாயப் பொறுப்பையும் ஊக்குவித்து, நெறிதவறா வாழ்விற்கு ஆயத்தப்படுத்துவதே இக்கல்லூரியின் முக்கிய குறிக்கோள்.



''எங்கள் கல்லூரியின் பெரும்பாலான துறைகள் இந்நாளில் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு தேவைக்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. எங்க கல்லூரியில் துறைகள் அனைத்தும் பாரதியார் பல்கலைக் கழகத்தாலும் ஏ.ஐ.சி.டி.இ. யினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் பெற்ற கல்லூரி இது!''

உண்மை, நேர்மை, பணிவு!

பெண்களின் குரல்!

கல்லூரி முதல்வர் மிருனாலினி டேவிட்

'பெண்களின் குரல்' என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, கோவை மத்திய சிறைச்சாலையில் உள்ள பெண் கைதிகளின் மறுவாழ்வுக்காக எமது மாணவர்கள் முயற்சிகள் பல மேற்கொண்டுள்ளனர். சமூகச் சீரமைப்பு மையங்கள், தாழ்த்தப் பட்ட கிராமங்கள், பள்ளி செல்லாக் குழந்தைகளின் மேற்கல்வி எனப் பல வகைகளிலும் எமது மாணவர்களை ஈடுபடுத்தப் பட்டு சமூகப் பொறுப்புள்ளவர்களாக மாற்றியுள்ளோம்.



சமுதாயப் பணி கல்வியின் ஒரு மறுக்க முடியாத அங்கம் என்பதை மாணவர்கள் உணர்ந்துகொள்ள இவை உதவுகின்றன.

பட்டமும், பட்டயமும் பெறுவதும் கல்வி அல்ல. தனி மனித மேம்பாடும், சமுதாயப் பொறுப்புணர்வும் அளிக்கும் கல்வியே இக்கல்லூரியின் குறிக்கோள்.



அப்பாசாமிதான் பெஸ்ட்!

ஜோன்னா டேவிட்
–நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

இதெல்லாம் இருக்கு...

இளங்கலையில்... கேட்டரிங் சயின்ஸ் அண்ட் ஹோட்டல் மேனேஜ்மெண்ட், ஆடை வடிவமைப்பு, விஷுவல் கம்யூனிகேஷன்ஸ், சமூக பணித்துறை, கணினித்துறை, வணிகம் மற்றும் நிர்வாகத் துறை படிப்புகள் உள்ளன. முதுகலை படிப்புகளும் சமூகப் பணித்துறையில் Ph.D செய்யவும் வசதியுள்ள இக்கல்லூரியில் ஆடை வடிவமைப்பு, கணினி, சமூகப்பணி ஆகியவற்றில் எம்.பில். செய்ய இயலும் என்பது சிறப்பான அம்சம்.

செய்தி, சித்திரம்: ஆர்.பாலா



அரியர்ஸே க்ளியர் பண்ணமுடியாத ஒருத்தன் காதலியைக் கைபிடிப்பதற்காக ஒரு டுட்டோரியல் காலேஜ் வைத்து டாப் கியரில் முன்னேறுவதுதான் கதை. கடைசியில் காதலி கைமாறிப் போய்டுவாளோ எனப் பதைபதைத்துச் சில டகால்டி வேலைகள் செய்து கைபிடிப்பதுதான் கதை. பார்த்தீங்களா எவ்ளோ சீரியஸான கதை(?). ஆனா, படம் முழுக்க காமெடி மழை... இயக்குநர் எம்.ராஜேஷின் முதல் படம் போலவே.

பாஸ்கரன் கதாபாத்திரத்தில் ஏகபோகமாகப் பொருந்துகிறார் ஆர்யா. அவருடைய டைமிங் ரியாக்ஷன்ஸ் மிகப்பெரிய ப்ளஸ். அதுவும் ஃபீல் பண்ணுவதற்காக க்ளாஸைக் கழட்டி மாட்டுவது சூழ்நிலையோடு ஒன்றிப்போகும் சூப்பர்ப்.

நயன்தாராவும் தன் பங்குக்கு அசத்துகிறார். ஆர்யா தன்னை இம்ப்ரஸ் பண்ண வரும்போதெல்லாம் கோபமாகப் பேசினாலும் காமெடி கான்செப்டில் கச்சிதம்...

'நண்பேண்டா' சந்தானத்தின் காமெடியில் தியேட்டரில் சிரிப்பு மழை. உண்மையிலேயே ஆர்யாவைவிட படத்தில் அதிகம் வசீகரிப்பது சந்தானம்தான்.

ஆர்யாவின் அண்ணன் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் சுப்பு பஞ்சுவும் மனைவி விஜயலக்ஷ்மியும் (கதா)பாத்திரம் அறிந்து நடிப்பை இட்டிருக்கிறார்கள்.

சாப்பிடுவதும் தூங்கி வழிவதுமாக இருக்கும் அஸ்வின் ராஜ்,படிக்க முயற்சிக்கும் காட்சிகளில் சிரிப்புவெடி.

யுவன்சங்கர் ராஜா இசையில் யார் இந்தப் பெண்தான்... பாடல் இதயத்துக்கும் மற்ற பாடல்கள் காதுக்கும் இதம். பின்னணி இசையிலும் ரம்யம்.

கும்பகோணத்தில் சந்து பொந்துகளில் புகுந்து புறப்படுகிறது சக்தி சரவணனின் ஒளிப்பதிவு.

முழுக்க முழுக்கச் சிரிப்புதான் முக்கியம் என லாஜிக் பற்றியெல்லாம் அதிகமாக அலட்டிக்காம ஜெயித்திருக்கிறார் இயக்குநர் ராஜேஷ்.எம்.

பாஸ்(எ)பாஸ்கரன் - பாஸ் பாஸ்

- மகிமைராஜன்



நீண்ட நாட்களுக்குப் பிறகு 'வந்தே மாதரம்' படத்துக்கு ஒளிப்பதிவு செய்கிறார் பிரபல ஒளிப்பதிவாளர் எம்.வி.பன்னீர் செல்வம்!

எப்படி இருக்கு ரீ எண்ட்ரீ?


''ஸார் இது ரீ-எண்ட்ரி கிடையாது. 'வந்தே மாதரம்' அர்ஜூன், மம்முட்டி, சிநேகா எனப் பெரிய ஸ்டார்கள் நடிக்கிற படம்றதால ஒன்றரை வருஷம் ஆயிடுச்சு. அதுக்குள்ள ரீ-எண்ட்ரின்னு கேட்டா எப்படி?'' என்கிறார் ஒளிப்பதிவாளர் எம்.வி. பன்னீர்செல்வம். திரைப்படக் கல்லூரி தந்த ஒளிப்பதிவாளர்களில் கவனிக்கப் படக் கூடியவர்.

''வந்தே மாதரம் மாவோயிஸம், மதத் தீவிரவாதம் எனப் பல முகங்களில் இந்தியாவின் அமைதியை அச்சுறுத்தும் பயங்கரவாதத்தைப் பற்றிப் பேசும் படம். தமிழ் சினிமாவில் இதுவரை அதிகம் சொல்லப்படாத 'ரா' எனும் உளவுப் பிரிவு பற்றியும் சொல்லியிருக்கிறோம். ஆபீஸர்களாக மம்முட்டியும், அர்ஜூனும் நடிக்கிறார்கள். ஃபோட்டோ ஷானிக் எனப்படும் புதுவித கேமராவைப் பயன்படுத்தியிருக்கிறோம்'' என்கிற எம்.வி. பன்னீர் செல்வம், தற்போது 'பிள்ளையார் தெரு கடைசி வீடு' படத்துக்கு ஒளிப்பதிவு செய்துகொண்டிருக்கிறார். ''கிராமத்துல இருக்கற பணக்காரருக்கு ஒரு படிக்காத பையன். அவன் பண்ற விஷயங்களும் கிராமத்துக்கே உரித்தான வெகுளித்தனங்களும் படத்தின் ப்ளஸ் பாயிண்ட்.''

''இந்தப் படத்துல பொள்ளாச்சியைச் சுத்தி இருக்கற கிராமங்களைப் படமாக்கியிருக்கோம். பொள்ளாச்சியோட இயற்கையான அழகைத் தத்ரூபமாக கேமராவுல படம் பிடிச்சுருக்கேன்'' என்கிறார் பன்னீர் செல்வம்.

ஒரு காலத்தில் திரைப்படக் கல்லூரி மாணவர்கள் அதிகமாக தமிழ் சினிமாவில் இருந்தார்களே? இன்று இல்லையே?


''இன்றும் கேமரா, எடிட்டிங், சவுண்ட் ரிகார்டிங் எனத் தொழில்நுட்பத் துறைகளில் திரைப்படக் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பு இருக்கிறது. ஆனால் டைரக்ஷனில் இன்ஸ்டிடியூட் மாணவர்கள் பங்களிப்பு தற்சமயம் மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. அதுக்கு அதிகமான புத்திசாலித்தனம் தேவைப்படுவதுகூட காரணமாக இருக்கலாம். மேலும் இன்னைக்கு தமிழ் சினிமாவில் தயாரிப்பாளர்கள் ரொம்ப குறைஞ்சிட்டாங்க. சினிமாவை முடிவு செய்யும் அதிகார மையமாக ஹீரோக்கள் மாறிட்டாங்க. மியூஸிக் டைரக்டர், பாடலாசிரியர்கள், கேமராமேன் என அனைத்து விஷயங்களையும் ஹீரோக்களே முடிவு செய்யறாங்க. கையில் கதையை வைச்சு



எம்.வி.பன்னீர்செல்வம்

கிட்டுப் படம் பண்ற டைரக்டர்களைவிட ஹீரோ டேட்ஸ்ஸை வைச்சுக்கிட்டு படம் பண்ற இயக்குநர்கள்தான் இங்கு அதிகம். தமிழ் சினிமாவுக்கு என்று இருக்கும் நெளிவு, சுளிவுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல்கூட நிறைய சிறந்த திரைப்படக் கல்லூரி மாணவர்கள் விளம்பரப் படங்கள், டாக்குமெண்டிரின்னு மாறிவிடுகிறார்கள்.''

''எத்தனையோ பிரம்மாண்டமான பட்ஜெட் போட்டு எடுக்கும் பெரிய ஹீரோ படமெல்லாம் பிளாப் ஆகுது. அதுக்காக எல்லாப் படங்களும் புது முகங்களை வைத்து எடுக்கவும் முடியாது. மார்க்கெட் வேல்யூவும் முக்கியம். பெரிய ஹீரோக்களே கதைக்கு முக்கியத்துவம் உள்ள,



மம்முட்டி சொன்ன ரகசியம்!

பிரம்மாண்டம் இல்லாத படங்களில் வருஷத்துக்கு இரண்டாவது நடிக்கணும். தமிழ் சினிமாவின் சக்ஸஸ் ரேட்டை அதிகப்படுத்த இதுதான் வழி.''


''மம்முட்டி எங்கிட்ட ஒருமுறை சொன்னார். 'ஒரு வருஷத்துல ஐந்து படம் நடிச்சா இரண்டு படம் மாஸ் ஆடியன்ஸிற்காக, இரண்டு படம் எனக்குப் பிடித்த திரைக்கதைக்காக, ஒரு படம் கமிட்மெண்ட்டுக்காக' என்றார். இதுபோல எத்தனை ஹீரோக்கள் தமிழ் இண்டஸ்டிரியில் இருக்காங்க? மத்த சினிமா இண்டஸ்டிரியில் இருக்கற மாதிரி கதாசிரியர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய சூழலும் உருவாகணும்.''

நீங்களே ஒரு படம் டைரக்ட் பண்ணலாமே?

''ஸ்கிரிப்ட் ரெடி. சரியான புரொடியூசர் கிடைச்சவுடனேயே ஷூட்டிங் தொடங்கிடலாம்.''

- ராகவ்குமார்

இரட்டிப்பு



* ஐந்து லட்சம் ரூபாய் கல்வி உதவித் தொகை - அறிவிக்கிறார் நிர்வாக அறங்காவலர் கல்கி ராஜேந்திரன்

இரண்டு இளம் இசைக் கலைஞர்கள் விருது பெறுகிறார்கள். அவர்களுள் ஒருவர் வாய்ப்பாட்டு, வயலின் இரண்டிலும் வல்லவர். மற்றவர் பக்கவாத்தியம் தனியிசை இரண்டிலும் வெளுத்துக் கட்டும் வயலின் கலைஞர். நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பவரோ கலாக்ஷேத்ராவின் இயக்குநர், சங்கீத நாடக அகாடமியின் தலைவரும் கூட. இறை வணக்கம் பாடும் இளம் பெண்கூட இசை, நடனம் என்று இரு கலைகளிலும் தேர்ந்தவர்...

இப்படி இரட்டை இரட்டையாகச் சிறப்புகள் நிரம்பிய அமரர் கல்கியின் 111வது பிறந்த தின விழாவில், ஆரம்ப உரையாக அமைந்தது இன்னொரு டூ இன் ஒன்: கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக் கட்டளையின் நிர்வாக அறங்காவலர் கல்கி ராஜேந்திரன் வழங்கிய வரவேற்பு பிளஸ் நன்றியுரை!

கல்கி விழா



இளம் இசைக் கலைஞர்கள் அம்ருதா முரளிக்கும் (குரலிசை) சாருலதா ராமானுஜத்துக்கும்(வயலின்) அமரர் கல்கி நினைவுப் பரிசும் விருதும் வழங்கி வாழ்த்த வந்தார் நிகழ்ச்சித் தலைவர் லீலா சாம்ஸன். 'இளம் நாட்டியக் கலைஞர்களுக்கும் ஏன் இந்த விருதைக் கொடுக்கக் கூடாது...?' என்ற கேள்வி அவர் மனத்துள் எழுந்திருக்கிறது. ''ஒரு நாட்டியக் கலைஞர் என்கிற அடிப்படையில் எனது ஆசை இது: ஆனால் ஒரு நிர்வாகி என்ற முறையில் அதற்கான காரணம் நன்கு புரிகிறது. இன்றையச் சூழலில், இசைக்கான விருது பெற தரமான கலைஞர்களைத் தேர்வு செய்து விட முடிகிறது... ஆனால்,

* அரங்கு போல் மனமும் நிரம்பி... - பார்வையாளர்கள்



ஆனந்தம்!



✱ மென்மையோடு வலிமை மிக்க கருத்துகள் - லீலா சாம்ஸன்

நாட்டியத்துக்கான விருதுக்குத் தகுந்த கலைஞர் கிட்டுவது கடினம்தான்'' என ஒப்புக் கொண்டார் தமது உரையில்.

கல்கி இதழைத் தொடங்கியபோது அமரர் கல்கி மூன்றாவது அட்டைப் படமாக வெளியிட்டது ருக்மிணி தேவியின் நாட்டியத் தோற்றத்தைத்தான். (முதல் இரண்டு - தேசியக் கொடி, ராஜாஜி) என்பதை வரவேற்புரையில் நினைவு கூர்ந்திருந்தார் கல்கி ராஜேந்திரன். அந்த நாட்டிய மேதையின் முக்கிய சீடரான லீலா சாம்ஸன் ஆற்றிய தலைமையுரை மென்மையான மொழியில் வலிமையான கருத்துகளைப் பதிவு செய்தது.

''சங்கீத நாடக அகாடமி, லலித் கலா அகாடமி, சாஹித்ய அகாடமி என்று நிர்வாக காரணங்களுக்காகப் பிரிக்கப் பட்டுள்ள கலைகள் உண்மையில் பிரிக்கப்பட முடியாதவை. நமது பாரம்பரியத்தில் இசையும் நடனமும், நாடகமும், ஓவியமும், எழுத்தும் ஒன்றிலிருந்து ஒன்று வளம் பெற்றுத்தான் வளர்ந்திருக்கின்றன. இதை மறந்துவிட்டு நாம் 'கலை வளர்க்க' முயற்சி செய்வதில் பொருளில்லை. அமரர் கல்கி, ராஜாஜி, டி.கே.சி. போன்றோர் இந்தப் பரஸ்பர வளமூட்டலின் முக்கியத்துவத்தை முழுமையாக உணர்ந்து, உணர்த்தவும் பாடுபட்டனர்'' என்று சுட்டிக் காட்டினார்.

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளையின் அறங்காவலர்களுள் ஒருவராக விளங்கிய அமரர் கல்கியின் மகள் ஆனந்தியிடம் தாம் பழகிய இனிய நினைவுகளையும் நெகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டார்.

''இதுவரை இந்த விருதைப் பெற்ற கலைஞர்கள் அனைவருமே இசையுலகில்

✱ விழாத் தலைவரின் இருபுறமும் விருதுபெற்ற இளம் இசைக் கலைஞர்கள்; இடது கோடியில் கல்கி ஆசிரியர் சீதா ரவி



தங்களுக்கென்று ஒரு ஸ்தானத்தை அடைந்துவிட்டனர். இது, இவ் விருது பாத்திரம் அறிந்து வழங்கப்பட்டு வருவதைக் காட்டுகிறது; அதற்குத் தனியொரு அந்தஸ்த்தை ஏற்படுத்தியிருக்கிறது'' என்றும் மகிழ்ந்து பாராட்டினார் லீலா சாம்ஸன். அவரது அந்த வார்த்தைக்கான செயல்முறை விளக்கம்போல் அமைந்தது, பரிசளிப்பு நிகழ்ச்சிக்குப் பிறகு நடைபெற்ற அம்ருதா முரளியின் கச்சேரி.



* இறைவணக்கமாக இனிய தமிழ்ப் பாடல் - மனஸ்வினி ராமச்சந்திரன்



* ஏற்புரையிலும் இசையின் இனிமை - சாருலதா ராமானுஜம்

சஹானா (வர்ணம்), ஆனந்தபைரவி, பந்துவராளி, தோடி, நாட்டைக்குறிஞ்சி, காம்போதி... என்று சொக்கத் தங்கமான ரக்தி ராகங்களில் அமைந்த அக்மார்க் பாடல்கள்! 'பாஹி ஸ்ரீ கிரிராஜ சுதே', 'ரகுவர நன்னு', 'வீணாபேரி' என மும்மூர்த்திகளின் கம்பீரமான கீர்த்தனைகள். 'காண கண் கோடி வேண்டும்', 'எக்காலத்திலும் மறவேனே' 'கலி தீர வந்தருள்' போன்று பழுத்த பாவத்துடன் துலங்கும் தமிழ்க் கீர்த்தனைகள். நெஞ்சை உருக்கும் ஆழ்வார் பாசுரங்கள், அமரர் கல்கியின் அழகான 'அலை ஓயாதோ, திரைகடல் தூங்காதோ' பாடல்... அம்ருதா முரளி கச்சேரியைத் திட்டமிட்ட விதமே அழகும் அந்தஸ்தும் கூட்டுவதாக இருந்தது.



* வசன கவிதையாக விருதுப் பத்திரம் - வாசிக்கிறார் மங்கையர் மலர் ஆசிரியர், அறங்காவலர் லக்ஷ்மி நடராஜன்

சஹானா வர்ணத்தில் இரண்டாம் காலம் பாடியது கச்சிதத்துக்குக் கட்டியம் கூறியது. கூடவே இழையோடிய சாருலதா ராமானுஜத்தின் வாசிப்பு வளம் சேர்த்துக் கொண்டே வந்தது. பளிச்சென்று மூன்றாவது பாட்டிலேயே (ரகுவர) நிரவலை ஆரம்பித்துவிட்டார் அம்ருதா. ஒரு கலைஞரின் முழுமையான திறனுக்கு நிரூபணம், இரண்டு காலங்களில் (speed) நன்கு நிர்வகித்துப் பாடப்படும் நிரவல் தான். (நிரவல் என்பது ஒரு பாடலின் முழுமையான பொருள் தரும் வரியை எடுத்துக் கொண்டு, அதன் பொருளும் இசையும் மேம்படும்படி பல விதமாக கற்பனை செய்து ஒரு தாளக்கட்டுக்குள் பாடுவது.) இரண்டு பாடல்களுக்கு முழுமையாய், நிரவல் செய்து அசத்தினார் அம்ருதா. கற்பனை ஸ்வரங்களோ அவசியத்துக்கேற்ப சிற்றலைகளாகவும்





குருமார்களின் ஆசிகள் - (இடமிருந்து வலம்) நினைவுப் பரிசு பெறும் புதுக்கோட்டை ராமநாதன் (சாருலதாவின் குரு), பி.எஸ்.நாராயணசாமி, மீரா கேதாரநாதன், டி.ருக்மிணி (அம்ருதா முரளியின் ஆசிரியர்கள்.)

பேரலைகளாகவும் பெருகின.

அம்ருதா முரளியின் பாட்டு அழகான அரக்குபட்டு என்றால், சாருலதாவின் வயலின் அதில் ஓடிய அசல் வைர ஊசி ஜரிகை. மினுமினுவென்று அளவாக ஜொலித்து, நிறத்தை அடிக்காமல், தூக்கிக் காட்டியது. பாடகரின் மனோதர்மத்துக்கு (கற்பனை) ஈடுகொடுப்பதில் சளைக்காமல், தமது ஆலாபனைகளில் (பந்துவராளி, தோடி, காம்போதி) தனித் தன்மையையும் நிறுவினார் சாருலதா.

ஜே.வைத்தியநாதன், குருபிரசாதின் வாசிப்பு, வைர ஊசி வஸ்திரத்தின் கெட்டிக் கரைகளாக வரம்பு கட்டி கும்மென்று நிறைந்தன. சங்கதிகளின் வேறுபாடுகளை உணர்த்தும் வகையிலும் சாஹித்ய பாவம், உச்சரிப்பின் கன நயங்களைப் போஷிக்கும் வகையிலும் ஜே.வைத்தியநாதன் கருத்துடன் மிருதங்கத்தில் முன்மொழிய, குருபிரசாத் கடத்தில்வழிமொழிந்தார். தனியாவர்த்தனத்தில் அளவான, சுவாரஸ்யமான கோர்வையை இயல்பாகக் கொடுத்து வாங்கி இருவரும் முடிக்க, 'திரைகடல் தூங்காதோ தோழி...' என்ற அமரர் கல்கியின் பாடலை எடுத்தார் அம்ருதா முரளி. முருகப் பெருமான் பேரிலான காதலை ஏக்கத்துடன் வெளிப்படுத்தும் அந்த இனிய, சோகம் இழையோடும் பாடலை உணர்ச்சிகரமாகப் பாடினார். உருக்கமான பாசுரங்கள் ராகமாலிகையில் தொடர்ந்தன. வாழிய செந்தமிழுடன் கச்சேரி நிறைந்தது - ரசிகர்களின் மனங்களும்கூடத்தான்!




இரட்டைச் சிறப்புகள் விரவி வந்த அந்த மாலை (செப்டெம்பர் 9) நிகழ்ச்சியின் இறுதியாக அமரர் கல்கியின் நூல் ஒன்றை அன்பளிப்பாகப் பெற்று இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் சென்னை, பாரதிய வித்யா பவனிலிருந்து வெளியேறினர் ரசிகர்கள்.

நிகழ்ச்சித் தொகுப்பு :
எஸ். சந்திரமௌலி

படங்கள் : **ஸ்ரீஹரி**

அமெரிக்கா மட்டும் எப்படி?



டி.பாலசுந்தரம்

எல். வைத்தியநாதன், சென்னை.

அதெப்படி அமெரிக்கா மட்டும் வலுவான நாடாக எப்போதும் காட்சி தருகிறது? 2008ல் அமெரிக்கா முழுக்க வேலைவாய்ப்பு இல்லை, வீடுகள் விலை போகவில்லை, பொருளாதார வீழ்ச்சி என்றார்கள். இந்தியாவில்கூட கேம்பஸ் இண்டர்வியூக்களே இல்லாமல் போனது அப்போது. இரண்டே ஆண்டுகளில் மீண்டும் அமெரிக்கப் பொருளாதாரம் மீண்டுவிட்டது. என் நண்பர்கள் எல்லோரும் மீண்டும் அமெரிக்கா போகத் தயாராகிக்கொண்டு இருக்கிறார்கள்.

உலகத்தின் மிகப்பெரிய பொருளாதாரமான அமெரிக்கா, பொருளாதார ரீதியாக ஒரு வலுவான நாடாகவே தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கின்றது (ஜிடிபி: 14.9 டிரில்லியன் டாலர்). 2009 வருட நிலையின்படி அதற்கு அடுத்த பொருளாதார ஜாம்பவானான சைனாவைவிட மூன்று மடங்கு அதிக நிலையில் உள்ளது அமெரிக்கா. தொழில்ரீதியாகவும், அனைத்துத் துறைகளிலும் தொழில்நுட்பம், ஆராய்ச்சி, கட்டுமானங்கள் என அனைத்திலும் அசுரனாய் வளர்ந்துவிட்டது. உலக நாடுகள் எல்லாம் அமெரிக்காவைச் சார்ந்தே தொழில் செய்யவேண்டிய நிர்ப்பந்தங்களும் இருப்பதால் சறுக்கல்களில் இருந்து மீள்வது கட்டாயமாகவும் சுலபமாகவும் இருக்கின்றது.



உங்கள் கேள்விகளை 'மூலதன மந்திரம்' என்று குறிப்பிட்டு அனுப்பலாம். kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில் KAFIN என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

ஈஸி போட்டி
சில்கி சாரி!

ஆகஸ்ட்
மாதத்துக்கான
பட்டுப் புடவைப் போட்டி முடிவு!



ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு' தொடரில் இடம்பெற்ற போட்டியில் பங்கேற்ற ஆயிரக் கணக்கான வாசகர்கள் அனுப்பி இருந்த விடைக் குவியல்களில் இருந்து சரியான விடை எழுதியவர்களைத் தேர்வு செய்து, பின்னர் குலுக்கல் முறையில் மூன்று வாசகர்களை அதிர்ஷ்டசாலிகளாக அறிவித்து அவர்களுக்குத் தலா ஒரு பட்டுப் புடவை வீதம் பரிசளிக்கப்படுகிறது.

கேள்விகள்: *1. கிருஷ்ணன் கொண்டு வந்தது என்ன?*

2. ஊர்வசியோடு பேசிய தமிழ் எழுத்தாளர் யார்?

3. ஊர்வசியின் செல்லப் பெயர் என்ன?

4. மழை சாட்சியாக மாறிய சம்பவம் நடந்த இடம் எது?

5. காமெடியன்களின் குலதெய்வம் யார்?

விடைகள்:

1.பைனாப்பிள் - சுக்கு காஃபி 2. சுந்தர ராமசாமி 3. பொடி 4. கேரளா 5. சார்லி சாப்ளின்

ஆகஸ்ட் மாதத்துக்கான பட்டுப் புடவைகள்
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

- 1. சிரா.சியாமளா, சேலம்
- 2. எல்.ராஜலஷ்மி, சென்னை
- 3. பவித்ரா நந்தகுமார், ஆரணி

பங்கேற்ற வாசகர்களுக்கு நன்றிகள்...!
பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்!



இரண்டு மூன்றாகி மூன்று இரண்டானது!



கௌரி

திருமணமாகி தஞ்சாவூருக்குச் சென்றிருந்த நான் தலை ஆடியை முன்னிட்டு கோயம்புத்தூரில் இருக்கும் என் தாய் வீட்டுக்கு வந்து இருந்தேன். அப்போது என் பிறந்த நாளும் வந்ததால் தஞ்சாவூரில் இருந்து என் கணவர் கோவைக்கு வந்தார். பிறந்த நாள் பரிசாக ரூ.8,000 மதிப்புள்ள ஒரு செல்ஃபோனும், ஒரு சுடிதாரும் வாங்கிக் கொடுத்தார். உறவினர்கள் சிலருடன் கேக் வெட்டி பிறந்த நாளைக் கொண்டாடினேன்.

அடுத்த நாள் காலை என் கணவர் கோவையிலிருந்து தஞ்சாவூருக்கு இரயிலில் போகும்போது ''என்னுடைய செல்ஃபோன் காணாமல் போய்விட்டது'' என ஃபோன் செய்தார். நான் மனத்தைத் தேற்றிக் கொண்டு ''செல்ஃபோன் தொலைந்தது பற்றிக் கவலைப் பட வேண்டாம். என்னிடம் உள்ள இரண்டு செல்ஃபோனில் ஒன்றை உங்களுக்குக் கொடுத்து விடுகிறேன்... புதியதாக நீங்கள் செல்ஃபோன் வாங்க வேண்டாம்'' என்று கூறிவிட்டேன். அடுத்த வாரம் அவர் கோவைக்கு வந்தபோது எனக்குப் பிறந்த நாள் பரிசாக வாங்கிக் கொடுத்திருந்த புதிய செல்ஃபோனை அவருக்குக் கொடுக்க, அவர் கொடுத்த அன்பளிப்பைத் திரும்ப வாங்கக் கூடாது என்று கூறி என்னுடைய புதிய செல்ஃபோனை வாங்க மறுத்துவிட்டார். அதன் பின் நான் உபயோகித்துக் கொண்டிருந்த பழைய செல்ஃபோனை அவருக்குக் கொடுத்தேன். தற்போது அவர் என்னுடைய பழைய செல்ஃபோனைத் தான் உபயோகித்து வருகிறார். ஓல்ட் ஈஸ் கோல்ட் என்றபடி!

- கௌரி சந்துரு,
கோவை

பிரசுரமாகும் அனுபவத்துக்கு ரூ.50 சன்மானம்.

வாசகர்களே! உங்க செல்ஃபோன் அனுபவத்தை எழுதுங்க... kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்ஃபோனில் KACON என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு உங்கள் அனுபவம், பெயர், ஊர் ஆகியவற்றோடு 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.


PROGRESS THROUGH QUALITY EDUCATION
SASTRA
SHANMUGHA
ARTS, SCIENCE, TECHNOLOGY & RESEARCH ACADEMY
வழங்கும்
ஸ்பெஷல் பக்கங்கள்
ஆயிரம் ஆண்டு அற்புதம்!

அணைந்திடா சுடர்விளக்கு!



ஆயிரம் ஆண்டு அற்புதம்!

சோழ மாமன்னன் இராஜராஜனின் உயிர், உடல், உணர்வு, உழைப்பு இவற்றின் ஒட்டுமொத்தக் கலவை தஞ்சைப் பெரிய கோயில். அவனின் ஆழ்மனக் கனவின் அணைந்திடாத மாபெரும் சுடர் விளக்கு. உலகளாவிய அதிசயத்தில் இன்றளவும் தன்னிகரற்ற பிரம்மாண்டம். பெரிய கோயில் கருவறையின் நெடிதுயர்ந்த ஸ்ரீவிமானம், அதனெதிரே எந்தத் திசையிலிருந்து நோக்கினாலும் வியப்பில் விழிகளை மலர வைக்கும் ஆயிரம் ஆண்டு அற்புதம் அது ஆம்! தஞ்சைப் பெரிய கோயில் கட்டி முடித்து, முதல் குடமுழுக்கு நிகழ்த்தப்பட்டு, இந்த ஆண்டோடு ஆயிரம் ஆண்டுகள் ஆகிறது...

மராட்டா கேட்!

தஞ்சைப் பெரிய கோயிலின் முதல் நுழைவாயில், சரபோஜி வாயில் எனப் படும் மராட்டா கேட். இதன் வழியாகத் தான் கோயிலுக்குச் செல்ல வேண்டும். இது மராட்டியர் கட்டட பாணியில், ஆர்ச் வடிவத்தில், இரண்டாம் சரபோஜி (கி.பி.1801) காலத்தில் கட்டப்பட்டது.

கேரளாந்தகன் வாயில்!

பெரிய கோயிலின் நுழைவாயில் கோபுரங்களில் உயரமானது. இராஜராஜன்





காலத்தில் முதல் வாயில்; தற்போது இரண்டாவது. தன் வீரத்தின் சாட்சியாக இதனைக் கட்டியுள்ளான் இராஜராஜன். நாலுக்கு நாலு சுற்றளவும் நாற்பதடி உயரமும் கொண்ட கல் தூண்கள், இரு புறங்களிலும் நிலைக்கால்களாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனை எப்படித் தூக்கி நிறுத்தியிருப்பார்கள்? ஆச்சர்யம். அத்தூண்கள் ஒவ்வொன்றும் ஒரே கல்லினால் ஆனவை என்பது மேலும் ஆச்சர்யம். கி.பி.988ல் கேரள மன்னன் பாஸ்கர ரவிவர்மனைப் போரில் வென்றதன் நினைவாகத் தனக்கு 'கேரளாந்தகன்' எனும் பட்டம் சூட்டிக் கொள்கிறான். வாயிலுக்கும் பெயராக அதனையே வைத்துவிட்டான்.

இராஜராஜன் திருவாயில்!

கோயிலின் இரண்டாம் கோபுரம் இராஜராஜன் திருவாயில். இதிலும் நாற்பதடி உயரமுள்ள ஒற்றைக்கல் நிலைக் கால்கள் இரண்டு உள்ளன. கோபுரத்தின் கிழக்குப் பகுதியில் பதினெட்டு அடி உயரமுள்ள ஒரே கல்லினால் ஆன இரண்டு துவார பாலகர் சிற்பங்கள் மிக அபூர்வமானது. அவற்றின் கீழ், பீடப் பகுதியில் சிவபுராணக் கதைகளின் சிற்பத் தொகுப்புகள்.

அழியாத கல்வெட்டுகள்!

எங்கு நோக்கினும் கல்வெட்டுகள். கோயில் உருவானது முதல் சோழர் குடிமக்கள் நடைமுறை நிர்வாகவியல் வரை கல்வெட்டுகளில் தகவல்களாகக் காணக் கிடைக்கின்றன. 'சிவதனத்துக் கங்காணியாராகிய யாம் செய்யும் உடையது யாதெனில் ஸ்ரீராஜராஜன்' எனத் தொடங்குகிறது சில கல்வெட்டுகள். தினசரி பூஜைக்கு எத்தனை வாழைப்பழம் என்பதிலிருந்து, பொலுசை காசு (கல்


வெட்டில் இப்படித்தான் உள்ளது. பொலுசை என்றால் வட்டி எனப் பொருள் படுமாம்) வசூலிப்பது வரை நிறைய நிறைய விஷயங்கள் கல்வெட்டில் பதிவாகியுள்ளன.

எங்குமே இல்லாத அஷ்ட திக்கு சன்னிதிகள்!

இராஜராஜன் திருவாயில் சுற்றுச்சுவர் கற்கோட்ட மதில்களில் எட்டு இடங்களில் எட்டுத் திசைத் தெய்வங்கள் எனப் படும் அஷ்ட திக்கு பாலர்களின் சன்னிதிகள் இராஜராஜன் காலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. கிழக்கில் இந்திரன் (சன்னிதி உள்ளது. இந்திரன் சிலை இல்லை), தென்கிழக்கில் அக்னி, தெற்கில் எமன், தென் மேற்கில் நிருதி, மேற்கில் வருணன், வட மேற்கில் வாயு, வடக்கில் குபேரன், வட கிழக்கில் ஈசானன் ஆகிய சன்னிதிகள் உள்ளன. கி.பி.1311ல் மாலிக்காபூர் படையெடுப்பின் விளைவாக இந்திரன் இல்லாமலும், வருணன், அக்னி, ஈசானன் ஆகிய திருவுருவச் சிலைகள் சிதைந்தும் காணப் படுகிறது.


வரம் தரும் வராஹி அம்மன்!

மகாநந்தி மண்டபத்திலிருந்து தெற்கே திருமாளிகைச் சுற்று அருகே, வராஹி அம்மன் சன்னிதி. இது இராஜராஜன் காலத்தில் அமைந்தது எனச் சொல்லப்படுகிறது. இந்தியாவிலேயே காசியிலும், தஞ்சைப் பெரிய கோயிலிலும் மட்டுமே இந்தச் சன்னிதி உள்ளதெனக் கூறப்படுகிறது.



யார் வைத்த நந்தி?

பக்தர்கள் தற்போது தரிசிக்கும் மகாநந்தி, இராஜராஜன் காலத்தியது அல்ல. அந்த நந்தி தற்போது தென் பகுதி திருமாளிகைச் சுற்றில் 'ஹாய்'ஆக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது. பதினாறு கால் மண்டபத்தில் மாபெரும் உருவமாக மகாநந்தி அமர்ந்துள்ளது. துல்லியமாகப் பத்தொன்பதரை அடி நீளமும், எட்டே கால் அடி அகலமும், பன்னிரெண்டடி உயரமும் உடைய மகாநந்தி ஒரே கல்லில் செதுக்கப்பட்டது என்பது தனிச்சிறப்பு. இதனை கி.பி.1550களில் நாயக்க மன்னர்களான செவ்வப்ப நாயக்கரும், அவர் மகன் அச்சுதப்ப நாயக்கரும் இணைந்து எழுப்பியுள்ளனர்.



நிழல் விழும் நிஜம்!

கருவறையின் நெடிதுயர்ந்த ஸ்ரீவிமானத்தின் நிழல், கீழே படர்வதில்லை என்பது வதந்தி. அதன் நிழல் கீழே தரை மீது விழுகிறது என்பதே நிஜம். (காண்க: படம்). தட்சிணாயன மாதங்களில் காலையில் வடமேற்கிலும், மாலையில் தென் கிழக்கிலும், உத்தராயன மாதங்களில் காலையில் தென் மேற்கிலும், மாலையில் வடகிழக்கிலும் நிழல் விழும்.

பூவுலகின் புராதனச் சின்னம்!

யுனெஸ்கோ தஞ்சைப் பெரிய கோயிலை உலகப் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாக 1987ல் அறிவித்துள்ளது. அதன் இலச்சினை இராஜராஜன் திருவாயிலில் நிறுவப்பட்டுள்ளது.

பெரிய கோயிலின் முதல் குடமுழுக்கு!

கட்டுமானக் கற்கோயில் அமைப்புகளில், இந்தியாவிலேயே மிகப்பெரியதானது தஞ்சைப் பெரிய கோயில்.

இராஜராஜன் கி.பி.985ல் அரியணை ஏறுகிறார். அவரது ஆட்சியில் கி.பி.1003ல் துவங்கிய கோயில் கட்டுமானம், அரியணை ஏறிய இருபத்தைந்தாம் ஆட்சியாண்டு 275ம் நாளில் நிறைவு பெற்றதாகக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. ''யாண்டு இருபத்தைஞ்சாவது நாள் இருநூற்றெழுபத்தைஞ்சினால் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீ இராஜ ராஜேச்சுரமுடையார் ஸ்ரீ விமானத்து செம்பின் ஸ்தூபித்தறியில் வைக்க குடுத்த செப்புக் குடம் ஒன்று...'' என நீள்கிறது அந்தக் கல்வெட்டு. இதன் அடிப்படையில் கி.பி.1010 ஏப்ரல் 22ம் நாள், தஞ்சைப் பெரிய கோயிலுக்கு மாமன்னன் இராஜராஜனால் முதல் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

செய்தியும், சித்திரங்களும்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

பெருமையான

ஆயிரம் ஆண்டுகளின் சுவடுகளைத் தாங்கி நிற்கும் தஞ்சைப் பெரிய கோயிலைப் போற்றும் வண்ணம், அரசு எடுக்கும் விழாவில் ஆயிரம் நடன மணிகள் ஒன்று சேர்ந்து, நாட்டியக் கலைஞர் பத்மா சுப்ரமணியம் தலைமையில் நடனம் புரிய இருக்கிறார்கள். நடனத்தில் பங்கேற்க இருக்கும் ஒரு சிலரிடம் பேசினோம்...

மணிமேகலை ஷர்மா(பரதாஷ்ரமம் நாட்டியப் பள்ளி இயக்குநர்): என்னோடு சேர்ந்து என் மாணவிகள் பதினேழு பேர் இந்த நடன நிகழ்ச்சியில் பங்குகொள்ளப் போகிறார்கள். இது பெரிய பாக்கியம்! பத்மாசுப்ரமணியம், ஒரு வொர்க் ஷாப் வெச்சு, அதுல இந்த நடன நிகழ்ச்சிக்காக அவங்க தயார் பண்ணின டான்ஸ் டி.வி.டி.யை எங்களுக்குக் கொடுத்தாங்க. உலகத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் நடன நிகழ்ச்சியில் கலந்துக்கப் போறவங்க அதைப் பார்த்து தான் பயிற்சி எடுத்துக்கிட்டு இருக்கோம்.

அலங்க்ரித்தா: என் குருவோடு (மணிமேகலை ஷர்மா) சேர்ந்து ஆடப் போறோம்ங்கறதே பெரிய சந்தோஷம். அதேபோல 1,000 பேர் ஒரே இடத்துல சேர்ந்து ஆடறதுன்னா சும்மாவா! அந்த வைப்ரேஷனே மிகப் பெரிய எனர்ஜியைக் கொடுக்கப் போகுது பாருங்க!

ப்ரீத்தி மற்றும் பவித்ரா: இந்தப் பிரம்மாண்ட நடனப் பயிற்சிக்காகத் தினமும் ரெண்டு மணி நேரம் ஒதுக்கிடறோம்.



✱ ப்ரீத்தி, பவித்ரா

வாய்ப்பு!

உலகத்துல இந்த மாதிரியான நடன நிகழ்ச்சி நடக்கப் போறது இதுதான் முதல் முறை. இது மிகப் பெரிய சாதனை. அதில் என் பங்கும் இருக்குன்னு நினைக்கையில சந்தோஷம்தான்.

* மணிமேகலை ஷர்மா



பாக்யஸ்ரீ சதீஷ் (ந்ருத்யக்ஷேத்ரா நடனப் பள்ளி ஸ்தாபகர்): என் மாணவிகளோடு சேர்ந்து தஞ்சைப் பெரிய கோயிலில் நடனம் ஆடப் போறேங்கறதே ஒரு பெரிய வரம். என் குரு பத்மாசுப்ரமணியம் கொடுத்த வாய்ப்பாலும், இறைவனின் ஆசியாலும் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் இது. பழைய நடனத் தோழிகளைச் சந்திக்கவும் இதைவிட ஒரு நல்ல வாய்ப்பு எங்கே கிடைக்கும்?! நம் நாட்டின் பெருமை மிகு பொக்கிஷமான பரதக் கலையையும் பாரம்பரியத்தையும் உலகினருக்கு ஆடிக் காட்டப் போகும் அந்தக் கலை திருவிழாவுக்காக நான் ஆவலோடு காத்திருக்கேன்.

கீர்த்தனா சத்ய நாராயணன் (பாக்யஸ்ரீ சதீஷ் மாணவி): வரலாற்றுப் புகழ் வாய்ந்த கோயிலில், அதுவும் அதன் ஆயிரமாவது ஆண்டில் அங்க நான் ஆடுவேன்னு நினைச்சுக்கூடப் பார்க்கலை. ஆயிரம் பேர் ஒன்று கூடி ஒரே மாதிரி நடன அபிநயத்தை இறைவன் முன்னால் அரங்கேற்றப் போகிறோம் என்பதே நம்பமுடியாத ஆனால் நம்பியாக வேண்டிய ஆச்சர்யம்தான்.

ஷ்ருதி ஸ்ரீனிவாசன்: பள்ளியில் இப்போ பரிட்சை நடந்துகிட்டு இருக்கு. அதனால, கொஞ்ச நேரம் குருகிட்டேயும், மீதிநேரம் டி.வி.டி.யைப் பார்த்தும் இந்த நாட்டிய நிகழ்ச்சிக்காகப் பயிற்சி எடுத்துக்கிட்டு இருக்கேன்.

- நளினி சம்பத்குமார்

இதோ பெருவுடையார்!




பெரிய கோயிலின் கருவறையின் முன்பாக மகாமண்டபம். அதன் கிழக்கு வாயிலின் வலது புறம் பதினைந்தடி உயரம் கொண்ட துவார பாலகர் சிலை. இவரது காலடியில் உள்ள பாம்பு, ஒரு யானையை விழுங்கும் காட்சி. பாம்பின் வாயில் உள்ள யானையை நிஜ யானை உருவத்துக்குக் கற்பனை செய்யுங்கள். அப்போது பாம்பு எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும்? அதன் பாதத்திலிருந்து எழும்பி நிற்கும் துவார பாலகர் எவ்வளவு உயரத்துக்கு எழும்பி நிற்க வேண்டும்? விண்ணளவுக்கு உயர்ந்து நிற்பார். துவார பாலகர் தம் சுட்டு விரல் உயர்த்தித் தம் ஒரு கரத்தை நீட்டி உள்ளே இறைவன் (பெருவுடையார்) இருக்கும் திசை நோக்கிக் காட்டுகிறார். கருவறையில் உறைந்திருக்கும் இறைவன் மிகப் பெரியவர் என்பதனை இந்தக் கற்சிற்பம் எல்லோர்க்கும் உணர்த்துகிறது.

பெருவுடையாரின் திருமேனி பரவசம் தர வல்லது. கீழ் நோக்கிய தாமரைப் பீடம் ஐம்பத்தைந்தடி சுற்றளவு, இரண்டு அடி உயரம் கொண்டது. மேல் நோக்கிய தாமரைப் பீடம் ஐம்பத்தைந்தடி சுற்றளவு, மூன்றடி உயரம் கொண்டது. நீர்த்தூம்பு ஆறடி நீளம் கொண்டது. ஒரே கல்லினால் ஆனது. இவற்றின் மீதான லிங்க பாணம் பதிமூன்றடி உயரம் கொண்டது. பெருவுடையார் திருமேனி மிகப் பிரம்மாண்டம், ஸ்ரீ விமானத்தின் மிகப் பிரம்மாண்டத்தைப் போல.

தட்சிணமேரு எனப்படும் ஸ்ரீ விமானம், தரையிலிருந்து 216 அடி உயரமுடையது.பீடம் முதல் ஸ்தூபித்தளம் (கலசம்) வரை கருங்கற்கள் கொண்டு கட்டப்பெற்றது. Inter locking எனப்படும் முறையில், அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த கருங்கற்களை ஒன்றோடு ஒன்றாக இணைத்து இணைத்து நுணுக்கமாகக் கட்டப்பட்டுள்ள வியத்தகு தொழில் நுட்பத்தை இதில் பார்க்கலாம். நெடிதுயர்ந்த





பாலசுப்ரமணியன்

இந்த விமானக் கட்டுமானம் முழுவதும் உட்கூடு பெற்றது. வாய் அகலமான கூம்பு போன்ற குவளையைத் தலைகீழாகக் கவிழ்த்தது போன்ற அமைப்புடையது.

கருவறையின் நடுவே பெரிய லிங்கத் திருமேனி. இதன் உள் அறைக்கு நான்கு திசைகளிலும் பதினோரு அடி அகலக் கருங்கல் சுவர்கள். இச்சுவருக்கு வெளிப்புறம் ஆறடி அகலத்தில் நான்கு திசைகளிலும் சுற்று அறை. இந்த அறையின் நான்கு திசைகளின் புறச்சுவரும் உட்சுவர் போன்றே மிகப் பெரியது. இது பதிமூன்றடி அகலம் உடையது. இந்தச் சுற்று அறைக்கு விமானத்தின் வெளிப்பகுதியில் தெற்கு, மேற்கு, வடக்கு திசைகளில் வாயில்கள். இந்தச் சுற்று அறைக்கு மேலாக மற்றுமொரு (என்ன... தலையைச் சுத்துகிறதா?) சுற்று அறை உள்ளது.

கீழ்ச்சுற்று அறைச் சுவர்களில் சோழர்கால, நாயக்கர் கால ஓவியங்கள். மேல் சுற்று அறைச் சுவர்களில் சிவபெருமானின் நாட்டிய கரணச் சிற்பங்கள் 108ல் 80 மட்டுமே பூர்த்தியாகிக் காட்சியளிக்கின்றன. மற்றவை செதுக்கப் பெறவில்லை. (மேற்கண்ட இந்தப் பகுதிகள் பாதுகாப்பு காரணங்கள் கருதி, பார்வையிட எல்லோருக்கும் அனுமதி இல்லை.)

உட்புறச் சுவரும், வெளிப்புறச் சுவரும் இணைந்து முப்பது அடி அகலம் கொண்ட நாற்புறச் சதுரம் கிடைக்கிறது. இந்தப் பகுதியே உயர்ந்த உட்கூடுடைய விமானத்தைத் தாங்கி நிற்கிறது. இக்கட்டுமான நுட்பம் வியக்கத்தக்க ஒன்றாகும்.

நான்கு பட்டை வடிவில் கூம்பிச் செல்கிறது விமானம். மேல் நிலையில் 26 x 26 அடி சதுரத் தளமாக அது அமைகிறது. இதன் மேல் சிகரத்தின் கழுத்துப் பகுதி. அதன் மேல் அரைப் பந்து வடிவச் சிகரம். அதன் உச்சியில் 12 அடி உயரம் கொண்ட செப்புக் கலசம். ஸ்ரீ விமானத்தின் உச்சி சோழர் கால கலை பண்பாட்டு வாழ்வியலின் உச்சம்!'' எனக் கூறுகிறார் வரலாற்று ஆய்வாளர் குடவாயில் பாலசுப்ரமணியன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



சரசுவதி மகால் நூலகமும்... இரண்டாம் சரபோஜியும்...!

இராஜராஜன் காலத்தில் ஓலைச் சுவடிகள் இருந்திருக்கலாம். அவற்றை 'திருக்கைகோட்டி' எனும் கோயில் நூலகத்தில் பாதுகாத்திருக்கலாம். ஐம்பது ஓலைச்சுவடிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு சோழர் கால ஓலைச்சுவடிகள் எனப் பட்டியலிட்டுள்ளார் தமிழ்த் தாத்தா உ.வே.சா.வின் நேரடி மாணவரான வரகூர் வேணுகோபாலன். அந்த ஓலைச்சுவடிகள் தற்போதும் சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 1600களில் இரகுநாத நாயக்கர் மகன் காலத்தில் 'சரஸ்வதி பண்டாரம்' என்கிற பெயரில் நூலகம் இருந்துள்ளது. அப்போது எல்லாமே ஓலைச்சுவடிகள் தான்.

சரபோஜி மன்னர் காலத்தில், சரசுவதி மகால் நூலகமாக மாறியுள்ளது. இரண்டாம் சரபோஜி மன்னர், நூலகத்தை விரிவுபடுத்தியுள்ளார். காரணம், அவர் காலத்தில் காகிதமும், அச்சும் உருவாயின. 1803ல் அவரே நவ வித்யா எந்திரசாலா என்கிற அச்சகம் தொடங்கினார். மேலும் அவர் பன்னிரெண்டு மொழிகளில் புலமை பெற்றிருந்ததனால், பன்மொழி நூல்களும் சரசுவதி மகால் நூலகத்துக்கு வரவழைக்கப்பட்டன.

''ராயல் ஏசியாட்டிக் சொஸைட்டி என்கிற அமைப்பில் கௌரவ உறுப்பினராக நியமிக்கப்பட்டார் இரண்டாம் சரபோஜி. அதனால் நமக்குப் பன்மொழி புத்தகங்களும் வந்து குவியத் தொடங்கின. இதற்கு 'தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம்' எனப் பெயரிட்டார். இங்கு, இப்போதும் ஓலைச்சுவடிகள் படியெடுக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பழங்கால ஓலைச்சுவடிகள் மைக்ரோ ஃபிலிம் முறையில் நகல் எடுக்கப்படுகிறது. ஓலைச்சவடிகள் ஐம்பதாயிரம், புத்தகங்கள் அறுபதாயிரம், மராத்தியர் காலச் செப்பேடுகள் ஐந்தும் உள்ளன!'' என்கிறார் சரசுவதி மகால் நூலகப் பாதுகாப்பாளரும் நூலகருமான முனைவர் ப.பெருமாள்.

- இந்திரா மணாளன்

தஞ்சை தளிக் குளம்



கோயில் கட்டினால் அதன் பக்கத்தில் குளம் ஒன்று இருக்க வேண்டும். இருக்கும். பெரிய கோயிலைக் கட்டும்போது மண் எடுத்த இடம்தான் குளம் ஆக மாறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தச் சிவகங்கைக் குளம், இராஜ ராஜன் காலத்துக்கும் முற்பட்டது என்றும் சொல்கிறார்கள். இக்குளத்தை அப்பர் சுவாமிகள் 'தஞ்சை தளிக் குளம்' எனக் குறிப்பிட்டுப் பாடியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இல்லை இல்லை இது இராஜராஜன் காலத்தியதுதான் என்றும் ஒரு தகவல். அதை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது குளத்தின் கரைச் சுவர்கள்.

ஐந்து ஏக்கர் பரப்பளவில் குளம் அமைந்துள்ளது. குளத்தின் உள்ளே தென் பாகத்தில் சிவன் கோயில் ஒன்று. இதுதான் தளிக்குளத்தார் சன்னிதி. சன்னிதியில் லிங்கம், அதன் எதிரே நந்தி, பலி பீடம், வேப்பமரம், சன்னிதிப் பின்புறம் புன்னை மரம் எனக் காட்சியளிக்கிறது. இதற்குச் சென்று வர ரோப் கார் வசதி இயங்கி வருகிறது. சிவகங்கைக் குளத்தில் படகுச் சவாரி வசதியும் உண்டு. மேலே ரோப் கார், தண்ணீரில் படகு. அருகே சிவன் கோயில்.

சிவகங்கைப் பூங்கா உள்ளேதான் சிவகங்கைக் குளம், நீச்சல் குளம் ஆகியன அமைந்துள்ளன. இவற்றில் மொத்தப் பரப்பளவு பதினேழு ஏக்கர். சிவகங்கைக் குளத்தில் தற்போது பதினோரு அடி ஆழத்துக்குத் தண்ணீர் தேங்கியுள்ளது. குளத்தின் சுவர்கள் இதற்கும் மேலாக முப்பதடி உயரம் கொண்ட கோட்டைச் சுவர்களைப் போல கட்டப்பட்டுள்ளன. நான்கைந்து வருடங்களுக்கு முன்பாக, குளத்து நீர் சுத்தமாக வெளியேற்றப்பட்டுத் தூர் வாரப்பட்டது. பெரிய கோயிலின் உட்பகுதிகளில் மழைக் காலங்களில் கொட்டுகின்ற மழை நீர் முழுவதுமாக, சிவகங்கைக் குளத்துக்கு வந்து சேருகின்ற வகையில் வடிகால் வசதிகள் அமைத்துக் கட்டியுள்ளார் இராஜராஜன்.

- சரவணன் திரு

ஏன் எரித்தான் தஞ்சையை?

ஒரு காலத்தில் தஞ்சை நகரமே எரியூட்டப்பட்டிருக்கிறது. ஆனால், எரியூட்டப்பட்டபோது தஞ்சையின் குடியிருப்புகளும், பொதுமக்களும் சற்று குறைந்தே இருந்திருக்கின்றன. காரணம், கங்கை கொண்ட சோழபுரத்துக்கு இடப்பெயர்ச்சி ஆகி இருந்துள்ளனர். தஞ்சை நகரம் ஏன் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது?



* ஸ்ரீராமுலு

இராஜராஜனின் முப்பாட்டனார் முதலாம் பராந்தகச் சோழன், மதுரையும் ஈழமும் கொண்ட கோபரகேசரி பட்டம் சூட்டியவன். கி.பி.900 ஆண்டுகளில் முதன்முதலில் மதுரையை வென்று எரித்துவிடுகிறான். பின்னர் முதலாம் பராந்தகனின் பேரன் சுந்தர சோழன் (இராஜராஜனின் தந்தை) மறுபடியும் மதுரையை வெல்கிறான்.


மேற்கண்ட இரண்டு நிகழ்ச்சிகளினால், சோழ மன்னர்கள் மீதும் குறிப்பாக தஞ்சை நகர் மீதும் மிகவும் கோபம் கொள்கிறார்கள் பாண்டிய வம்சத்து மன்னர்கள். இதற்குப் பழி தீர்க்க வேண்டும் என்றே, பல சந்ததிகளுக்குப் பின்னரும் அந்தக் கோபம் தொடர்கிறது. சுமார் நானூறு வருடங்களுக்குப் பின்னர் சோழர்கள் வலிமை குன்றிப் போகிறார்கள். மிகச் சரியாகப் பழி தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே, மதுரையை ஆண்டு வந்த மாறவர்ம சுந்தர பாண்டியன் தஞ்சை மீது படையெடுத்து வருகிறான். கி.பி.1275ல் மூன்றாம் இராஜராஜனைப் போரில் தோற்கடித்து, தஞ்சை நகரைத் தீ வைத்துக் கொளுத்திவிட்டு மதுரைக்குத் திரும்புகிறான்!''

தகவல் உதவி:
பேராசிரியர் ஸ்ரீராமுலு.

- இருள்நீக்கியான்

மீண்டும் வருமா சிலைகள்?





❖ வெ.இறையன்பு

பெரிய கோயிலின் உள்ளிருந்த இராஜ ராஜன் அவனின் பட்டத்தரசி உலக மாதேவி இருவரின் செப்புச் சிலைகள், குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் சாராபாய் ஃபவுண்டேஷன் மியூஸியத்தில் உள்ளன. தமிழகத்தின் சிலைகள் எப்படி அங்கு சென்றன? பதில் இல்லை.

பெரிய கோயிலின் ஆயிரம் ஆண்டு நிறைவினையொட்டி, அச் சிலைகளை தஞ்சைக்குக் கொண்டு வர முயற்சித்து வருகிறது தமிழக அரசு. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுலா கலை பண்பாட்டுத் துறைச் செயலாளர் வெ.இறையன்பு ஐ.ஏ.எஸ், முன்னாள் தொல்பொருள் துறை இயக்குநர் இரா.நாகசாமி, வரலாற்று ஆய்வாளர் குடவாயில் பாலசுப்ரமணியன்... ஆகியோர் கொண்ட குழுவினர் குஜராத் சென்று குறிப்பிட்ட சிலைகளைப் பார்வையிட்டுள்ளனர்.

பின்னர், இது குறித்தான ஆவணங்களை குஜராத் முதல்வர் நரேந்திரமோடியிடம் நேரில் சந்தித்து எடுத்துக்கூறி மனு அளித்துள்ளனர். அவரும் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியுள்ளார். எனவே, சாராபாய் ஃபவுண்டேஷன் மியூஸியத்திலிருந்து, பெரிய கோயிலின் ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவுக்குள் இரண்டு செப்புச் சிலைகளும் தஞ்சைக்கு வந்து சேரலாம் என நம்பப்படுகிறது.

- திருநாவு

✱ வெ.ஜீவக்குமார்



இதுவா இராஜராஜன் சமாதி?



கும்பகோணம் அருகே உடையாளூர் கிராமத்தில் தனி நபர் வசமிருக்கும் கொல்லையில் தரை யோடு தரையாக உள்ளது. இராஜராஜன் சமாதி. அந்த இடத்தில் பெரிய சிவலிங் கம் ஒன்று சாய்வாக மண்ணுக்குள் பாதி யும் வெளியே மீதியுமாகப் பதிந்துள்ளது.

மாமன்னன் இராஜராஜன் சமாதிக்குப் போகும் வழி என அம்புக்குறியிட்டு, சாலையோரத்தில் போர்டு வைத்துள்ளனர் காஞ்சிபுரம் சோழ வம்சத்தினர்.


''வெயிலுக்குப் போடப்படும் கோடைப் பந்தலின் கீழே, மண் தரையில் மண்ணுக் குக் கீழே... கீழே என இராஜராஜன் துயில் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ''தமிழர்களின் பெருமிதங்களில் மிக முக்கியமான ஒன்று தஞ்சைப் பெரிய கோயில். மிகச் சிறந்த பொறியியல் அறிவின் சிகரம் அது. இவற்றோடு மட்டுமல் லாது, சிறப்பான முறையில் ஆட்சி செய்துள்ளான் இராஜ ராஜன். அவற்றுக்குக் கல் வெட்டுகளே சாட்சியங்கள் ஆகின்றன. இத்தனை பெரு மைகளுக்கும் உரித்தான தமிழ்ப்பேரரசன் ஒருவனின் சமாதி, சரிவர கவனம் கொள் ளாமல் இருப்பது மிகுந்த வேதனைக்குரி யது. இதில் சர்ச்சை வேறு. இராஜராஜன் சமாதி இதுதான் என்றும் இல்லையென் றும் இருவேறு கருத்துகள் உலவுகின்றன. இந்நிலையில், அதிகபட்சமாக அகழ் வாராய்ச்சி செய்தாவது சர்ச்சைக்கு முற் றுப் புள்ளி வைக்க வேண்டியது மத்திய-மாநில அரசுகளின் கடமை!'' எனக் கூறுகிறார் வழக்கறிஞர் வெ.ஜீவக் குமார்

-சரவணன் திரு



செழிப்பான வாழ்க்கைக்கு சிறப்பான முதலீடு

திண்டிவனம் வேல்மலை முருகன் நகர் (Phase - III)



- புகழ்பெற்ற வேல்மலை முருகன் கோயில் அடிவாரத்தில்
- திண்டிவனத்திற்கு முன் NH-45 லிருந்து 4 கி.மீ.
- சுவையான குடிநீர் - சுவைத்துப் பாருங்கள்
- செழுமையான செம்மண் பூமி
- Gated community
- மனையைப் பார்வையிட இலவச வாகனவசதி (ஞாயிற்றுக்கிழமையும் உண்டு)

Contact No:
9884334650
9600076134
Off-32976297
40507777

1200 sq.ft
Rs.85,000/- மட்டுமே
பத்திரப்பதிவு இலவசம்



Watch our Programme on Makkal Tv & Jaya Plus on Friday at 1.30 p.m.

SPOT BOOKING OFFER: Pay Just Rs.20,000/- and Get a Branded LCD TV

Auditor's REALKINGDOM Foundations Pvt. Ltd.

No.76, Baskar Colony, Near Saligramam Bus Stand, Virugambakkam,
Chennai - 600 092. www.realkingdom.in, real.kingdom@yahoo.in

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.